
தமிழக
குறுநில
வேந்தர்கள்
சேதுசமஸ்தான மகாவித்வான்
ரா. இராகவய்யங்கார்

# தமிழகக் குறுநில வேந்தர்கள்

ரா. இராகவையங்கார்

பாரதி பதிப்பகம்
08, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்
சென்னை - 600 017.
த.பெ. எண்: 4984 : : போன்: 4340205

# நூலின் உள்ளே...


| | பக்க எண் |
|---|---|
| அறிமுகம் | 5 |
| முன்னுரை | 6 |
| 1. வேளிர் | 11 |
| 2. கோசர் | 50 |
| 3. பல்லவர் | 70 |
| 4. சேதுநாடு | 91 |
| 5. சேதுபதிகள் | 110 |


விலை: ரூ. 16-00


□ THAMIZHAGAK KURUNILA VENDHARGAL by Ra. IRAGAVAIYYANGAR □ First Edition: December 1994 □ Price Rs. 16-00 □ Published by BHARATHI PATHIPPAGAM, 108, Usman Road, T. Nagar, Madras - 600 017. Phone: 4340205 □ Printed at Kadalosai Achagam, Kodambakkam, Madras-24. □

# மகாவித்துவான் படைப்புகள்

## பதிப்பித்த நூல்கள் (15)

**(அ) சங்க நூல்கள் (4)**

| | |
|---|---|
| அகநானூறு | 1901, 1921 |
| குறுந்தொகை விளக்கம் | 1946, 1993 |
| பெரும்பாணாற்றுப்படை | 1949 |
| பட்டினப்பாலை | 1951 |

**(ஆ) பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் (4)**

| | | |
|---|---|---|
| இனியவை நாற்பது | — | பழையவுரையுடன் |
| ஐந்திணை ஐம்பது | — | ,, |
| திணைமாலை நூற்றைம்பது | | ,, |
| நான்மணிக்கடிகை | — | ,, |

**(இ) இலக்கண நூல்கள் (3)**

| | |
|---|---|
| நேமிநாதம்-மூலமும் உரையும் | 1903 |
| பன்னிரு பாட்டியல் | |
| தொல்காப்பியம் : செய்யுளியல் நச்சினார்க்கினியருரை | 1917 |

**(ஈ) பிற நூல்கள் (4)**

கனா நூல்
திருநூற்றந்தாதி
புலவராற்றுப்படை
முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்

**(உ)** (i) ஆராய்ச்சிக் கட்டுரைகள் 1987

| | | | |
|---|---|---|---|
| (ii) | இனிய இலக்கியங்கள் | 1992 | பாரதி பதிப்பகம் |
| (iii) | கம்பர் | 1994 | ,, |
| (iv) | செந்தமிழ் இன்பம் | 1994 | ,, |

# ஆசிரியர் இயற்றிய நூல்கள் (22)

(அ) செய்யுள் நூல்கள் (5)

| | |
|---|---|
| புவி எழுபது | 1927 |
| தொழிற் சிறப்பு | 1932 |
| திருவடிமாலை | 1933 |
| நன்றியில் திரு பாரி கார்த்தை | 1937 |

(ஆ) உரைநடை நூல்கள் (9)

| | |
|---|---|
| சேதுநாடும் தமிழும் | 1924 |
| வஞ்சி மாநகர் | 1932 |
| நல்லிசைப் புலமை மெல்லியலார்கள் | 1933 |
| அண்டகோள மெய்ப்பொருள் | 1934 |
| தமிழ் வரலாறு | 1941 |
| தித்தன் | 1949 |
| கோசர் | 1951 |
| இராசராசேசுவர சேதுபதி ஒருதுறைக் கோவை | 1984 |
| ஆத்திசூடி உரை | 1985 |

(இ) மொழிபெயர்ப்பு (1)

| | |
|---|---|
| அபிஜ்ஞான சாகுந்தலம் | 1938 |

(ஈ) அச்சிடப்படாத நூல்கள் (7)

பகவத்கீதைத் தாழிசை
பாரத நீதிவெண்பா
காவல் தலைமை
கடவுள் மாலை
திருப்புல்லையமகவந்தாதி—உரையுடன்
திருவேங்கட மாயோன் மாலை
பல்லட சதகம்

# அறிமுகம்

என் அருமைத் தந்தையின் தந்தை மகாவித்துவான் ரா. இராகவய்யங்கார் அவர்களின் படைப்புக்களைச் சிறு சிறுநூல்களாக வெளியிடுகிறோம். இத்தொகுதியில் ''தமிழகக் குறுநில வேந்தர்'' என்ற தலைப்பில் சில கட்டுரைகள் வெளிவருகின்றன. மகாவித்துவான் தம் சிறந்த தென்மொழி, வடமொழித் தேர்ச்சியால் யாவரும் காணாத புதிய உண்மைகளை வேளிர், கோசர், பல்லவர் வரலாற்றின் மூலம் வெளியிட்டுள்ளார். நாம் இவற்றை அப்படியே ஒத்துக்கொள்ள வேண்டுமென்பதில்லை. நமக்கென சுதந்திரமான பாதையை வகுத்துக் கொள்வதில் இவருக்குள்ள ஆர்வத்தை நாம் போற்ற வேண்டும். வேளிரும், கோசரும் மிகத்தொன்மையான தமிழ்க் குடிகள். காஷ்மீரத்திலிருந்து வந்தவர்கள். இதுபோலவே பல்லவர் தம்மைத் துரோணர் வழி வந்தவர் எனக் கூறிக் கொண்டனர். துரோணர்க்கும், க்ருதாசி என்ற நீரர மகட்கும் பிறந்தவன் அசுவத்தாமன் என்றும், அசுவத்தாமனுக்கும், மதனி என்ற அர மகட்கும் தோன்றியவன் பல்லவன் என்றும், போத்து என்பது பல்லவர்க்குரிய இடபக் கொடியைக் குறிக்கும் என்றும், தொண்டை என்பது குடிப்பெயர் என்றும், தொண்டையன் பழமையான பெயர் என்றும், பல்லவ குலம் கடல்கெழு செல்வி வழியாக வந்த துரோணன் மரபென்றும் தக்க ஆதாரங்கள் காட்டி விளக்கியுள்ளார். சேது நாட்டின் தொன்மையையும், சேதுபதிகள் தமிழ் வளர்த்த பெருமையையும் இரு கட்டுரைகள் விளக்குகின்றன.

இதை வெளியிடப் பொருளுதவிய இந்தியன் வங்கி நிறுவனத்தார்க்கு என் நன்றி. பாங்குடன் வெளியிட்ட பாரதி பதிப்பகத்தார் என் பாராட்டுக்குரியவர். தமிழன்பர்கள் இந்நூலை ஆதரித்து என்னை ஊக்குவிப்பர் என நம்புகிறேன்.

பம்பாய்
ஏப்ரல் 1994

டாக்டர் ரா. விஜயராகவன்
(சிறப்புப் பேராசிரியர்)

# முன்னுரை

## மகாவித்துவான் ரா. இராகவய்யங்கார்

## (1870-1946)

இக்கட்டுரைத் தொகுதியின் ஆசிரியரின் முன்னோர்கள் காஞ்சிபுரம் ஸ்ரீபெரும்புதூர் அருகில் உள்ள திருப்புட்குழியில் வாழ்ந்தவர்கள். இவ்வூர் பல நூற்றாண்டுகள் வடமொழி, தென்மொழி வல்ல புலவர்கள் வசித்த இடம். இவர்களில் ஒருசிலர், வேதம் தமிழ் செய்த நம்மாழ்வார் அவதரித்த ஆழ்வார்திருநகரிக்குக் குடியேறினார்கள். நைத்ருவ காசிப கோத்திர வைணவ அந்தணர்களுக்கு அத்தலத்து எம்பெருமானார் ஜீயர் மடாதிபத்யம் உரியதாகும். கட்டுரை ஆசிரியரின் குடும்பத்தார் பின் சேதுநாடு வந்து தமிழ், வடமொழி வல்லவராய்த் திகழ்ந்தனர்.

1870 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் நாள் பிறந்த ஆசிரியரின் பெற்றோர் இராமாநுஜ ஐயங்கார்—பத்மாசனி ஆவர். பிறந்த ஊர் சிவகங்கை அருகில் உள்ள தென்னவராயன் புதுக்கோட்டை. இளமையிலேயே தந்தையை இழந்து மாமா சதாவதானம் முத்துசுவாமி ஐயங்கார் ஆதரவில் தமிழ் இலக்கியங்களைக் கற்றார். தமிழார்வத்தால் உந்தப்பட்டு பள்ளிப்படிப்பை நடுவிலே விட்டு, தமிழை ஆதரிக்கும் வள்ளல்களிடம் தம் தமிழறிவைக் காட்டி அவர்களால் ஆதரிக்கப்பெற்றார். மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சிலகாலம் தமிழாசிரியராகப் பணி புரிந்தார். திருமணத்துக்குப்பின் திருச்சி தேசிய உயர் நிலைப் பள்ளியில் ஆசிரியராக

அமர்ந்தார். இவர் தமிழார்வத்தினால் பெரிதும் ஊக்கப் பட்டு, இவர் மாணவர்களில் பலர், தமிழையே வாழ்க்கைத் துணையாக எடுத்துக் கொண்டார்கள். இக்காலத்தில்தான் டாக்டர் ஐயரவர்களுடன் குடந்தையில் தொடர்பு ஏற்பட் டது. இருவருக்கும் சங்க நூல்கள் பதிப்பிப்பதில் ஆர்வம் ஏற்பட்டது.

இராமநாதபுரம் சேதுபதிகள் தமிழை நன்கு வளர்த்த வள்ளல்கள். நவராத்திரித் திருவிழாவில் பல புலவர் களையும், அருங்கலைவிநோதர்களையும் அழைத்துப் பரிசுகள் வழங்குவதுண்டு. பாஸ்கர சேதுபதி தம் அவையில் அமர்ந்திருந்த இராகவய்யங்காரின் புலமையில் ஈடுபட்டு அவரைத்தம் சமஸ்தான வித்துவானாக இருக்கப் பணித்தார். இதுபோலவே இசைத்துறையில் தேர்ந்த பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார் சமஸ்தான வித்துவானாக உப சரிக்கப் பெற்றார். சுவாமிவிவேகானந்தர் சிகாகோ செல்ல விரும்பிய பொழுது பலநாட்கள் இராமநாதபுரத்தில் தங்கி சேதுமன்னரின் பொருளுதவியால் அமெரிக்கா சென்றார். அவர் அவைக்களப் புலவர்களோடு இந்து சமயம் பற்றிய சர்ச்சைகள் பல செய்து இன்புற்றது உண்டு.

சேதுபதியின் உறவினரான பாண்டித்துரைத் தேவர் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை 1901-ல் நிறுவி இராகவய்யங்காரைச் ''செந்தமிழ்'' என்னும் ஆராய்ச்சி இதழுக்கு ஆசிரியராக்கினார். இதன் மூலம் தமிழன்னை பெற்ற ஆராய்ச்சி முத்துகள் எண்ணிலடங்கா. விஞ்ஞான- பகுத்தறிவுக்கு ஏற்ப தமிழாராய்ச்சி செய்தற்குத் தம் கட்டுரைகளின் மூலம் இலக்கணம் வகுத்தார். கம்பர், திருவள்ளுவர், சங்ககாலச் சான்றோர் வரலாறுகள், ஊர்கள், நூல்களின் ஆசிரியர் பெயர்கள் தமிழுலகுக்குத் தெரிய ஆரம்பித்தன. எல்லாவகை' அபிப்பிராயங்களுக்கும் இடம் அளிக்கும் இதழாகத் திங்கள்தோறும் வெளிவந்தது. சில ஆண்டுகளுக்குப்பின் தம் தாய் மாமன் மைந்தரும்'

தமிழ்ப் பெரும் புலவருமான மு. இராகவய்யங்காரிடம் ஆசிரியப் பொறுப்பை அளித்தார். மீண்டும் சேது சமஸ்தான அவைக்களப் புலவரானார்.

அண்ணாமலை நகரில் 1935 ஆம் ஆண்டு தமிழா ராய்ச்சிப் பகுதி திறக்கப்பட்டு, அப்பகுதித் தலைவராக நியமிக்கப் பெற்றார். இதுவரை சொந்த முயற்சியால் நூல்கள் வெளியிட்டும், சொற்பொழிவுகள் புரிந்தும் தமிழுக்கு தொண்டு புரிந்தவர்க்கு இப்பதவி மூலம் மிக விரிவாகத் தமிழாராய்ச்சி செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. தம் 65 ஆம் வயதில் அளிக்கப்பெற்ற பெரும் பொறுப்பை மிகச் சிறப்பாக ஆறு வருடங்கள் நிறைவேற்றினார். இக் காலத்தில் இவர் செய்த சொற்பொழிவுகளைக் கேட்டு மயங்கியவர்களில் டி.கே.சி., ராஜாஜி, சத்தியமூர்த்தி, நீதி பதிகள், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் போன்றோர் பலர். தமிழ் வரலாறு, பாரிகாதை, தித்தன், கோசர், பட்டினப்பாலை உரை, பெரும்பாணாற்றுப் படை ஆராய்ச்சி, அபிஜ்ஞான சாகுந்தலம் ஆகியன இந்த ஐந்தாண்டுகளில் வெளியானவை. குறுந்தொகை விளக்கத்தின் ஒரு பகுதி பின்னர் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வாறு தென்னாட்டுத் தமிழ்த்திலகமாய் விளங்கிய புலவர் பெருமான் 1946ஆம் ஆண்டு ஜூலை மாதம் 11ஆம் நாள் தமது 77ஆம் வயதில் தம் இராமநாதபுரத்து இல்லத்தில் காலமானார். அவரால் வெளிவந்த நூல்கள், கட்டுரைகள், தனியே கொடுக்கப்பட்டுள்ளன. பரிமேலழகரை ''ஈசனதருளால் உய்த்து உணர்வுடைய வோர் உண்மையாளன்'' என்பர். அத்தகைய ''அநுக்ரக சக்தி'' இம் மகாவித்துவானிடம் அமைந்திருந்தது.

இவர் சுதந்திரமான சிந்தனையாளர். விஞ்ஞான பூர்வ மான தமிழாராய்ச்சிக்கு வழி வகுத்தவர். மாற்றுக் கருத் துக்கு மதிப்புக்கொடுத்து, அதைப் பலரறிய ஒத்துக் கொள்ளும் பெரும் உள்ளம் உண்டு. நச்சினார்க்கினியர்

உரையை மறுக்கும் அதே நேரத்தில், புது மாணாக்கர் களின் கருத்துக்கு மதிப்பும் தருவார். சமரச சன்மார்க்க வாதி. பிறப்பில் வைணவ அந்தணராயினும், ஆண்டு தோறும் சைவ சித்தாந்தக் கழகச் சொற்பொழிவுகளில் சைவ சமயக்குரவர்களின் பேரிலக்கியத்தைப் புகழ்வார். தானம், தயை, தபஸ் என்ற மூன்றும் இஸ்லாமிய அன்பர் களின் பெருநாள் நோன்பில் எவ்வாறு வெளிப்படுகிறது என்று காட்டுவார். தேம்பாவணி போன்ற கிறிஸ்தவ இலக்கியத்தைப் பெரிதும் பாராட்டுவார். எல்லாவித உண்மைகளையும், எங்கிருந்தாலும் அறியும் ஆர்வம் இருந்தது. இவர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் இதற்குச் சான்றாக அமைவன.

வாழ்க்கையில் வறுமையால் பன்முறை அல்லற்பட்ட பொழுதும் ஆராய்ச்சியையும், பதிப்பித்தலையும் விட்டதே இல்லை. பகவானே மகாபலியிடம் மூன்றடி மண் யாசித்த பொழுது உடல் குறுகி பெற்றவர்களே நகையாடும் படியான தோற்றத்தில் வாமனனாய் அமைந்தான் என் றால் சாதாரண மனிதர்கள் எவ்வளவு கூனிக்குறுக வேண் டும்என்றுகூறிக் கம்பராமாயணத்தில்அப்பகுதியைக் காட்டு வார். தம்மைப் புரந்த சேதுபதி மன்னர்களையும், இராஜா சர். அண்ணாமலைச்செட்டியாரையும், கம்பன் சடையப்ப வள்ளலைப் புகழ்ந்ததுபோல் கவிபாடி நன்றிக் கடனைத் தீர்த்தார். பெண்களிடமும், பெண் கல்வியிலும் பெரு மதிப்பு வைத்தவர். சங்க இலக்கியத்தில் கண்ட பெண் புலவர்களை ''நல்லிசைப் புலமை மெல்லியலார்கள்'' என்ற நூலை எழுதி உலகுக்கு அறிவித்தார்.

இவர் சிறந்த நாவலர். மகாவித்துவான் என்ற பட்டம் தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதய்யரால் அளிக்கப்பட்டது. வடமொழி அன்பர்கள் நிறைந்த சமஸ்கிருத சமிதி ''பாஷா கவிசேகரர்'' பட்டம் அளித்து கௌரவித்தது. மூன்று சோழப் பேரரசர்கள் அவையில் ஆஸ்தான வித்துவா னாக இருந்த ஒட்டக்கூத்தன்போல் இவரும் மூன்று சேது

மன்னர்கள் அவைப் புலவராக அமைந்தார். சங்ககாலக் குறுநிலமன்னர்களான வேளிர், கோசர் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் இவருடைய சுதந்திரமான தனி வழிப்பாதை காண்பதில் உள்ள ஆர்வத்தைப் புலப்படுத்தும். தித்தன் வேளிர் குறுநில மன்னன். வஞ்சியருகில் வதிதவன் என்பதைச் சமீபத்தில் கருவூர் அமராவதிப் படுகையில் கிடைத்த தித்தன் பெயர் பொறித்த நாணயம் வலியுறுத்தும். கோசர் வேளிரை அடுத்துத் தமிழ்நாடு வந்தவர்; கோசர் புத்தூர், பின்பு கோயம்புத்தூர் எனத் திரிந்தது; வேளிர் காஷ்மீர நாட்டிலிருந்து மிகப் பழைமையான காலத்தில் தமிழ்நாடு போந்தவர். பொருநராற்றுப் படைத் தலைவன் கரிகாலன், பட்டினப்பாலைத் தலைவன் திருமாவளவன் என்று இன்னோரன்ன புதிய செய்திகளை வெளியிட்டவர். இவற்றில் சில காலத்தால் வேறுபடலாம்.

தமிழர் இப்படைப்புகளைப் படித்து இன்புறுவதற்காகவே இந்நூல் தொகுதி வெளியிடப்படுகிறது.

# 1. வேளிர்

வேளிர் என்பார் வடநாட்டிலிருந்து அகத்தியருடன் தமிழகம் வந்த பதினெட்டு குடிமக்கள் எனச் சங்க நூல்கள் கூறும். இவர் தமிழ் நாட்டிலேயே சேர, சோழ, பாண்டிய ருடன் படைப்புக்காலந் தொட்டு வாழ்ந்த குறுநில வேந்தர் என்பாரும் உண்டு. நச்சினார்க்கினியர் தொல் காப்பியப் பாயிர உரையில் ''அகத்தியர் தென்திசை செல்லும் பொழுது துவாரகையிலிருந்த நெடுமுடி-அண்ணல் வழி அரசர் பதினெண்மரையும், பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையும் கொண்டுவந்து காடு கெடுத்து நாடாக்கி'' வேளிரை வடநாட்டிலிருந்து தென்னாடு குடியேறியவராகக் கூறுவர். இக்கதை எவ்வாறாயினும், கபிலர் புறப்பாட்டு 205ல் வேளிருள் ஒருவனை

''வடபால் முனிவன் தடவிறுள் தோன்றிச்
செம்பு புனைந்து இயற்றிய சேணெடும்புரிசை
துவரா ஈகைத் துவரை ஆண்டு....
நாற்பத்து ஒன்பது வழிமுறை வந்த வேளிருள்
வேளே! .. புலிகடிமால்!''-என அழைக்கிறார்.

இதனால் வடபால் தடவினின் தோன்றி வடபால் துவரை ஆண்டு பின் தென்னாடு புகுந்தனர் என்பது தெளியலாம். தமிழ் வேளிருள் முன்னோர் திருமால் வழிவந்தவர் என்றும், அவர்கள் வாழ்ந்த ஊர் துவாரகை என்றும், அகத்தியருடன் தென்னாடு வந்து புலிக்கொடியுடைய சோழனை வென்ற வேளிர் வேந்தன் (புலிகடிமால்!) புருவன் என்றும் பெறப்படுகிறது. இதில் குறிப்பிடப்பட்ட துவாரகை எது? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம். இவர்களுடன் ''கோசர்'' என்ற பிறிதொரு

குடியினரும் தென்னாடு வந்து மூவேந்தர்க்கும் உறுதுணையாய் இருந்தனர். இதனைப் பிறிதொரு கட்டுரையில் காண்போம்.

''தடவினுட்டோன்றி'' என்பது தடவு ஓமகுண்டம் என்றார் புறப்பாட்டுரைகாரர். துவரையாண்டு தெற்கண் வந்தது பல்வகை வேளிர்க்கும் ஒக்குமெனவும் இப்பாடல் பெற்ற வேள் அவருள் **இருங்கோ.** ஆதலால் வேளிருள் வேள் எனப்பட்டாரெனவும் கொள்க. உரைகாரரும் நூலாசிரியரும் ''ஐம்பெருவேளிர்'' (புறம், 23 உரை) ''ஈரெழு வேளிர்'' (அகம், 135) ''பதினொரு வேளிர்'' (அகம், 24?) என வழங்கலான் இவர் பல்வகைக் குடியினர் என்பது துணியலாம். ஈண்டுக் காட்டிய கபிலர் கூற்றில் ''ஆண்டு வந்த வேளிர்'' எனவும், அகப்பாட்டில் ''அடு போர் வீயா விழுப்புகழ் **விண்டோய்** வியன்குடை ஈரெழு வேளிர்'' (135) எனவும் காண்டலான் இவர் அரச வழியினராதல் புலனாகும். ''வேளீரும் புரோகரும் குறுநில வேந்தர்'' எனத் திவாகர நூலார் பாடுதலும் நச்சினார்க்கினியர் ''பல்லொளியர்'' என்னும் பட்டினப் பாலையுரையுள் ''ஒளியராவார் பிறமண்டலங்கட்குள் அரசாவதற்குரிய வேளாளர் ஆவார்'' எனக் கூறுதலும், அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரவுரையில் ''வேளாண் காமந்தர்'' (இந்திர விழா 44) என வரைதலும் நோக்கி இவ்வுண்மை உணர்க. கபிலர் வேள்பாரியைச் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்னும் பெருமுடியரசன் முன்னின்று ''எங்கோ'' (பதிற், 7.1) எனப்பாடுதலும் நத்தத்தனார் சிறுபானாற்றிற் ''பறம்பிற் **கோமான்** பாரி'' எனச் சிறப்பித்தலும் காண்க. இனிக் கபிலர் இவ்வேளிர் ஆண்டதாகக் கூறிய துவரை இஃதெனத் துணிதற் கண்ணேதான் இவருண்மை வரலாறினிது தெளியப்படுவதாகும். துவரை எனத் தெரிதற்குரிய பெயருடைய ஊர்கள், கண்ணபிரான் ஆண்ட குசஸ்தலி துவாரகையும், ஒய்சளர் வாழ்ந்த துவாரஸமுத்ரமும் (மைசூரைச் சார்ந்தது.) இந்தியாவைச்

கடந்துள்ள கீழ்கடலாட்டுச் சீயப் புறத்துத் துவராவதியும், நாவலந்தீவின் கீழ்கடற்கரையில் முசலிக்கும் (கிருஷ்ண வேணி), கோதாவரிக்கும் இடையில் மேற்றிசையாசிரியர் தாலமி முதலியோர் கூறிய **கோத்வரா** என்பதும் (மாக்ரிண் டில் தாலமி, பக்கம் 66), காச்மீர தேயத்து ஐயபுரமாகிய **துவராவதியும்** (ராஜதரங்கணி --4.511) அத்தேயத்தே துவாரவதிப் பற்றிலுள்ள வராகமூலத்துவாராவாற் பெய ரெய்திய **துவாரவதியும்**, காம்போகத் தலைநகராகிய **துவாரகா** என்பதும் (Buddhist India பக்கம்-28) ஆகும். இன்னும் ஒரு சாரார் **துவரைக் கோமான்** என்னும் தமிழ்ச் சங்கப் புலவர் பெயர் வழக்கினைத் துணையாகக் கொண்டு பாண்டி நாட்டுத் துவராபதி நாடும் துவரங்குறிச்சியும் ஆமென்று துணிதலும் உண்டு. கபிலர், வடபாற்றுவரை யாண்டு தென்பால் வந்த வேளிர் என்று கொள்ள வைத் தற்கு இஃது இயையாமையால் இவர் துணிவு பொருந்தா தாகும். அன்றியும் சங்ககாலத்து ஔவையாராற் பாடப் பட்ட அம்பர்கிழான் அருவந்தைக்கு நெடுஞ்சேய்மையனா காத சேந்தன் பெயராற் செய்யப்பட்ட நிகண்டில், திவாகரர் இதையே குறிப்பர் (தொல். செய். பேராசிரியருரை)

''கொடியணி யேனம் பொடியணிந்து கிடப்ப
வடதிசை வாகை சூடித் தென்றிசை
வென்றி வாய்த்தவன்றாற் விடலை''

(தொல். செய். பேராசிரியர்)

—எனப் பாடப்படுதலாலும் இவ்வுண்மை உணரலாம். ''வேள்குலத்தரசர்'', வேள் குலச் சாளுக்கியர்'' என்ப வற்றாற் சாசனங்களும் (S.I.I, Nos. 28, 73) இவ்வட திசைச் சாளுக்கியரை வேள் குலத்தவராகக் கூறுதல் காண லாம். பாடலும் சாளுக்கியர்க்குரிய ஏனக்கொடியைப் (வராகத்துவசம்) புழுதியில் வீழ்த்திய செய்தியை வட திசை வாகை சூடியதாகக் கூறுதல் தெளிக.

"கொல்விக்கும் யானை கொடு சாளுக்கி
வர்க்கமற , வேளுக்கிராமமிடறி"

(குலோத்துங்க சோழ தேவர் பிள்ளைத் தமிழ், 12)

என்பதனாற் சாளுக்கிய வர்க்கம் வதிதலூர் வேள்கிராமம் எனப்பட்டதறியப் படுதலாலும் இவ்வுண்மையுணரலாம். கபிலர் காலத்திற்கு முன்னே இவ்வேள்புல வேந்தர் தமிழ் நாட்டில் துவரை என்னும் ஒரு ஊரைத் தலைநகராகச் செய்து 49 தலைமுறை ஆண்டனர் என்பதற்கு நூலும் சாசனமும் இல்லாமையுங் காண்க.

கண்ணபிரான் வதிதருளிய துவாரகாவை நோக்கின் அது தம்மைத் "துவாரவதி புரவராதீச்சவர்" என்று கூறிக் கொள்ளும் யாதவகுல ஒய்சளர்க்குப் பொருந்துவதல்லது வேள்குலத்தவர்க்கு இயைவது ஆகாதென்க. ஒய்சளர் தம்மை வடபான் முனிவன் தடவினுட் தோன்றியவராகக் கூறாமையும் உணர்க. மைசூரைச் சார்ந்த துவார சமுதிரம் மேற்குறித்த ஒய்சளர் தலைநகராதலால் வேள் குலத்தவர்க்கு இயைவதன்று. இவ்வூர் வடபாலில்லாது தக்ஷிணபதத்தேஇருப்பதும்ஈண்டைக்கு நினைக்கத்தகும். இவ்வூர் இக்காலத்து "ஹேளபீட்" என வழங்குதலான் இது வேள்வீடு என்பதன் மரூஉப்பெயராகக் கொள்ளப் படுமெனின் அது ஒய்சளரை வென்று பிற்காலத்துச் சாளுக்கியர் ஆண்டு வதிதனையே குறிக்குமென்க. மற்றும் கீழ் கடனாட்டுச் சீயப்புறமாகிய துவாரவதி வடநாட்ட தாகாமை நன்கறியலாம். இவ்வூரையுடன்படின் இத் தெக்ஷிணபதத்து நாகரீகம் ஆண்டுப் புக்கதென்பது சாசன பரிசோதகர் துணிபாகவும் அதனொடு பகைத்து ஸ்வர்ணதீவப் பக்கத்து நாகரீகம் ஈண்டுப் புக்கதென்று கொள்ள நேரும் என்க. இனித் தாலமிகுறித்த 'கோத் வாரா'வும் இவ்வேளிர் தென்னாடு வருவதற்கு முன்னர் ஆண்ட துவரையாகாமை அது தெக்ஷிணபதத்தே இருத்தலான் அறியலாம். இது கீழ்பாற் சாளுக்கியர்

ஆட்சியுட்பட்டதேயாயினும் இதனையே அவ்வேள்புல வேந்தர் 49 தலைமுறை தலைநகராக அமைத்து ஆண்டன ரென்றற்கு நூலும் சாசனமும் இல்லாமை நினையலாம். தெக்ஷிணை பதத்து மேற்பக்கத்துப் பலபத்ரபுரத்தையும் (பாலமி, வாதாபி) கீழ்பால் வெங்கியையும் தலைநகர்க ளாகக் கொண்டு வேள்புலச் சாளுக்கியர் வாழ்ந்தது சாசனங்களால் அறியலாம். அன்றியும் சாளுக்கியர் தெக்ஷிணைபதத்து வருவதற்கு முன்னே 59 தலைமுறை வடநாட்டில் வாழ்ந்ததாக, அவர் சாசனங்கள் ஒருபடியாகக் கூறுதல் காண்டலான். அவ்வேள் புலவரசர் விந்திய மலைக்குத் தெற்கட்டோன்றியவராகாமை தெளியலாம். வேள்புலச் சாளுக்கியர் சாசனங்களும், அவ்வேள்புலச் சாளுக்கியரிற் சிறந்த விக்கிரமாதித்தனைக் காச்மீரப் புலவர் பில்ஹணர் பாடிய சரிதமும், கபிலர் பாடிய வேளிர் வரலாறும் இவர் தோற்றம் வடபாலுள்ளதாய தென்று ஒரு படியாகக் கூறுதலுண்மை நன்கறியலாம். சாசனங்களும், விக்கிரமாதித்த சரிதமும் சாளுக்கிய வேந்தர் வடநாட்ட யோத்தியிலாண்டனரென்று கூறும்.

அயோத்தி நாட்டும் துவாரகா (sultanpur) என்னும் ஓரூருண்டு. அஃதுள்ள நாடு வேள்புலம் என்றற்கு ஆதார மின்மையாலும், அயோத்தி நாடு சூரிய குலத்தவர் ஆட்சி யாதலானும், சந்திரகுலத்தவராகிய சாளுக்கியருக்குரிய தாகாமையாலும் துணிதற்கில்லையென்க. மற்றச் சாசனம் சிலவும், பில்ஹணரும், சாளுக்கியர் முதலில் அயோத்தி யில் வாழ்ந்தவர் என்று கூறுதல், துவரை நாடாகிய வேள் புலத்தை ஆண்ட அரசர் தந்நாடு விட்டுச் சிலகாலம் அயோத்தியிலும் இருந்து வாழ்ந்தது பற்றியென்று நினை யலாம். இவர் அயோத்தி நாட்டிலே தோன்றியவரல்ல ரென்பது பில்ஹணர்க்கும் உடன்பாடாதல், இச்சாளுக் கியர் உற்பத்தியை ''ஸிந்து தீரத்தில்'' (த்ரைலோக்ய பந்தோஸ் ஸீர ஸிந்து தீரே ப்ரத்யூஷ சந்தியாஸம யோப பூவ'') வைத்துக் கூறுதலான் உணரலாம். இவ்ா புலஸ்

தியருடைய மகன் ஹரீதியின் சுளுக்கத்திலுண்டாயின ரெனவுங் கூறுதலுண்டு. புலஸ்தீயருடைய தவச்சாலையும் ஸிந்து என்னும் யாறும் காச்மீரத்துச் சாரதாவனத் திருப் பதுமேலே விளக்கப்படும். இவர் கருத்துப்படி அயோத்தி இவ்வரசர்க்குத் தலைமையூராகக் கொள்ளப்படாமை மேல் சந்திரலேகை ஸ்வயம்வரத்து ''அவள் இராமபிரான் வழியினனாகிய அயோத்தியாதிபதியையும், சேதிவேந்தன் முதலிய பிறரையுந் தள்ளிச் சாளுக்கியன் முகத்திலே கண் வைத்தனள்'' என்று கூறியவாற்றான் நன்கறியலாம் (விக்ரமாங்கதேவசரிதம்). சாளுக்கியன் அயோத்தியாண்ட அரசன் வழியினன் என்பது உண்மை வரலாறாயின் அயோத்தியரசனையிழித்து இங்ஙனமோர் பெருங்கவி கூறானென்க. அயோத்தி என்ற பெயருடையவூர் பழங் காலத்து நாவலந்தீவின்மேற்றிசைக்கோடியினும் உண்மை (Buddhist India) கேட்கப்படுதலும் இங்கு நினைத்துக் கொள்க. தமிழ் நூலார் சாளுக்கியரை வேள்புல வேந்தர் என்பதும், வடநூலார் அவரை அயோத்தியர் என்பதும் ஆகிய இரண்டனுள் யாது அவர் வரலாற்றொடு பொருந் துவதென்பதே ஈண்டு ஆராயத்தக்கதாம். வடநாட்டுக் கிடைத்த இவ்வரசர் பழைய சாசனங்களில், இவரை அயோத்தியாண்டவராகக் கூறாமை நினைந்து கொள்க. இக்குலத்து ஸ்ரீநாகவர்த்தனன் முதலான பல வேந்தர் சாசனங்கள் கண்டு தெளிக. பில்ஹணருக்கு முந்திய இச் சாசனங்களெல்லாம் ''கேழல் வேள்புலவரசர் கொடியே'' (திவாகரம்) என்ற தமிழ் நூல் வரலாற்றிற்கியைய முதற் கண் விஷ்ணுவினுடைய வராஹாவதாரத்தைப் புகழ்ந்து வாழ்த்திக் குலமுறை கூறுவதல்லது வேறு அயோத்தி யாண்டரென்று கூறாமை நோக்கிக் கொள்க. Indian Antiquary, vol IX, பக்கம் 124—135 பார்க்க).

அயோத்தியின் தலைமை நோக்கி ஆண்டும் இவர் அரசு செய்து வாழ்ந்தவரென்று புலவர் ஒருவர் புகழ்ச்சியாகத் தொடங்க அதனையே பின்னுளாரும் வரையத் தலைப்

பட்டனரோ வென்று நினைக்கின்றேன். சாளுக்கியரை அயோத்தியினராகக் கூறிய சாசனங்கட்கும், ஆசிரியர் பில்ஹணருக்கும் (கி.பி. 1012) மிகவும் முற்பட்டவராகிய சங்கப் புலவர் கபிலரும் அவருக்கு நெடுஞ்சேய்மையராகாத திவாகரரும், முறையே தெளிந்தோதிய துவரை என்னும் பெயர்க்குரிய ஊரும் வேள்புலம் எனப்பட்ட நாடும் யாண்டு ஒருங்கியைந்து காணலாம். ஆண்டே இவ்வேள் வேந்தர் தோற்றஞ் செய்த ஆதியிடம் உள்ளதெனத் துணிவதே பொருத்தமாகும். இனிக் காம்போச நாட்டுத் தலைநக ரென்ற துவாரகாவைத் துணியலாமெனின் அந்நாடு வைதீக மொழிக்கும் ஒழுக்கத்திற்கும் புறம்பான வேற்று மொழியாளருடையதாக யாஸ்கர் நிருக்கத்திற் கூறுதலான் வைதீக வொழுக்கம் போற்றிய இவ்வேள் வேந்தர்க்குரிய தாகக் கருதற்கில்லையென்க. வேள் ஆஅய் நீல நாகம் நல்கிய கலிங்கம் ஆலமர் செல்வற்கு அளித்த வரலாற்றான் இவ்வேள் குலத்தவனுடைய வைதீக ஒழுக்கம் உணர லாமே. அன்றியும் காம்போசம் வேள்புலமென்றற்கு ஆதாரமில்லாமையும் நோக்குக இங்ஙனமே குமாயூன் ஜில்லா 'த்வாராஹத்' முக்கிய ஊர்களும் இவரூராகாமை உய்த்துணர்ந்து கொள்க.

## காஷ்மீரத் துவாரகை

இனி எஞ்சியன காச்மீரதேயத்து ஜெயபுரத்துவாரவதி யும் அங்குள்ள வராஹமூலத்வாரவதியுமேயாகும். இங்கு முன் வைத்த த்வாரவதி கி.பி. 751-க்கு முற்பட்டவனாகாத ஜயாபீடன் என்னும் வேந்தன் காலத்து உண்டாக்கப்பட்ட தென்று ராஜதரங்கினியால் (IV-511) அறியப்படுதலான், இதுவும் கபிலர் குறித்த துவரையாகாமை நன்கு தெளிய லாகும். இனி இறுதியாய் நின்றது காச்மீர நாட்டு வராஹமூலத்வாராவேயாகும். அது பொய்யா நாளிற் புலவர் பெருமானான கபிலர், வேளிர் ஊராகக் குறித்த தாகுமா என்று ஆராய்வோமாக.

## காஷ்மீரச் சரிதம்

சாசியப முனிவர் சிவபிரானை வழிபட்டு இந்நாட்டில் ஓர் நீர்த்தடம் உண்டாக்கினாரென்றும், அதன் கண்ணே பார்வதிதேவியே நீராயொழுகத் தலைப்பட்டனளென்றும், இதனாலிது 'ஸதிஸரஸ்' எனப் பெயர் பெறுமென்றும், இது காசிப முனிவர் வேண்டுதலான் உண்டாக்கப்பட்டு அவர்க்கு மகனாகிய நாகத்தலைவன் நீல நாகனுக்கு உறைவிடம்ஆனதென்றும், இந்நீர் நிலை பின்னால் ஜலோத்பவன் என்னும் பூதத்திற்கு இடனாகியபோது, விஷ்ணு பகவான் பலபத்ரனைக் கொண்டு அலாயுதத்தால் மலையைக் கீறிப் புனலை வடியச் செய்து, அப்பூதத்தைச் சக்கரத்தாற் கொன்றனனென்றும், இதன் பின் நாகர்கள் இங்கே வாழத்தலைப்பட்டனரென்றும் கூறும் (stein Rajatarangini, II, 389 பார்க்க) பில்ஹணர் ராஜதரங்கினியில் கற்பாரம்பத்தே ஸதிஸரஸ் என்ற பெயரால் ஓர் நீர்நிலையிலிருந்ததென்றும், அதிற் பெருகி வழியும் நீரால் நிரப்பப்பட்டு இக்காச்மீரம் உள்ள இடம் மக்கள் வாழ்தற்குரிய நிலமாகாது கிடந்ததென்றும், காசிபர், துருணன் (பிரமின்), உபேந்த்ரன், ருத்ரன் என்னுந் தெய்வங்களை அந்நீர் நிலையிலிறங்குவித்து, ஆண்டிருந்த ஜலோத்பவன் என்னும் பூதத்தைக் கொல்வித்து, அந்நீர் வற்றிய தரையில் இந்த ராஜ்யத்தைத் தாபித்தாரென்றும் (ரா. த. I 25, 26, 27) இந்நிலம் ஸ்திஸரஸ்ஸைக் குடையாகவும், அதனின் றொழுகிவரும் விதஸ்தா என்னும் நதியைக்(Jhelum) காம்பாகவும் கொள்ளப்பட்ட நாகர் தலைவனான நீல நாகனாற் காக்கப்படுவதென்றும், அவன் வாழ்வதனால் இந்த ஸதிஸரஸ் நீல குண்டம் எனப்படுமென்றுட் (ரா.த. 1. 28) விளங்கவுரைத்தனர். இந்த விதஸ்தாநதி நீலநாக குண்டத்தில் உற்பத்தியாதல் பற்றி இதனை நீலன்மகவாகக் கூறுவதுமுண்டு. (v:91) இந்நாட்டவர் இங்குள்ள நீர்நிலைகள் பலவற்றையும் ஒவ்வொரு நாகத்திற்கு உறை

விடமாக்கி, அவ்வந்நாகப்பெயரால் வழங்குவர். இந் நாட்டு மொழியில் நீர்நிலைகள் ''நாகு'' என்று பெயர் பெறுதற்கும் இவ்வழக்கமே காரணமாகும். பத்ம நாகு (வேளூர் ஏரி), வேள் நாகு (நீலகுண்டம்), விஸ்ரவஸ் ஏரி (சேஷ நாகு), க்ஷீரதீர்த்தம், (ஜாமாதினாநாகு)என்று வழங் கலான் இவ்வுண்மை அறிக. இந்நாடு ஆதிதொட்டு நாகர் வழிபாடு மிகுந்ததென்றும் இக்காரணத் தால் இது நாகநாடெனப்படுமென்றும் கொள்ளப்படும். இதற்கியையவே மணிமேகலை நூலுட் காந்தார தேசத்தின் கீழ்த் திசையில் நாக நாடிருப்பதாகக் கூறுதல் காணலாம். இதனைக்,

''காந்தார மென்னுங் கழிபெரு நாட்டுப்
பூருவ தேயம் பொறைகெட வாழும்
அத்தி பதியெனு மரசாள் வேந்தன்
மைத்துனனாகிய பிரம தருமன்
ஆங்கவன் றன்பா லணைந்தற முரைப்போன்
தீங்கனி நாவ லோங்குமித் தீவிடை
இன்றேழ் நாளி னிரு நில மாக்கள்
நின்று நடுக்குறூஉம் போழதத் திந்நகர்
நாக நன்னாட்டு நானூறு யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்துகே டெய்தும்''
(மணிமேகலை---9)

என்பதனாலறியலாம். இதன்கட் காந்தாரதேயத்திற்குப் பூருவதிக்கில் (கீழ்த் திசையில்) நாக நாடுள்ளதாகக் கூறி யிருத்தல் காண்க. (கண்ணிங்ஹாம் எழுதிய பூர்விக இந்திய பூகோளம், பக்கம். 52 பார்க்க) இந்நாக நாட்டை வளம் பெறச் செய்யும் விதஸ்தா நதி (ஜேலம்) வேள் எனப் பெயர் பெறுவது என்பது இன்றைக்குங் கேட்கப்படுவ தாகும். இவ்வுண்மையை எட்வர்ட்தாரண்டன் துரை எழுதியது காண்க.

(Veyal, The name given to jhelum in the uppu parts of ts course; 1886 -பதிப்பு, பக்கம் 979). இந்நதி நீல

நாகன் மகளாகக் கருதப்படுதலான் வியாள எனப்பட்டு அதுவே வேள, வேள் என மாறியதென எளிதில் உணர லாம். பத்ம நாக ஸரஸ் உள்ள தலம் வேளூர் என இன்றும் வழங்குதல் காணலாம். வடமொழியில் வியாள பதம் அரசனுக்கும், மதயானைக்கும், பாம்பிற்கும் வழங்கு வதாகும். தமிழில் வியாழன் என்பது ராஜா, குரு என வழங்குதல் காணலாம். வேழம் என யானைக்கு வழங்கு தலும் நோக்குக.

''வெள்ளி விடையேறி வியாழம் புனைந்தாரை''

எனப் பாம்பிற்கு வருதல் காண்க. வியாதன் வேடன், வேடு என வருதல் போல, வியாளன், வேளன், வேள் என வந்ததாகக் கொள்ளலாம். தமிழில் வேள் ஆஅய் என்னும் வள்ளல் நீல நாகத்தால் நல்கப்பட்ட கலிங்கமுடையவனா தலும், அண்டிரன் எனப்படுதலும், நாகமாலை வழைப்பூங் கண்ணி (புறநானூறு 131) புனைதலும் ஏற்ப நோக்குக. அண்டிரன் என்பது அஹிந்திரன் என்பதன் சிதைவு ஆகும். ஆயினும், ''அண்டிர்'' என்பது மேகங்கட்குப் பெயராகக் காச்மீரி மொழியிற் காணப்படுதலால் அண்டி ரன் என்பதற்கு மேகங்களை ஏவிக் காரியங்கொள்ள வல்ல வன் என்றேனும், மேகத்தை ஒத்தவன் என்றேனும் கொள்ளலாம். ராஜதரங்கினியில் ''நாகர் மேகவுரு வெடுத்து விசும்பை மறைத்தல்'' (5—21] காணலாம். இதனால் இந்நாக குலத்திற்கு மேகத்தோடுள்ள இயைபு தெரியலாம். இனிச் சதப்பதப்ராம் மணத்தில், சக்கரவர்த் தியை ஐந்த்ராபிஷேகம் செய்யவும் பின் சிறப்பு குறித்து இவனை ஐந்திரனாக்கினரோ என நினைத்தலுங் கூடும். இம்மூன்றிலும் மேகசம்பந்தத்தால் அண்டிரன் என்பது திரிபில்லாத பெயராதல் பற்றி நன்கு பொருந்தும். வேளிர் என்று தம்மைக் கூறிக் கொள்ளும் வேட்கோவர் மலையாள நாட்டில் அண்டிரர் என்னும் பெயரான் இன்றும் வழங்கப் படுகின்றனர். (லோகன் துரையவர்கள் மலையாள வர லாறு பார்க்க]. தரங்கினியுடையார் இப்பெயரானே நீல

நாகனை ஆள்வர். வியாள பத்ரா என்ற குளிர் காலம் வேள்பத்ரா என வழங்கப்படும். [ஆல் பெருந் 120) பாரசீக மொழியிலும் வேள் என்பது அரசர்க்கும் பிரபுக்களுக்கும் வழங்கல் அவர் நூல் கொண்டுணர்க. ஸ்ரீ பாகவத நூலார் ''ஸங்கர்ஷணம் அஹிந்த்ரம்'' என அலாயுதனுக்கு வழங்குதல் காண்க. அலாயுதன் ஆதிசேஷாவதாரம் என்பது அறிந்தது. அலாயுதத்தால் நீர்ப் பெருக்கை ஈர்த்து வற்றச் செய்து ஜலோத்பவனைக் கொன்று நிலத்தை உண்டு பண்ணிய வரலாற்றானும் அலாயுதனாகிய அஹீந்த்ரனுக்கு இத்தேச சம்பந்தம் உணரலாம். J. Tod என்பவர் ஆள் என்னும் பெயரைத் தஷகன் வழியிற் பொருத்திக் காட்டுவர் (Vol. 1. p. 68.) விழிஞத்தையுடைய வேள் நாடாண்ட ஆய் வழியினன் கருநந்தடக்கன் எனத் தன் சாசனங்களிற் கூறிக் கொள்வதும் கச்மீர வேந்தர் மரபு பற்றியாமென்க. இக்குலம் கோநந்தன் முதலாகத் தொடங்குதல் தரங்கினியால் நன்கறிந்தது.

இந்நாகர் முடிசூடியாண்ட அரசராதலால், தமிழில் முடி நாக ராயர் என்ற பெயராலும், சூடு நாக குலச் சாசனங்களாலும் அறியலாம். ராஜதரங்கினியில் கச்மீரத்தை நாகர் வழியினர் (நாகரை வழிபடுவோர்) ஆண்ட வரலாறு கூறுதலானும் இவ்வுண்மை உணரப் படும். இந்நாகர் உயர்குடியினராதல் இதிகாச புராணங்களிற் சிறந்த க்ஷத்திரிய வேந்தர் இக்குலத்தின் மகளை மணந்த செய்தி பல்லிடத்துங் கேட்கப் படுதலான் அறியலாம். இக்குலத்தவர் காசிபரால் உண்டாக்கப்பட்டு அவரால் நிறுவப்பட்ட ஸதிஸரஸில் வாழச் செய்யப்பட்ட நீல நாகனைத் தந்தேசங்காக்குந் தெய்வமாக வழிபடும் இயல்பினர் என்பது, ராஜதரங்கினியிற் (I 182, 183, 184) காணலாம். தமிழிற் பட்டினப் பாலையுள் ''பல்லொளியர்'' என்புழி நச்சினார்க்கினியர், ஒளியராவார் பிற மண்டலங்கட்கு அரசாதற்குரிய வேளாளர் என உணர

கூறியது காட்டினேன். இவர் வந்து குடியேறிய ஒளி நாடு என்பது பாண்டி நாட்டுத் தென்கீழ் பாலுண்டு. (தொல். சொல். சூத் 40- உரையாசிரியர் சேனாவரையர் உரை பார்க்க).

புதுக்கோட்டைச் சேகரத்து ஒளிப்பற்று என்பதும் உண்டு. கடன்மல்லையிலுள்ள பழைய சாசனத்தில் ஒளிநரகன் என வழங்குதல் காணலாம்.

கச்மீரதேசத்துள் **தேஜவனம்** என்ற ஒரு நிலப் பகுதி உண்டு. இந்நாட்டு ஸ்வயம்பு அக்னிதானே பூமியினின்று ஜ்வாலைவிட்டு வெளியிற்கிளம்பி ஓமங்களை ஏற்பதென்று (I, 3, 4 தரங்கினி) கூறுவர். இதனாற்பிறமண்டலங் கட்கு அரசாதற்குரிய இவ்வொளி நாகர் உண்டாகிய பழைய நாடு இஃதென உணரலாகும். இவர்முன் வாழ்ந்த விதஸ்தா நகுப் பிரதேசம் வியாள நாடாய்-அதுவே வேள் நாடாகி அந்நாட்டு மகன் கல்க நாட்டினன், கல்காபுத்திரன் கல்கன் என்றற்பேர் வேள்மகன் வேண்மான் வேள் எனப் பெயர் சிறந்தனன் என நன்கு துணியலாகும். கல்கை குலம் என்பது வேள்குலம் என வந்ததென நினையலாம். கல்கையினுடைய கரைநிலம் கல்காதீரம் என்பதுபோல வேள் நதியினுடைய பிரதேசம் வேள்புலம் என வழங்கிற் றெனின் அமையும். இவ்வேள் புலத்தார் இந்நாடு விட்டு தெற்கண் வருவதற்கு மணிமேகலையும் கூறியதுபோலப் பூகம்பமும், தரங்கினியிற் கண்டது போன்ற ஹூஷ்கா ஜூஷ்கா ஹூனர் படையெடுப்பும் காரணங்களாகும். (Rajatharangini I 168)

இனிக்கபிலர் ''வடபான் முனிவன் தட (புறம்-201) என்றது வடக்கண்ணே காசிபன் உண்டாக்கிய ஸதீஸர ஸாகிய பெரிய நீர்ச்சுனைக்குப் பெயராதல். இக்கபிலரே ''தடவு வாய்க்கலித்த மாயிதழ்க் குவளை'' (புறம்-10) எனக் கூறியதனாலும், அதற்குப் பழையவுரைகாரர் பெரிய இடத்தையுடைய சுனையின்கண்தழைத்த காய் இதழை யுடைய நீலம் எனப் பொருள் செய்தலானும் உணரலாம்

இச்சுனையினின்று காசிபர் நீலனை உண்டாக்கி நீலநாகனை ஆளச் செய்தவாறு தரங்கினியிற்கண்டது. ஸதீஸரஸ் ஆகிய நீலநாககுண்டம் பெரிய இடத்தையுடைய சுனையால் ராஜதரங்கினியால் (I, 25) அறிக. தடவிற்றோன்றி என்றது நீலநாகன் அதன் கட்டோற்றஞ் செய்த வரலாற்றைக் குறித்ததாகும். தடவிற்றோன்றி இயற்றிய புரிசைத் துவரை என இடத்திற்கே அடையாக்கிறும் கச்மீர சரிதத்தொடு நன்கு பொருந்தும். துவரையைத் தலைமையாகக் கொண்ட நாடு ஆதியிற் காசிபன் உண்டாக்கிய சுனை நீர் நிலையினின்று தோற்றுவித்த நிலமாதலான் இயைபு உணர்க. செம்பு புனைந்தியற்றிய சேணெடும் புரிசையுடைமை கூறியது இந்நாட்டு முற்காலத்துச் செம்பு மிகுதியாகக் கிடைத்தது பற்றியென நினையலாம்.

இந்நாட்டுச் செம்புச் சுரங்கம் உண்மை பிற்காலத்தும் அறியப்பட்டதாகும். (4-616) புறப்பாட்டுரைகாரர் ''செம்பாற் புனைந்து செய்தாலொத்த... புரிசை'' எனக் கூறுதலான் இது வருணனையெனினுமமையும். தெற்கண் வந்த இவ்வேள் குலத்தவனான நன்னன் கொண்கானத்து எடுத்த பாழி என்னும் மலைக்கோட்டையினைச் ''செம்புறழ் புரிசைப் பாழி'' (அகம் 375) எனப் பாடுதலான் இவ்வுண்மையுணர்க. துவரை என்பது இக் கச்மீர தேயத்து வேள்நதியூடு பாயும் வராஹலேப புறமாகிய துவாரவதிச் சேகரத்துத் துவாரவதி என்னும் பழைய தலைநகராகும். இம்மலைப்புறமே துவாரவதிப் பற்றாதல் ஐந்தாந்தரங்கம் 225-ஆம் சுலோகவுரையில் ''போலியசாகா'' என்னும் ஊர் வராஹமூலத் தருகிலுள்ள துவாரவதியிலுள்ளது என்று விளங்கவுரைத்தலான் அறியலாம். (Stein Rajatharangini, V-225) 215-ஆம் சுலோகத்தில் வீர நாகா என்ற ஊரைக் குறித்த இடத்தும் இவ்வூர் என உரைகாரர் உரைத்தனரென்ப. இப் பக்கத்துத் துவாரவதித் என்ற சிதைந்த பெயரின் ஓர்

பழைய ஊரும் உண்டு. இப்பக்கத்தைத்தரங்கினி நூலிலும் ''துவராதீஷுப்ரதேசேஷு'' துவாரா முதலிய பல இடங்களில் ஈசானதேவி என்னும் அரசி மாதரு காசக்கரக் கோயிலெடுத்தான் (Stein Rajatharangini I, 122) எனக் கேட்கப்படுதலாலும், ஆதியில் பிரயை நீரினின்று ஆதி வராஹமூர்த்தி உலகைத்தன் கொம்பினெடுத்து நிறுத்திய வாயில் (துவாரம்) உடைமையானும் இம்மலைக் கண் வாயிலேதான் இவ்வரசர் தொன்றுதொட்டு வழிபடும் ஆதி வராஹ மூலக்ஷேத்ரம் இருத்தலானும், வேள்நதியாகிய விதஸ்தாவுடைய பரிசுத்த பூமி, துவாரவதி எனப் பெயர் பெறுவதற்கு உள்ள இயைபெல்லாம் உணர்ந்து கொள்ளலாம். ஆல்பெருனி என்பவர் வராஹமூலத்தைத் ''துவார்'' என வழங்கினார். அவரிதனைக் காவற்படை வீடெனக் கூறினரர். (அல்புரூனி, India, I பு. 207) புறப்பாட்டுரைகாரர் ''துவராபதி யென்னும் படை வீட்டை ஆண்டு'' என்றார்.

இதனால் துவரையாண்ட என்றது, இந்தத் துவாரவதிநாட்டின் கண்ணுள்ள துவாரவதி என்றதலத்தை யாண்ட என்று கருதியதாகக்கொள்க. இந்நாடாளும் அரசர் தாம் இறக்குந் தருணத்திற்கு முன் இங்கு வந்து வதிதல் கேட்கப் படுதலானும் இதன் பழமையும், தூய்மையும், உயர்வும் உய்த்துணரலாகும். ''துவரை யாண்ட நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிர்'' என்றது, இத்துவாரவதியை அரசாண்ட நாற்பத்தொன்பது வழிமுறையில் வந்த ''வேள் குலத்தவர்'' என்றவாறாம். வேள்புலம் ஆண்ட அரசருள் 49-ம் வழிமுறையில் வந்தவன் ஜலௌகன் எனப் பெயர் சிறந்தவன். நீலநாகனை முதலாகவுடைய முன்னையரசர் ஐம்பத்திருவர் பாரத குரு பாண்டவர் காலத்திற்கு முந்தியவரென்று பெயருங்கூறாது கச்மீர சரித்திரங்கள் வாளா ஒழிதலான், இவரைப் பெருவேந்தராகக் கொள்ளாது. பாரத காலத்தவனான கோநந்தன் முதலாகவே கணக்கிட்டுக் கூறுதல் பற்றித் தெரிந்த அளவிற் சரிதங்கண்டு இங்ஙனம் கூறினா

ரென்க. நீலநாகன் வழியினர் பெயர் கூறப்படாதவர் சீராமர் காலத்தவர் அல்லது அவர்க்கு முற்பட்டவர் என்றும் அமையும். இதனால் கச்மீர வேந்தர் வழிமுறை பாரத காலத்தையடுத்துக் கோநந்தன் முதலாகவே உண்டாயினதென்று நன்குதுணியலாம்.

கோநந்தன் ஜராஸந்தனுக்குத் துணையாய்ச் சென்று வடமதுரையிற் பலபத்ரனை அலாயுதனாற் கொல்லப்பட்டான் என்றும், (Stein Raajtharangini I, 59) இவன் மகன் தாமோதரன் ஸிந்து நதிக்கரையிலுள்ள கந்தருவரால் (காந்தார நாட்டாரால்) ஏற்படுத்தப்பட்ட ஸ்வயம்வரத்துச் செருக்கிப்புக்குச்சக்கிரதரனால் உயிரிழந்தனரென்றும், இத் தாமோதரன் மனைவி யசோவதி என்பாள் கருவுற்றிருந்தானை அக்கண்ணபிரான் முடிசூட்டினன் என்றும் (I, 70) அப்போது பெண்ணரசாள்வதைக் குடிகள் வெறுக்கக் "கச்மீரதேசமே பார்வதியாம்" (I, 72) என்று கூறி அவ் வரசு நிலையிட்டனன் என்றும் (I, 70-78) தரங்கினி நூல் கூறும். இதனால் இவ்வரசு நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழியாகவும் சொல்லப்படும் என்று நினையலாம். பிறப்பு வழி கொள்ளாது முடிசூடும் வழியே அரசு வழி முறையாகக் கொள்ளுதல் சரித நூல்களிற் கண்டதேயாகும்.

உண்மையில் நீரில் மூழ்கிய பூமிதேவியை முதல் முதல் வராகமூர்த்தியாகி இறைவன் எடுத்து வெளிவந்த வாயில் வராஹத்வரா என்றறியப்படுதலால், அந்தத் துவாராவில் உண்டாகிய அரசர் நிலங்கள் தந்த நெடுமுடியண்ணல் வழியினராயினரென்பது நன்கு பொருந்தும். இவ்வராஹத்வாராவில் முதலில் உண்டாகிய சிறப்பால் வேளிர் தம்மை "இருக்கில் வரும் பெருந்தகைக்கு மெத்தனைக்கும் பழையோம்" (குலோத்துங்க சோழதேவர் பிள்ளைத் தமிழ் 95) எனச் சொல்பவராயினரென்க. சங்க நூல்கள் தொன்முது வேளிர்என்பதும் இக்கருத்தை பற்றிய

தேயாகும். புராணேதிகாச வரலாறும், சங்க நூல் வரலாறும் கொண்டு நோக்கின் வேளிர் அகத்தியருடன் தென்னாடு புக்கது பரசுராமாவதாரத்திற்கு முற்பட்டதாகும். பரசுராம னுக்கு முன்னே புகார்ப்பட்டினம் காந்தன் என்னுஞ் சோழனாற், காக்கப்பட்டமை மணிமேகலையான் (22) அறிக. ஜலௌகன் 49-ஆம் வழிமுறையானதால் ராஜ தரங்கினியால் (Indian Anliquary, Vol XVIII) உணர்க.

## இருங்கோவேள்

இவனையே கபிலர் என்னும் நல்லிசைப் புலவர் குறித் தனரென்பது. கபிலர், இவனுடைய அரிய பெரிய கொடைத் திறத்தையும் அவன் முன்னோர் வன்மையை யும் பாராட்டி "உவரா வீகைத் துவரையாண்டு நாற்பத் தொன்பது வழிமுறை வந்த வேளிர்" எனக் கூறியதனால் அறியப்படுவது. புறப்பாட்டுரைகாரர் ஈகைத் துவரைக் கேற்றாது வேளிர்க் கேற்றியுரைத்தல் காண்க. வேள் புலவரசராகிய சலௌக்கியர்க்கு மூலபுருடன் ஆதற்குரிய வன் சலௌகன் என்னும் பெயருடைமையும், வராஹமூல க்ஷேத்ரமுடைய (Stein's Cashmera Map) இந்நாற்பத் தொன்பதாமவன் வழிமுறையளவிற் கூறியது, இவன்பின் இந்நகரமாண்ட தாமோதரன் என்பவன் ஓரந்தணனாற் சபிக்கப்பட்டுப் பாம்பாயினன் (ராஜதரங்கினி) என்பது பற்றியெனக் கொள்ளலாம். உவரா ஈகை என்பது "வெறுப்பில்லாத கொடை" என்றார் உரைகாரர். மக்கட்டாசையை இரப்பார்கண் வெறுப்புண்டாதல்லது இரக்கமுண்டாகாமை நினைக. அவ்வாறிரந்தான்கண் வெறுப்பில்லாமல் பிறிதோருயிரைக் கொல்லாத நல்லரு ளால், தன் உடம்பையே உண்கவெனக்கூறிய கொடை வீரத்தையே ஈண்டுப் பொதுவாக வைத்துப் பாராட்டினா ரென்று கொள்க.

ஈவோன் பெருஞ்செயலை அவ்வழி முன்னோர் பலர்க்கும் வைத்துக் கூறுதல் ''தூங்கெயிலெறிந்தனரிங்கனோர்'' (புறம்-39) எனப்பாடுதலானறியலாம். தூங்கெயிலெறிந்த சோழன் ஒருவனேயாக (சிலப்) ஈண்டு எறிந்தமை என முன்னையர் எல்லோர்க்கும் ஏற்றுதல் கொண்டு இவ்வழக்கின் உண்மை தெளியலாம். அவ்வேளிருள் இருங்கோவெனப் பெயர் சிறந்தான் இவனென்க. ''சேட்டிறாங்கோவே'' என அழைத்தல் காண்க. இதன்கட் புளிகடிமாஅல் என்றது புலிக்கொடியைக் கடிந்தாமல் என்று இதனாற் புலிக்கொடியையுடைய சோழர்க்கு இவன் பகைவனாதல் குறித்தார். இவ்வேள் புலச்சளுக்கரைச் சோழன் வென்றபோது,

''கொடியணி யேனம் பொடியணிந்து கிடப்ப
வடதிசை வாகைசூடி'' (தொல். பொருள்)

—எனப் பாடுதலாலும் இப்பகைமை அறியலாம். அரசொடு பொருதலைக் கொடியோடு பொருதலாகக் கூறுவது தமிழ் வழக்கேயென்பது.

''பாண்டிலொடு பொருத பல்பிணர்த் தடக்கை
ஏந்து கோட்டியானை இசைவெங்கிள்ளி''

(நற்றிணை-141)

-என்று வருதலானறியலாம். இதன்கண் பாண்டில் என்றது பல்லவன் எருத்துக் கொடியை என அறிக. புலி, ஏனம், பாண்டில் மூன்றும் முறையே சோழர், சளுக்கர், பல்லவர் கொடியாதலுணர்க. இருங்கோவேள் குடிக்கும், சோழர் குடிக்கும் பகைமை உண்டென்பது, பட்டினப்பாலையுள் திருமாவளவன் ''இருங்கோவேள் மருங்குசாய'' வென்றுன் எனக்கூறுதலாலும் அறியலாம். இப்பகைமை இவ்விரு குடிக்கு நெடுநாள் தொட்டு உண்டாயதென்பது மிகப் பழைய கச்மீர வேந்தனான மிஹிரகுலன் என்பான்- தெற்கட் படையெடுத்து வந்து இலங்கையை வென்று மீள்பவன், சோளர், கருநாடர், இலாடர் என்பாரைத்

துரத்தியடித்துத்தான் என்று தரங்கினி நூலிற் (Stein, I: 300) கூறலானறியப்படுவது. இவ்வேள் குலத்துப் பெருந் தலைவனாக நன்னனென்பான் இருந்த எழில் மலையி லுள்ள செம்புறழ் புரிசைப் பாழியை, இளம்பெருஞ்சென்னி என்னுஞ் சோழன் தன்குடிக் கடனாதலிற் சென்று பொடி யாக்கினான் எனச் சான்றோர் தெளிவித்தலாலும் இவர் தொன்மைப் பகைமையறியலாம். இதனைச் சோழர் பெருமகன்,

''விளங்குபுகழ் நிறுத்த விளம் பெருஞ்சென்னி
குடிக்கடனாதலிற் குறைவினை முடிமார்
செம்புறழ் புரிசைப் பாழிநூறி
வம்ப வடுகர் பைந்தலை சவட்டிக்
கொன்றயானை'' (அகம். 375)

என்பதனால் நன்கறிக. இதன்கண் (வேளிருடைய) பாழி யழித்தல் சோழர் குடிக் கடனென்றும், அது முன்னைச் சோழர் தொடங்கி முடியாதகுறைவினை என்றும், அதனை முடித்தற்கு இவ்விளம் பெருஞ்சென்னி படையெடுத்துப் போய் அவர்க்குத் துணையாய் நின்ற வடுக வேளிரைச் சவட்டிப் பாழியை பொடி செய்தனன் என்று கூறுதல் காண்க. பாழி வேளிர்க்குரியதாதல்

''அணங்குடை வரைப்பிற் பாழியாங்கண்
வேண்முதுமாக்கள் வியனகர்க் கரந்த
அருங்கல வெறுக்கை'' (அகம்-372)

என வருதலானறியலாம்.

பாழி என்பது பாழிக்கொடி கட்டிய ஊர் எனக்கொள் ளலாம். பாழித்துவசம் வேள்புலச்சளுக்கர்க்குரியதென்பதும் இது பல்வகைக் கொடியும் எழுதியதோர் கொடி என்பதும் சாசனவல்லாரறிந்தனர். அக்கொடியுடைமையால் எழின் மலைக் கோட்டை பாழி எனலாயிற்றெனை நினைக. இவ்வாறே நன்னன் வேண்மானுக்குரிய பாரம் என்னும்

ஊர் இவர் முன்னையோர் வென்றியிற் பெற்ற பாரத் துவசத்தையுடையரெனத் துணியலாம். காச்மீரம் ஆண்ட மேகவாகன வேந்தன் (B.C. 24) கடற்கப்பாலுள்ள கரை யில் நாடு வென்றதற்கறிகுறியாக அவனுக்கு இலங்கை யரசன் பணிந்து தந்தது பாரத்துவசமென்பது (III, 78) ராஜதரங்கினியாற்றெரியலாம்.

இனி இருங்கோவேளைக் கபிலர் பாடிய க்ஷ புறப் பாட்டில் நாற்பத்தொன்பது என்பதனை நான்கு பத்தொன் பதாகக் கொண்டு எழுபத்தாறாக்கி அவ்வெழுபத்தாறாம் வழிமுறையை இத்தென்னாட்டு' வேளிர்க்குத் தலைமை யாகக் கூறினும் தரங்கினி நூலிற் கியைவதேயாகும். அது காட்டுவல், சலௌகன் 49 ஆமவன் என்பது முன்னரே கூறினேன். அவன் பின்னர் 27 அரசர்களைக் கூறி முதற்ற ரங்கம் முடிவது தரங்கினியிற் றெளியக் காணலாம். முதற்ற ரங்கத்திறுதியில் 76-ஆம் அரசனாகக் கூறப்பட்டவன் யுதிஷ்டிரன்-1 என்னும் பெயரினன் என்றும் அவன் விழி கள் மிகச் சுருங்கியிருந்தமையால் அந்த ராஜன் (குருட்டு வேந்தன்) என அழைக்கப்பட்டனன் என்றும் அவன் தனக் கில்லாத பெருமிதங்களை ஏறிட்டு மந்திரிகளைப் பழித்து ஒழுகினனென்றும், அவனை அமைச்சரும் குடிகளும் வெறுத்து நாட்டை விட்டோட்டினரென்றும், அவன் வேற் றரசர் நாட்டிற் புக்கிருந்தனனென்றும் அம்முதற்றரங்கங் கூறி முடிக்கும். இரண்டாமரங்கத் தொடக்கத்தில் அவ வந்த ராஜன் திரும்பவும் அரசெய்த விழைந்தனனென்றும் அவனுக்கு உசாத்துணையாயினராயுடனமர்ந்த உழையர் அவனைத் தடுத்து, அவன் முதிர்ந்த வயதிற்குத் தக்கபடி எல்லாவற்றையுந் துறந்திருக்க வேண்டி அவனைத் துர்க்க லிகா என்ற இடத்திலே வைத்தனரென்றுங் கூறும் வாயு புராணம் (5.124—128) தெற்கணுள்ள நாடுகளைத் தொகுக்குமிடத்துப் பாண்டிய, கேரள, சோள தேசங்களு டன் சூர்ப்பாகரம், கோளவனம், துர்க்காகளிகை என்பவற் றையுங் கூறுதலான் இது தென்னாட்டுள்ளது தெரியலாம்.

(vide vol. II, 336) தென்னாட்டை விட்டு வேற்றரசர் நாட்டுப் புக்கிருந்தனனென்று தரங்கினி நூல் கூறுதலான் இவனிருந்த துர்க்காசளிகா கச்மீரத்திலிருப்பதாக நினைப்பது பொருந்தாததாகும்.

## ஏழில் மலை

இனிச் சங்க நூல்கள் தென்னாட்டுக் கொண்கானத்துள் ஏழில்மலை என்று ஒன்றுண்டென்றும் அதன்கண் துர்க்கை கோயிலுண்டென்றும் அங்கே இப்பழைய வேளிர் அளவிறத்த பொன்னைப் புதைத்து வைத்திருந்தனரென்றும் அம்மலையில் நன்னன் என்னும் வேள் சிறந்து விளங்கினன் என்றும் அவன் மரபினர் அவ்வேழின்மலையிற் கானமர் செல்வியை (துர்க்கையை) வழிப்பட்டுப் பல நல்ல குதிரைப் படையை பெற்றிருந்தனரென்றும் கூறுதல் காணலாம். இம்மலையில் முதலிலிருந்த வேளிர் வேந்தன் குருடன் என்பது

''இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயும் அன்று நீன் குற்ற—மருள்தீர்ந்த
பாட்டு முறையும் பயிலா தன இரண்டு
ஓட்டைச் செவியு முள''

என்பதனாலறியக் கிடப்பது. இஃதேழிற் கோவை ஔவை பாடியது என்று பேராசிரியரும் நச்சினார்க்கினியருங் கூறுவர். (தொல். செய், 127) இப்பாடல் இவ்வேள் மரபின் வேந்தன் குருடன் என்பது பற்றி அக்குருட்டுத் தன்மையுடன் பாட்டுமுறையும் பயிலாச் செவியையுஞ் சேர்த்து இழித்தது ஆகும், ஏழில் மலை என்பது ஸப்த மாத்ருகா கோயில்களையுடைய மலையெனின் நன்கு பொருந்தும். இவ்வேழில்மலையடியில் மாதாய் என்னுந் துர்க்கை கோயிலும் ஆண்டு ஸப்தமாத்ருகா பிம்பங்களும் உண்மை இன்றுங் காணலாம். இந்த ஸப்த மாத்ருகா வழிபாடு காச்மீரத்துப் பண்டைக் காலத்துமிங்கிருந்ததென்றும் அம்மூர்த்தங்களுளெல்லாம் மிகவுயர்ந்ததுவராசிவடிவென்றுஞ்

சரித்திரகாரர் கூறுவர் (Tarangini,II 122.) இதற்கேற்பவே வேள் புலச் சளுக்கர்தாம் கிருத்திகை முதல் எழுவர் பாலுண்டு வளர்ந்தவரென்றும் கார்த்திகேயர் என்றும் கூறிக்கொள்வர். (Bombay Gazetter, vol I, Part II, Page 337) அவ்வழி பாட்டுக்குரிய தெய்வங்களைத் தான் தொன்முதிர் வேளிர், தாம் தங்கிய மலையிலும் நிறுவி அதற்கு ஏழில் என்று பெயரிட்டிருந்தனரோ என்று நினைத்தலும் தகும்.

''இருள் தீர் மணி விளக்கத் தேழில்'' என்பதும் ப்ரதர பாதித்தன் அரண்மனையில் ''அவன் (வணிகன்) இரவில் மணியாலாகிய விளக்குகளைக் கண்டான்'' (தரங், 4-15) என்பதும் ஒத்திருத்தல் காண்க. ஏழில்—ஏழு கோயில் ஏழின் மலையினொரு பகுதியாகிய பாழி என்னும் படை வீட்டை அணங்குடையதாகவே அகநானூறு ''அணங் குடை வரைப்பிற்பாழி'' (அகம் 372) எனக் கூறுதற்கும் இதுவே காரணமாகும். இம்மலையிற் சங்கப் புலவர் பாடிய குருட்டு வேளும் காச்மீரத்தினின்று வெளியேறிய அந்தராஜனும் ஒருவனென்று துணியின் அஃது இழுக்கா காது. ஸதிஸ்ரஸ் பார்வதி ஸரஸேயாம் என்பது சிவ பிரான் திரிசூலத்தைக் கொண்டு குத்திய வளவிற்றரையி னின்று பார்வதி விதஸ்தா நதியாகப் புறப்பட்டாள் எனத் தரங்கினி (iv. 30) கூறலான் அறியலாம். விதஸ்தா என்பது ஸதீஸரஸினின்றுண்டாகி வரும் நதி என்றும் இது பார்வதியே தன்னை உருமாற்றிக் கொண்டு வருவ தாகக் கருதப்படும் என்றும் தரங்கினி (I-29) கூறும்.

இந்த நல்ல நீரால் வளம்படுதல் நோக்கி இந்நாட்டைப் பார்வதி யென்றே வழங்குவர் என்பது ராஜதரங்கினி ''கச்மீர தேசமே பார்வதியாகும்'' (I-72) எனக் கூறுதலான் அறியப்படுவது. இதனால் இந்நாட்டினின்று தென் பதத்துக் குடியேறியவன், தன் தாய்நாட்டை மறவாது தன்னைப் பார்வதி புத்ரன், ஸதீபுத்ரன் என்று கூறிக்

கொண்டான் என்றும், அப்படிக் கூறியவனை வேள் எனவும் ஸதீபுத்ரன் எனவும் தென்னாட்டார் வழங்கினரென்றுந் தெளியலாம். தமிழில் வேள் என்பது பார்வதி மகனாராகிய குமரக்கடவுட்குப் பெயரென்பது நன்கறிந்ததாம். அசோகச் சக்ரவர்த்தி தென்னாட்டுவதிபவராகச் சோழ பாண்டிய கேரள புத்ரருடன் ஸதீயபுத்ரரையுந் தன் சாசனத்துள் எடுத்துக் காட்டலால் ஸதீயபுத்ரர் என்ற ஒரு வகை அரசர் வழியினர், தமிழ் நாட்டில் கி.மு. 227க்கு முன்னே வதிதல் தெரியலாம். இவர் ஸதீஸரஸில் உண்டான நிலத்தவராதலால் தம்மை ஸதீயபுத்ரர் என்று வழங்கினாரெனக் கொள்ளத் தடையின்மை காண்க.

## சதீயபுத்ரர்

இவ்வேளிர் முன்னே அகத்தியனாருடன் தென்னாட்டுப்புக்குவதித வேள் வேந்தர் வழியினராவர். தன் இனத்தவர் வதிதல் பற்றி அந்நாட்டுப் போந்து யுதிஷ்டிரனாகிய குருட்டு வேந்தனும் அவருடன் வதிதான் என்று நினையலாம். வேளிர் தமிழில் தம்மைக் குமரக் கடவுள் பெயரால் வேள் என்பது போலவே வேள்புலச் சளுக்கர் தம்மைச் சாசனங்களில் (Epi. Ind, vol., 19-8) க்ருத்திகை முதலாய தாயர் பாலுண்டவராகக் கூறுதல் காணலாம். இக்கருத்திற்கியைய முதற்றரங்கம் 29ஆவது சுலோகத்தில் ''குகோந்முகியினின்று பெருகும் விதஸ்தா நதியாகிய பால் நாகமுகத்தாலுண்ணப்பட்டும் சுவை குன்றாது ஒழுகும்'' எனக் கஷ்மீர நாட்டு விதஸ்தா நதிப் புனலை உண்பவராகிய நாக குலத்தவரைப் பார்வதிபாலுண்பவராக வருணித்தல் காணலாம். இதன் கண் குகோந்முகி என்பது குகனிடத்து அன்புடைய பார்வதி எனவும், குகைகளினின்று புறப்படுகின்ற நதி எனவும் பொருள் கொள்ள வைத்த சிலேடையாம். நாகமுகம் என்பது இந்நாட்டிலுள்ள நாக குலத்தவர் வாய் என்றும், விநாயகக் கடவுள் உடைய யானை வாயென்றும் பொருள் கொள்ள வைத்த சிலேடை

யாம். இவற்றால் வேளிர் ஸதீபுத்ரர் எனவும் வேள் என வும் பெயர் சிறந்து விளங்கிய காரணம் நன்குணரலாம். பார்வதி புத்ரர் ஸதீயபுத்ரர் என்ற உண்மையானன்றே பிற்காலத்து இக்குலத்தவர் பிள்ளையெனப் பட்டம் புனைகின்றனரென்று உய்த்துணரலாகும். பார்வதியம்மை திருமுலைப்பாலுண்ட அந்தணக் குழவியை ''உடைய பிள்ளை'' எனச் சேக்கிழார் வணங்குதலுங் காணலாம். இக்குலம் ஸதீஸரஸிற்றோற்றஞ் செய்ததையும் ''நாடே பார்வதியாம்'' என்று தரங்கினி (I.72) கூறிய வரலாற்றையும், இந்நெடுங்கால தூரத்தும் மறவாமல் வேள், பிள்ளை என்றும் பெயர்கள் தங்கட் பொதிந்து கொண்டு நுணுகி நோக்குவாருள்ளத்து உண்மை வெளிப்படுத்தி மகிழ் விளைத்து விளங்குதல் காண்க. திருக்கோவிலூர் அருகே சதீய புத்ரர் எனப்பெயர் பொதிந்த பிராமி எழுத்துக்கள் அண்மையில் கிடைக்கப்பெற்றன.

இனி வேள்புல வேந்தரும் சலௌகன் வழியினரும் ஆகிய சளுக்கியர் தம் சாசனங்களில், தம்மை ஸத்யாச்ரய குலதிலகன் என்று கூறிக் கொள்ளுதல் காணலாம். (Epi. Ind, vol. 3-1) ஸதியாச்ரயன் என்பதற்கு ஸதியத்தை ஆச்ரயித்தவன் என்றும் ஸதீயை ஆச்ரயித்தவன் என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விரண்டனுள் ஸதியை ஆச்ரயித்தவன் என்பதே இச்சளுக்கியரை வேள்புலத்தவரென நிகண்டுகளுஞ் சாசனங்களுங் கூறும் வரலாற்றிற் கியைதல் நன்கு கண்டுகொள்க. தென்னாட்டுத் தமிழ் மூவேந்தருடன் ஸதீயபுத்ரர் உள்ளனரென்று அசோக சாசனங் கூறுதற்கும் (Asokas Edicts 2) பொருந்த நோக்கின் ஸதீயை ஆச்ரயித்தவர் என்பதே தக்கதாதல் காண்க. ஸதீய புத்ரர்—ஸதீயினுடைய புதல்வர். இஃதின்னுமொரு வழியாலுந் தெளியலாம். தரங்கினியில், இலங்கை வென்று மீளும் போது தமிழ் நாட்டுச் சோழனை ஓட்டியவனாகக் கூறப்பட்ட மீஹிரகுலன் (கி.மு. 707) என்னுங் கச்மீர வேந்தன் சந்த்ர குல்யா

என்னும் நதி வெள்ளத்தை வேறு வழியாகச் செல்லவிடும் போது ஓர் பாறை பெருந்தடை செய்ததென்றும், பலர் பல தரம் முயன்றும் அது பெயர்க்கப்படாமையால் வருந்தி விரதம் புகுந்த அவ்வரசன் கனவில் தேவர் வந்து, ''இப் பாறையிற்பிரமசரியஞ் சிறந்தயவஷன்ஒருவன் உள்ளனன். பாறையை ஒரு கற்புடையாட்டி தொட்டால் அவன் அகல் வன்'' என்று கூறக் கேட்டுத் தன்னாட்டுள்ள உயர் குடிப் பெண்டிர் பலரையும் பாறையைத் தொடும்படி செய்தும் பயனின்றான நிலையில் ஓர் வேட்கோக்குலத்து (குயக் குலத்து) நற்பெண் **சந்திராவதி** என்பாள் நினையாது தொடநேர்ந்தவுடன், அப்பாறை இடம் பெயர்ந்த தென்றும், அதனாற் பிற மகளிர்பாற் கடுஞ்சினம் கொண்டு அவ்வரசன் அவரையெல்லாங் குடும்பத்தோடழித் தனன் என்றும் முதற்றரங்கம் (318—322) கூறுதல் காண லாம். இங்ஙனந் தெளியப்பட்ட கற்புடையாட்டியாகிய **சந்த்ராவதி** என்னும் நற்பெண் ஸதியாதலால் அந்நாட்டில் அவள் வழியில் வந்தவரும் அவளைத் தாய்போற் போற்றி ஆச்ரயித்தவரும், ஸதீயபுத்ரர், ஸத்யாச்ரயர் என்ற பெயர் பெற்றனரென்றும், அக்கச்மீர தேய வரலாற்றி னோடே பொருந்துதல் காணலாம். வேட்கோக் குல மகளைத் தெய்வமாக வழிபட்ட நாடு வேள்புலம் எனக் கொள்ளப்பட்டு அந்நாட்டவர் வேளிரென வழங்கப்பட்ட ரென்பதும் இயைதல் காண்க. இவ்வேளிர் மகளிற் கற்பி னாற் சிறந்தவரென்பது. இவருடைய நல்லொழுக்கங்களை நேரிற்கண்டு அருமை பாராட்டிய நல்லிசைப் புலவர் வேள் பாரி நாட்டைக் கூறியவிடத்து அந்நாட்டு வேண் மகளிர் கற்புடைமையையே எல்லா நாட்டிலுஞ் சிறப்பித்துப் ''பிற நாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி—பற நாட்டுப் பெண்டிரடி'' என்று உலகறியச் சாற்றுதல் கண்டு உண்மையுணரலாம். இப்பறநாட்டுப் பெருங் கொற்றனா ரும் அகப்பாட்டில் (323) ''தடவரவொதுக்கஞ் தகைகொள வியலிக்காணிய அம்மோ கற்புமேம் படுவீ'' எனப் பாடிய தனையும் ஈண்டைக்கு ஏற்ப நினைக. நாட்டார் கற்புடை

யாட்டியைத் தங்குலத்தவளாகக் கொள்ளுதல் கண்ணகியை ''எங்கோ மடந்தை'' என இளங்கோவடிகள் வாழ்த்துக் காதை இறுதியிற் கூறிக் காட்டலானறிக. வேள் என்பது ஈண்டுக் கூறிய குயக்குல நற்பெண்டிர் வரலாற்றிற்கியைய, அஸிரிய நாட்டுப் பழமொழியில் பாளைக்குப் பெயராதலும் நோக்கிக் கொள்க.

இக்கற்புடை வேட்கோப் பெண்டினின்று வேள் என்னும் பெயர் விருதாகப் புனையப்பட்டு அதுவே நாளடைவில் அரசுக் குடிபெயராயினதென்று பொருத்தங் கூறலாமெனினும் உண்மை பார்வதியாகிய ஸதீபுத்ரன் வேள் என்ற வரலாற்றின் கண்ணேதான் உள்ளதென்று கருதுகின்றேன்.

## காஷ்மீரமே வேளிர் வதிதல் இடம்

மிகவும் பழமையான பாரஸீக மொழியில் வேள் (wail) என்னும் பெயர் தமிழ் வழக்கொடு மாறுபடாமற் பிரபுக்களுக்கும், ராஜகுலத்தவர்களுக்கும் வழங்குதல் காண்பது பெருவியப்பைத் தருவது, மேல் நாட்டும் தென்னாட்டும் இவ்வேளென்னும் பெயர் இப்படி ஒத்த பொருளில் வழங்கற்கு மூலம் ஆதிவராஹ மூலத்வாராவையுடைய துவாரவதி நாடாகிய காஷ்மீரத்தை ஆண்டு வந்த மக்கள் குலமே என்க.

இவற்றிற்கியைய இக்காஷ்மீர நாட்டு நீலநாக குண்டத்தை ''வேணாடு'' என வழங்குவதும் பத்மநாகன் இருக்கும் பத்ம ஸரஸுள்ள இடத்தை வேளூர் என வழங்குவதும் விதஸ்தா நதியை வேள் எனக் கூறுவதும் நூல்களிற் கண்டு கொள்க.

காஷ்மீர ராஜ பரிவாரத்தில் வேளாவிட்டா எனப்பெயர் சிறப்பாக உண்டென்றும், இவனைத் தகுதி பற்றிப் பெரு வேந்தன் மண்டலேசனாக்குவது வழக்கமென்றும்

தெரிகின்றேன். இவ்வுண்மை அரசன் ''வேளாவிட்டாவை மண்டலேசனாக்கினான்'' (தரங்கினி vI. 73) எனக் கூறுத லான் அறியலாம். அகநானூற்றில் 29ஆம் பாடலைப் பாடிய நல்லிசைப் புலவர் வேளாவிட்டனன் எனப் பெயர் சிறத்தல் கண்டு கொள்க. இப்பெயர் வழக்கம் காஷ்மீர தேயத்தினின்று தெற்கண் வந்ததென்று நினையலாம். வேளாவிட்டா அரசவையில் வேளைக்கணியாவன். இவன் நிலையிலுயர்ந்தவனாதல் ''மூவகைக் காலமு நெறியி னாற்றிய வறிவன்றேயமும் (தொல். புறத் 20) எனத் தொல்காப்பியனார் கூறியதனானறியலாம். அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் வேளாண் சாமந்தர் என்றார் (சிலப். 5, 45) இவற்றால் சிங்களத்தும் பழைய சங்கத் தமிழ் நூலினும், காஷ்மீர சரிதங்களினுமே வழங்கப் படுகின்ற இவ்வரிய ''வேளாவிட்டா'' என்னும் பெயர் கொண்டு இத்தென்னாட்டிற்கும் முற்காலத்தே ஓர் தொடர்புண்மை உய்த்துணரலாகும்.

இனித் திவாகர நூலார் ''வேளிரும் புரோசருங் குறுநில வேந்தர்'' எனக் கூறுதல் காணலாம். இதனாற் குறுநில வேந்தரான வேளிர் புரோசர் எனவும் பண்டைக் காலத்து வழங்கப்பட்டனரெனத் தெரிவது. ப்ரோஜர் என்பது முற்றோன்றியவர் என்று பொருள் படுவதாகும். வேளிரை சங்க நூல்களிற் பல்லிடத்தும் ''தொன்முது வேளிர்'' (புறம் 24: அகம் 258) ''தொன்று முது வேளிர் (குறுந் தொகை:164). (நற்றிணை 280) 'எவ்விதொல்கு (புறம். 202) எனவும் வழங்குதலான் இவர் முற்றோன்றி வராகக் கருதப்படுதலறியலாம். இதனுண்மை ''நிகர்த்து மேல் வந்த வேந்தனொடு முதுகுடி, மகட்பாலஞ்சிய மகட் பாலானும் (தொல்—புறத் 77) என்பதனுரையில் உரை ஆசிரியர் ''முதுகுடி வேளாண்குடியினைக் குறித்தது'' என வரைந்து அதற்குப் பெருஞ் சிக்கல் கிழான் மகட் கொடை மறுத்ததென்று ''நுதி வேல் கொண்டு நுதல்விய துடையா'' என்னும் புறப்பாட்டை உதாரணங்காட்டு

லாலும் அறியலாம். காசிபர் கடலில் நீர் வற்றிய போதில் ஆதித்தோற்றம் இவர்க்குக் கூறுதலானும் இவர் பழமை உய்த்துணரலாகும். ''வடபாற்று வரையாண்டு 49 வழி முறை வந்த வேளிர்'' (புறம், 201) என்று கபிலர் கூறிய தனால் இவர் தோற்றம் தென்னாட்டின்கண் ஆகாமை துணியப்பட்டதாம். இவற்றால் வடநாட்டுள் இவர் புரோசர் என வழங்கப்பட்டதன் காரணம் உணரலாம். இனி இக் குலத்து ஆண்மக்கள் வாய்த்த இடத்துத்தன்மையும் உதவும் பெருவன்மையுடையரென்பது சலௌகன், மேகவாகனன் முதலிய கச்மீரமாகிய வேள்புல வேந்தர் வரலாற்றால் நன்கறியப்பட்டது. இதனால் உபகாரத்திற்கே வேளாண் வேளாண்மை முதலிய சொற்கள் வழங்கலாயின. ''வேளாண் பெருநெறி'' என்பது தொல்காப்பியம். வேளாண்மை உபகாரியாந்தன்மை என்பர் பரிமேலழகர் (குறளுரை, 613). இவ்வழக்கு வேள் என்னுங்குடிப் பெயரடியாக உண்டாயினதென்பது இத்தென்னாட்டு மொழியினுமல்லாமல் புத்தர் மதக் கொள்கைகள் நிறைந்த வடநாட்டுப் பாலி மொழியிலும் பயிலக் காணலாம. அம் மொழியில் ''வேளாமா'' என்பவன் பரமோபகாரி ஆவன். புத்தக ஜாதக சரிதையில் மாரன் இரந்தவற்கு ஈந்தால் இரும்புருகும் தீ நரகில் நின்னை வீழ்த்துவல் என்ற போதும் ஈந்து புத்தர் தீ நரகில் வீழத் துணிதல் கூறும் (ஜாதக சரிதை vol. I பக். 228, 101. கேம்பிரிட்ஜ் மொழி பெயர்ப்பு) புத்தர் எல்லாவற்றையும் வழங்கும் வேளாமா ஆகிய பார்ப்பனன் ஒருவனுடன் நட்பு கொள்ளுதலும், ஏழு உயர்த்த விலைப்பொருள்களை இந்நாவலந் தீவு நடுங்கும் படி பிறர்க்கு வழங்குதலும் வேளாமாஸூக்தம் கூறும். வேளாம என்பது வேளாந்மா என்பதன் மரூஉவாகும். இமயமுதற் குமரிவரை இவ்வழக்கு உபகாரத்திலே ஒத்துப் பயிலல் இவற்றானுணர்க. ''வேளான் பெரு நெறி'', (தொல் கள 24) என்புழி இளம்புரணரும் ''வேளான் சிறு பதம்'' (புறம் 74) என்புழிப் புறப்பாட்டுரைகாரரும் வேளாண்மை உபகாரமென்று கொள்ளுதல் காண்க.

''வேளாண்வாயில்'' (பொருநராறு 75) உபகரிப்பதற்கு வழி என்றார் நச்சினார்கினியர்: இவற்றால் இச்சொற்குப் பிறர் விருப்பத்தை ஆளுந்தன்மை என நல்லுரைகாரர் கொள்ளாது உபகாரியாந் தன்மை உபகாரம் எனப் பொருள் கொள்ளுதலே காணலாம். இதனால் வேள் என்பது உபகாரிக்குப் பரியாயநாமா ஆதல் தெரிக. ''வேளாளனென்பான் விருந்திருக்க வுண்ணாதான்'' என வருவது காண்க. வேள் குலத்திற்கே சிறந்த இப்பண்பு, அறம் பூண்டு பாரியும் பரிசிலரிரப்பின் வாரேன் என்னாள் அவர் வரை அன்னே'' (புறம் 108,) என வருதலான் அறியலாம்.

கபிலர் பாடிய ''உவரா ஈகைத் துவரையாண்டு நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிர்'' (புறம் 201) என்புழி ஈகையைச் சேய்மைக்கண் உள்ள வேளிர்க்கு ஏற்றாது, அடுத்துக் கிடந்த துவரைக்கேற்றிக் கூறினும் இக்கச்மீர நிலத்திற்கு நன்கு இயையும். உவரா ஈகைத் துவரை என்பது தன்கண் வாழ்வார் வெறுக்காத ஈகைப் பற்றிலுள்ள துவரை எள்றவாறாம். ஈகை என்பது வராஹ மூலத்வாரத்திற்கு அணித்தாய் விதஸ்தா நதி (வேள் யாறு) யை அடுத்துள்ள யக்ஷத்வாரா என்னும் மலைப்பிளவின் அடையாளங் குறித்தற்குரிய பெயரென நினையலாம். இந்நாடு நாகர்க்கு முன்னர் யக்ஷர் இருந்ததென்பது ராஜ தரங்கினி வல்லார் கண்டது (Steine R.T, பக். 184). யக்ஷ தேசம் யட்சிகா எனப்பட்டு, அதுவே ஈக், ஈகை என்ப தாகச் சிதைவாய் வழங்கலாயிற்று. இக்காச்மீரத்து ஸ்ரீநகர்ப்புறத்து (ஈக்காம் (yeghgam) என்ற ஊரும், ஈக் (yeeh) என்ற நாடும் உள்ள உண்மை நோக்கிக் கொள்க. கச்மீரம், காசிபர் நகரைக் குடியேற்றுதற்கு முன்னே பிசாசரால் நிறையப் பட்டிருந்ததென்பர். ''கச்மீர மக்கட்குப் பேய்க் குலத்தவர் தொடர்பொழியப் பார்வதியை நதியாக ஒழுகும்படி காசிபர் வேண்டினர்'' (Steine. R.T, II, 411) என்ற வரலாறுண்மையால் இஃதறி

யலாம். ஆதியில் யக்ஷிக தேசமாகி அதுவே ஈகை நாடெனப்பட்டு அதன்கண் உள்ள **துவராவதி** ஈகைத்துவரை எனக் கூறப்பட்டதெனத் துணியலாம். இதனாற் குசஸ்தலி த்வாரவதியாகிய கண்ணபிரான் ஊரைவிலக்கியதாமென்று கொள்க. கண்ணபிரான் துவரை ஓகை மண்டலத்துள்ளதாய் ஓகைத் துவரை என்பது கருதி, அஃதல்லாமைக்கு ஈகைத்துவரை என்றாரெனக் கொள்க. (Imperial Gazetteer vol.26) Map of Sind & Baroda. பார்க்க) எங்ஙனங் கொண்டு நோக்கினும் இவ்வரிய கபிலர் புறப்பாடலிற் குறித்தன முழுதும் கச்மீர தேச சரித்திரத்தொடு நன்கியைந்து பண்டை வரலாற்றுண்மை விளக்கி நிற்றல் கண்டு கொள்க. மகாபாரதம் கர்ணபர்வம் 41ஆம் பகுதியில் வாஹி என்றும் ஹீகா என்றும் இருவகைப் பிசாச குலம் உண்மை கேட்கப்படுவது. அந்த ஹீக ஜனர் ஆதியில் இருந்தது பற்றி ஈகை நாடு இஃதாயிற்று. ஈகைத் துவரை என்பதனால் நாடு குறித்து ஊர் குறித்தாரென்பது நன்கு பொருந்தும்.

## துவாரபதி: ராஜதரங்கினியில் கண்டது

ஈண்டுக் குறித்த **துவரை** யாகிய துவாரவதியைப் பற்றிக் கஸ்மீர ராஜதரங்கினி மொழி பெயர்த்த கனம் M.A. Steine என்பவர் கூறுவதை இங்கே தருகிறேன். ''இவ்வாறு குறிக்கப் பெற்ற பழைய எல்லைப் புறத்தின் கீழ் உள்ள பள்ளமான நிலம் இப்பொழுது துவாரபதி என்று வழங்கப்படுகின்றது. அதன் பழைய பெயர் ராஜதரங்கினியின் பழையவுரையொன்றால் நமக்குக் கிடைத்துள்ளது அவ்வுரை பொலியசாகை என்பது துவாரவதிக்குள் உள்ளதாகக் கூறுகின்றது. இத்தலத்துள்ளாரைக் கேட்டதில் பொலிய சாகாவிலிருந்து சிறிது தூரத்திலுள்ள ஒரு மேடே பழைய துவாரவதியின் கீழ் பாலெல்லையாக இன்றைக்கும் குறிப்பிட்டுக் காட்டப்படுவது அறிகின்றோம்.

விதஸ்தா நதி (வேள் யாறு) ஓடுகின்ற ஒரு பள்ளத்தாக்கிலுள்ள பிரதேசம் **துவாரவதி** யாகும் (vol. II 404)

## தமிழ் வழக்குகள்

இவற்றாற் கபிலர் வேளிர் வடபால் ஆண்டதாகக் கூறிய பழையவூர் இஃதென ஐயமறத் தெளியலாம். இனிச் சங்கத்துப் பத்துப் பாட்டினும் எட்டுத் தொகையினுங் காணப்படாது சிலப்பதிகாரத்துப் பாண்டியர்க்குக் கூறிய கடல் வடிம்பலம்ப நின்றதும், மழை பிணித்தாண்டதும், இக்கச்மீர வேந்தர் செயல்களாக பழங்கதைகளைத் தொகுத்துக் கூறிய தரங்கினியிற் கேட்கப்படுதலான் இத்தென்னாட்டிற்குங் கச்மீர தேசத்திற்குமுள்ள பழந்தொடர்பு இனிது உய்த்துணரலாம். வேள் நதி பாயும் நிலத்துள்ளான் பழங்கதையும் பாண்டி நாட்டுப் பழஞ்செய்தியும் பலபடியாக ஒத்திருத்தலை உணர்ந்து கொள்ளுமிடத்து அந்நாட்டிற்கும் நந்தென்னாட்டிற்கும் பண்டே நேர் தொடர்புண்மை இனிது துணியப்படுமென்க. காந்தார தேசத்தினின்று (கந்தருவ நாட்டினின்று) கச்மீரத்தை ஆளுதற்குக் கொணரப்பட்ட மேகவாகனன் என்னும் வேந்தன் எவ்வுயிரையும் கொல்லா விரதமுடையவனென்றும், அவன் தென்னாட்டு ரத்நாகரம் என்னும் கடற்கரையிற் பனைமரப் பொழிவிற் படையுடன் வந்திறங்கிய போது, அங்கு ஒரு துர்க்கை கோயிலையும், அதன் முன்னர் ஒருவன் தலை கவிழ்ந்து நிற்பதையும், ஒரு முரட்டுக் கிராதர் தலைவன் அவனை வாளாலரிய ஓங்கியதையும் கண்டு பொறானாகி, வேடர் தலைவன் ஒருவன் தன் மகளிற்கு நோய் நீங்க வேண்டி இவ்வாறு நரபலியிடப் புகுவதை வினவியறிந்து ஆங்குத் தன்னைப் பலியிடும்படி அவ்வேடர் தலைவனையிரந்தனன் என்றும், அவ்வமயம் கடற்தெய்வமாகிய வருணன் அவ்வரசன் எதிரே தோன்றி, இவன் அவளுடைமையை வியந்து

பாராட்டி அவ்வரசன்கணுள்ள தன் குடையை மீளவும் இரந்து பெற்று உவந்து அவனை வரங்கொள்க என்ற அளவில், அவ்வரசன் தானும் தன் படையும் இலங்கை வெல்லற்குச் செல்ல வேண்டற்கண் உதவுக என்றனன் என்றும், அது கேட்டுக் கடற் கடவுள், அவன் படையுடன் கடலில் நடந்து செல்லும் வண்ணம் கடல்நீரை இறுகச் செய்து வழிவிட்ட அளவில், அதன் மேற் காலால் நடந்து இலங்கையிற் சென்று வீடணனால் (வீடணன் வழியி னனால்) உபசரிக்கப் பெற்றுக் கடற்கரைக்கப்பாலும் வென்றதற்கறிகுறியாகப் பாரத்துவசமும் அளிக்கப் பெற்று மீண்டனன் என்றும் மூன்றாந் தரங்கம் (29 முதல் 78 வரையும்) கூறுதல் காணலாம். இம்மேக வாகனனே மேகத்தைச் சிறையிட்டனன் என்பது தரங்கினி 21முதல் 26 வரையில் உள்ள சுலோகங்களிற் கண்டு கொள்க. கடற் றலைமிதித்து நடந்த இக்கதையினையே ''அடியிற்றன்னள வர சர்குணர்த்தி'' (சிலப். காடு) என்பதனால் இளங்கோ வடிகள் குறித்தாரென்னலாம். அடியார்க்கு நல்லார் இவ் விடத்து ''முன்னொரு காலத்துத் தனது பெருமையின தவவை அரசர்க்குக் காலான் மிதித்துணர்த்தி வேலா னெறிந்த பழம் பகையினைக் கடல் பொறாது'' என உரை கூறுதலான் உண்மை உணர்க. ஈண்டுக் காலான் மிதித்து என்றது அக்கடற்றலையில் இவ்வரசன் மிதித்து நடந்த தனைக் குறித்ததென்பது தெள்ளிது. இவ்வுதவியைப் பாராட்டி இவ்வரசன் முந்நீர்க் கடவுட்கு விழாவெடுத் திருக்கலாம் என்று நினைதல் பொருந்தியதாகும். ''முந்நீர் விழாவின் நெடியோன்'' (புறம். 9) என்பதற்குப் பழையவுரைகாரர்

''கடற்றெய்வத்துக்கு எடுத்த விழாவினையுடைய நெடியோன்'' எனக் கூறி முந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்றான் என்ற வியப்பால் நெடியோன் என்றார் என விளக்குதல் காண்க. இக்கதையினுண்மை மேல் அழற்படு காதைக் கண் இந்நெடியோனாகிய பாண்டியனை வருண பூதத்திற்குவமை கூறிவிடத்துச்

''சாளி யயினி பொற்கலத் தேந்தி
யேலு நற்சுவை யியல்புளிக் கொணர்ந்து
வெம்மையிற் கொள்ளுமடையினன் செம்மையிற்
பவளச் செஞ்சுடர் திகழொளி மேனியன்
நாற்கடல் கால மாள்வோன் றன்னின்
முரசொடு வெண்குடை கவரி நெடுங்குடை
உரைசர வங்குசம் வடிவேல் வடிகயி
றெனளிவை பிடித்த கையின னாகி
எண்ணருஞ் சிறப்பின் மன்னரை யோட்டி
மண்ணகங் கொண்டு செங்கோ லோச்சிக்
கொடுந்தொழில் கடிந்து கொற்றங் கொண்டு
நெடும்புகழ் வளர்த்து நானிலம் புரக்கும்
உரைசால் சிறப்பு நெடியோன் ...
அரைச பூதத் தகுந்திறற் கடவுளும்''
(சிலப்பதிகாரம்)

எனக் கூறியதனாலுணரலாம். ஈண்டு ''நெடியோன்'' உலகளந்தானல்லாமல் பாண்டியன் என்றும் அரும்பதவுரைகாரர் கூறுதல் காண்க. இங்கே கொடுந்தொழில் கடிந்து கொற்றங் கொண்ட செய்தி, மேகவாகனற்கு ஒப்பது அவன் எவ்வுயிருங் கொல்லாது உலகு வென்று கொண்ட அரிய செயலாதல் உணர்க.

பாண்டியனாகத் துணியுமிடத்துப் புரக்கும் உரைசால் சிறப்பு என்றதற்கு நானிலம் புரக்கு முறைமைந்த சிறப்பு என்க. பிறரை வருத்தாது எல்லா அரசரையும் வென்ற அரிய சிறப்பினையே ஈண்டுக் குறித்தாரென்பது தெள்ளிது. மேகவாகனன் இலங்கையிற் சேரற்குக் கடலைக் கடப்பது எங்ஙனமென்று தென் கடலாகிய இரத்தினாகரத்தின் கரையிற் படையுடன் தங்கி ஆராயும் போது கடற்கரையடுத்த காட்டில் ''மேகவாகனன் ஆட்சியிலும் யான் இவ்விதம் கொல்லப்படுகின்றேன்'' என்ற அழுகுரலைக் கேட்டனன் என்று தரங்கினி (III. 30-31) கூறுதலான் இம்மேகவாகனன் இமயந்தொட்டுக் குமரி

வரையுள்ள இந்நாவலந்தீவு முழுவதையும் ஆண்டனன் என்பது புலனாகும். இங்ஙனம் அன்றாயின் தென்கடற் கரையிற் சாமுண்டி கோயிலின்முன் நரபலியிடப்படுவான் ''மேகவாகனன் ஆட்சியிலும் எனக் கூவியழுதல் இயையா தென்றுணர்க. இதற்கியையவே மதுரைக் காஞ்சியிற் பண்டைப் பாண்டியரைத்

''தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா வெல்லை
தொன்று மொழிந்து தொழில் கேட்ப,
வேற்றமொடு வெறுத் தொழுகிய
கொற்றவர்'' (அடி. 70—72)

எனக் கூறுதல் நினையலாம். இவன் (மேகவாகனன்) வெற்றி விருப்பம் மக்களை அச்சத்தினின்று விடுவித்து வைக்கும் வீரத்தொடு கூடி ஜிநதேவனாலும் பொறாமைப் படும் வண்ணம் விளங்கியது (ஷை. III. 28) என வருதற்கும் ''கொலை வென்றியொடு வெறுத்து கொல்லா தொழுகிய கொற்றத்தையுடையவர்'' என மதுரைக் காஞ்சி நூலார் கருதியதற்கும் இளங்கோவடிகள் ''கொடுந்தொழில் கடிந்து கொற்றங் கொண்டு ... உரைசால் சிறப்பிநெடி யோன் என்றதற்கும் உள்ள ஒற்றுமையை நோக்கிக் கொள்க. நச்சினார்க்கினியர் மதுரைக் காஞ்சியில் வெற்றி யொடு வெறுத்து — வென்றியொடு செறிந்து என உரை கூறினார். நல்லது தேறுக. பாண்டியர் தலைநகர்க்கும் கச்மீர தேயத்திற்குமுள்ள தொடர்பு புராண கதைகளிலுங் கேட்கப்பட்டதேயாகும். கல்லானைக்குக் கரும்பருத்திய திருவிளையாடலில் மதுரைக்கு வந்த ஸித்தர் தம்மை கச்மீர நாட்டவரென்று கூறுதலான் இஃதுணரலாம். ''ஆனாலுமிப்போதறிகாஷ்மீர நாட்டிற்காசிதானாமிருக் குந் தலமாகும்'' என வருதலானறிக. ஈண்டுக்காசி என்றது காசர் இருப்பாகிய ஊரினையென அறிக. தரங் கினியிற் ''காசாலயம்'' என (IV. 56, 58) வருதலான் உணரலாம். காசர் கச்மீரத்திற் சிறந்த குடியினராவர்.

இவரே தமிழ் நாட்டு ஒளியர் எனப்பட்டாரென்றும் இவர் நாக நாட்டினின்று குடியேறியவராதலான் ஒளி நாக ரென்று தென்னாட்டாரான் வழங்கப்பட்டனரென்றும் துணியலாம்.

இனி இப்பாண்டியர்க்குரிய பொதியமலையில் அரசு செலுத்திய ''வேள் ஆஅய்'' என்பவன் ''நீலநாக நல்கிய கலிங்கம் ஆவமர் செல்வற் கமர்ந்தனன் தொடுத்த (சிறுபாண். 96—97) வரலாறு சிறுபாணாற்றுட் படையிற் கேட்கப்படுவது. ஈண்டுக் குறித்த நீலநாகம் கச்மீரதேசத்து நீர்நிலைகட்கெல்லாந் தலைமை நாகதேவதை என்று துணியலாகும். கலிங்கம் என்பது அக்கச்மீரத்துத் தலை சிறந்த கம்பளப் போர்வை ஆகும். ஆஅய் என்னும் பெயர் அஹி (நாகம்) வழியினன் என்று பொருள்படும் ''ஆஹய'' என்னும் மொழியின் றிரிபாகும். இதற்கேற்பவே அவனை ''அண்டிரன்'' என்பதும் அஹீந்த்ரன் என்பதன் மரூஉ ஆதல் உணர்க. இது மஹேந்த்ரன் என்பது மயேண்டன் என வந்தாற் போல் வது மயேண்டன் என்பார் எட்டுத் தொகையிற் கண்ட புலவர் ஆவர். இவ்வேள் ஆஅய் நாகர் வழியினனென்பது கருதியே ''வழைப்பூங் கண்ணி வாய் வாளண்டிரன்'' எனப் பாடப்பட்டனன் என உய்த்துணரலாகும். வழைப் பூங்கண்ணி நாக மலர் மாலை யாதல் உணர்க. இனிப் பேகன் என்னும் வள்ளல் ''அருந் திறலணங்கின் ஆவியர் பெருமகன்'' (சிறு பாண் 86) ஆவி யர் கோ (புறம் 141) என வழங்கப்படுதல் கற்றாரறிவர். இவன் முன்னோன் ''வேளாவி'' எனப்பெறுதல் ''முழு வுறழ்திணிதோள் நெடு வேளாவி, பொன்னுடை நெடு நகர்ப் பொதினி''(அகம் 61) என வருதலான் அறியலாம். இங்ஙனமே பதிற்றுப் பத்துப் பதிகங்களில் வேளாவிக் கோமான் (6—ஆம் பத்துப் பதிகம்) எனவும், வேளாவிக் கோமான் பதுமன் (4ஆம் பத்துப் பதிகம்) எனவும் வருதல் அறியலாம். ஈண்டு ஆவி என்றது நீர்நிலையாகிய வாவியாய் அதனாற் பெயர் பெற்றானைக் குறிப்பதாகும். கச்மீரத்து நீர்நிலைகளெல்லாம் நாகம் என்ற பெயரால்

வழங்கப்படுதல் அவ்வந்நீர்நிலைக்கு ஆதிதெய்வமாகிய நாகத்தைப் பற்றியதென்று முன்னரே காட்டினேன். இவற்றுட் பத்ம நாகம் என்பது வேளூர் நீர்நிலையைக் குறிப்பதென்றுங் காட்டினேன். ஆவிக் கோமான் பதுமன் என்பது நீர் நிலைக்குத் தலைவனான பதும நாகனைக் குறித்ததாம். இவ்வேள்புலத்தினின்று தன்னாடு புக்க மக்கள் தம் பழைய நாட்டை மறவாமல் தம் நீர்நிலைப் பெயர்களைத் [illegible] புனைந்து வழங்கியது [illegible]. நாகர் [illegible] [illegible] [illegible] வழங்கிவருதல். இவ்வண்ணம் [illegible] நாகப்பட்டினம் [illegible] [illegible] ரை) எனவும் பூமுடி நாகர் நகர் எனவும் வருவனவற்றாற் கண்டு கொள்க. வேளாளரைப் பெருக்காளர், காராளர் என வழங்கலும், கச்மீர நீர்நிலைக்கும், மேகத்திற்குந் தலைவராகக் கருதிய நாகர் வரலாற்றொடு பொருந்தல் நோக்கிக் கொள்க. மேற்காட்டிய ''அருந்திறவணங்கிளு வியர்'' (சிறுபாண் 86) என்றதும் அரிய வலியையுடைய தெய்வத்தன்மையையுடைய ஆவியர் எனப் பொருளாதல் காண்க. தெய்வத்தன்மையையுடைய ஆவி என்றது நாக தேவதையுறையும் நீர் நிலையாதல் பற்றியென்று கொள்க. வேள் குலத்தவன் நீர் நிலைப் பெயரே தன் பெயராகக் கொண்டனன் என்க. இனிப் பேகனை **வையாவிக்கோ** எனப் புறநானூறு தொகுத்தார் வழங்கிக் காட்டுவர். இதன் கண் உள்ள **வையாவி** என்பது வைவாபி என்பதன் மரூஉ ஆகும். வைவாபி என்பது வடமொழியில் உலர்ந்த குளம் என்று பொருள்படும். பதும நாகனுக்கு உறைவிடமாகத் தரங்கினி கூறிய பத்மஸரஸ் முதலில் ஷடங்குல நாகனாற் கைப்பற்றப்பட்டிருந்ததென்றும் அவன் அருகிலுள்ள நாட்டுப் பெண்டிரை வவ்விச் செல்வது கண்டுநாகர் தலைவனான நீலநாகன் அவனைத் துரத்தி விட்டனன் என்றும், அவன் ஒழிந்த பின்னர் அந்நீர்நிலை உலர்ந்து நல்ல நிலமாயிருந்ததென்றும், அங்கே விசவசவா என்னும் அரசனொருவன் சந்த்ரபுரம் என்ற

நகரம் அமைத்து வாழ்ந்தனன் என்றும், அவருள்ள இடம் தருவாச முனிவர் சாபத்தாற் பழையபடி நீர் நிலையாயிற் றென்றும் அதன்கண் பதும நாகன் வதிதனன் என்றும், நீலமட புராணங் கூறும் (நீலமட. 976—1008) இக்கதை யால் இஃதுலர்ந்த குளமாதல் உணரலாம். தரங்கினியில் இப்பதுமஸரஸைப்பற்றிய மற்றொரு கதையும் ஈண்டைக்கு ஏற்பதாகும். ஜயாபீடன் ஆட்சியில், இந்நீர் நிலையிலுள்ள பதுமநாகன் **திராவிட மந்த்ரவாதி** ஒருவனால் மழையில் லாத ஒரு மருப்ரதேசத்திற்கு ஈர்க்கப்படுவதாகக் கூறித் தன்னைக் காக்கும் வண்ணம் அவ்வரசனை வேண்டி, அங்ஙனங் காத்தால் அவனுக்கு ஓர் பொற் சுரங்கமுள்ள தைக் காட்டுவதாகக் கூற, அரசனும் பதுமநாகனுக்கு அபய மளித்தனனென்றும் பின் தன்னுளளத்தாசையால் அரசன் அத்திராவிட மந்த்ரவாதியைப் பதுமஸரஸில் மந்த்ரவலி யைக் காட்டும்படி வேண்ட, அவன் அரசன் கண் முன்னே அந்நீர் நிலையை உலரச் செய்து அரசன் விரும்பியவாறு திரும்பவும் நீர் நிலையாக்கினன் என்றும், (4ஆம்—தரங்கம் 593 முதற் காண்க) கூறுதலால் இஃதுணரலாம். இக்கதையால் முன்னம் பத்மஸரஸிற் குடியேறி வதித மக்களே திராவிட முனிவனால், தென் தேசத்திற்குக் கொணரப்பட்டனர் எனபது மட்டில் ஊகித்துக் கொள்ள லாம். இவற்றால் வையாவி என்பது பழையதோர் கதை யைத் தன்கண் பொதிந்து வைத்துள்ள தொடராதல் இனி துணரலாம். இனி இக்கச்மீரநாட்டு ஸதிஸரஸாகிய நீர்ப்பெருக்கை அஹீந்த்ரனான அலாயுதன் வற்றச் செய்து வதியும் நிலமாக்கினன் என்று நீலமடபுராணங் கூறுதலான் உலர்ந்த குளத்தினின்றுண்டாகிய நிலத்தினனென்று வேளொருவன் வையாவியெனப் பெயர் பெற்றனன் என்று கொள்ளினும் பொருந்தும். இனிச் சீன தேயத்துப்பழைய மக்களில் வை (wei) என்ற குலம் ஒன்றுண்டு. (india and china 2) கச்மீரத்தில் நாகு என்பது பாம்பிற்கும் நீர் நிலைக்கும் பெயர். தமிழிலும் இலஞ்சியென்பது மடுவிற் கும் பாம்பிற்கும் பெயராதல் நோக்குக. பழந்தமிழர் நாகர்

வழிபாடுடையராதல் பற்றித் தெலுங்கரால் அரவரென வழங்கப்பட்டனரோ என ஈண்டைக்கு ஏற்ப நினையலாம். கேரளோத்பத்தி என்னும் நூல் மலையாளத்தில், ஆரியர் குடியேறுதற்கு முன்னே நாகரே இருந்து வாழ்ந்தனரெனக் கூறும் (Asiatic Research Journal. ix, 216-218) சிங்களத்தையும் அதனையடுத்த தீவுகளையும் ஆண்டவன் மோரகன் என்றும் இவன் கச்மீர வேந்தன் ப்ரவரஸேனனுடைய மந்திரியென்றும் தரங்கினி (III 356) கூறும். இவன் ஆட்சியுட்பட்ட கடற்கரைப் புறம் மாறோகம் எனப் பெயர் பெற்றதோ என ஊகித்தலுமாகும். மாறோகம் கொற்கை சூழ்நாடு என்பது தொல்காப்பியச் சேனாவரையத்திற் கண்டது. மஹோரக பூமி (பெரு நாகநாடு) எனப்பட்டு நாளடைவிற் சிதைந்ததோ என நினைத்தலுமாகும். இனி ஒகம் கருடனெனக் கொண்டு கருடனொடு மாறு கொண்ட நாடு எனக் கருதி, அதுவே நாகர் வதித இடம் எனினுமையும். ஒக கேது கருடகேதனன் (ராஷ்ட்ரகூட வேந்தன் அமோகவர்ஷன்) என்பது காண்க. Bombay Gazetteer, Vol. I, p. II, 402) பாண்டி நாட்டுத் தென் கீழ்பால் உள்ள ஒளி நாட்டார் (தொல் சொல்) பட்டினப் பாலையுள் ஒளியர் எனப்படுதலும் இவரை நச்சினார்க்கினியர் பிற மண்டலங்கட்கு அரசாதற்குரிய வேளாளர் என்றலும், கடன் மல்லைச் சாசனம் ஒளி நாகன், ஒளிநாகன் எனப் பலரைக் கூறிக் காட்டலும் கொண்டு இத்தென்னாட்டுக் கச்மீர தேயத்தார் பழைமையில் குடியேறியது துணியலாம். ஒளி நாகர் கச்மீரத்தில் தேஜவன நாகர் ஆவர். மணிமேகலை நூல் நாகநாடு, காந்தார தேசத்திற்குரிய பூருவ திக்கில் உள்ளதென்று கூறுதலால், அது கச்மீரமேயெனத் தெளியப்பட்டதேயாகவும், தெற்கணுள்ள நாட்டு நாகர் வரலாறு காணப்படின் அது வடநாட்டு நாகர் தெற்கட் குடியேறி இருந்த காலத்து நிகழ்ச்சி ஆகுமெனத் துணிதற்கண் ஐயமேயில்லையென்க. கச்மீர நாட்டார், நீலன், பதுமன், சேஷன், கார்க்கோடகன், தக்ஷகன் என்னும் பெருநாகர் ஐவரைச் சிறப்பித்துப் போற்றும் ஐவகை

மக்கள் ஆதலால் இவர்க்கு அரசன் பஞ்சசனேந்த்ரன் என்று சிறப்புப் பெயர் புனைவன் (தரங்கினி III. 353) ஆதல் காணலாம். கச்மீர தேய ஆட்சி ஐந்து குலத்தவர்க்கே உரித்தாதல் தரங்கினியால் அறியலாம். அவை கோநந்தகுலம், பிரதாபதித்த குலம், கார்க்கோடக குலம், உத்பல குலம், வோஹரகுலம் என வரும். இப்பிரிவும் ஐம்பெரு வேளிர் என்றற் கியைதல் காண்க. இங்குக் கூறிய குலங்களான, கார்க்கோட குலம், நாக குலமேயாதல் வெளிப்படையாம். இவையெல்லாம் தென்னாட்டிற்கும் வடபான் முனிவன்றடவாகிய ஸதீஸரஸாகிடய கச்மீரத்திற்கும் உள்ள பண்டைத் தொடர்பை நன்கு தெளிவித்தல் கண்டு கொள்க. கச்மீர மொழியில் ஆவி என்பது பாம்பிற்குப் பெயராதலுங் காண்க.

## முடிவுரை:

தமிழரசரும் வேளிரும் காலந்தெளிந்த சரித்திர முறையில் அசோக சக்கரவர்த்தி (274 B.C)க்கும் காரவேலா வேந்தனுக்கும் (186 ஹத்திகும்பா சாசனம்) முற்பட்டு நன்னிலையில் ஒற்றுமையாய் வாழ்ந்தவர் என்பது சாசனங்களால் நன்கு கண்டது. காலம் நன்கு தெளியப்படாத சீராமமூர்த்திக்கும் கண்ணபிரானுக்கும் முற்பட்டுத் தமிழரசருண்மை முறையே வான்மீகத்தும் வியாச பாரதத்தும் நன்கறிந்ததாகும். இவற்றிற்கெல்லாம் இயையக் கொள்ளின் அகத்தியருடன் வந்த வேளிர் ஆதியில் வாழ்ந்த தலம் கச்மீரத்துள்ள வராகத்துவாரவதியேயாமென்று நன்கு தெரிந்து கொள்க. கபிலர் பாடலிற் குறித்த ''உவராவீகைத்துவரை'' ஐலெளகனுடைய தாய்க்கிறிஸ்து பிறத்தற்கு 137 ஆண்டு முற்பட்டலான், சங்க காலமாகிய கி.பி. இரண்டாம் நூற்றாண்டோடு மலையாமை கண்டு கொள்க.

இனி, நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழியரச ரென்று நச்சினார்க்கினியர் கூறுவது திரு விக்கிரமாவ தாரத்தை நினைந்து கூறியதாமெனின் அது இவ்வரலாற் றிற்கு மலையாதியையுமென்க. திருவிக்கிரமம் (உலகை மூன்றடியாலளத்தல்) இறைவன் காச்யப முனிவர்க்கு மகனாயவதரித்த காலத்தே நிகழ்த்தியதாகும், காச்மீர தேச வரலாறும் காச்யப முனிவரையே முதன்மையாகக் கொண்டு நிகழ்தல் முன்னரே காட்டினோம். அக்காச்மீர நாட்டார் காச்யப புத்திரராதலால் அவர் வழியும் நிலங் கடந்த நெடுமுடியண்ணல் வழியும் ஒன்றாதல் பற்றி அந் நாட்டரசர் தம்மை நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழி யினர் எனக் கூறிக் கொள்வதும் சாலப் பொருந்துவ தேயாம். இங்ஙனங் கொள்வது தமிழர் பழைய வரலாற்று டன் மலையாது நிலவுதல் காண்க. இவ்வேளிரே சிந்து சமவெளி நாகரீக மக்களுடன் தொடர்பு கொண்டு பின்னர்த் தென்னாடு போந்தனர் என்றும் ஊகிக்க இட முண்டு.

# 2. கோசர்

கொங்கிளங் கோசர், நான் மொழிக் கோசர், வாய் மொழிக் கோசர், துனைதேர்க் கோசர் என்று பழைய தமிழ் நூல்களில் குறிப்பிடப்படும் கோசர் குடிபற்றி ஆராய் வதே இக்கட்டுரையின் நோக்கம். வத்ஸம் என்னும் வட சொல்லுக்கு இளமை என்ற பொருள் உண்டு. வத்ஸ கோசரே, இளங்கோசர் என ஊகிக்கலாம். கோசம் என்பது ஓர் அரிய சூள் முறையைக் கையாண்டதனால் கோசர்கள் என அழைக்கப்பட்டனர். இவர்கள் வன்கட் சூழ்ச்சியில் வல்லவர். கோசர், வேளிரை அடுத்து காஷ்மீர தேசத்தி லிருந்து வந்தவர். வம்பமோரியர்க்கு முன்னணியாக நின்று மோகூர் மன்னனை எதிர்த்தவர்கள். வேளிரும், கோசரும் நீண்ட பகைமையால் பேரரசர்களின் படையில் உறுதுணையாக நின்றவர்கள். அகுதை, திதியன், குறும் பியன், ஆதனெழினி, நமும்பன் கோசரில் சிறந்த வீரர்கள். இப்பழம்தமிழ்க் குறுநில வேந்தரைப் பற்றிச் சங்கநூல்கள் குறிப்பிடுவதில் ஒரு பகுதி இக்கட்டுரையாக வெளி வருகிறது. இன்றும் காஷ்மீர மக்கள் தம்மைக் ''கோஷர்'' என்று கூறிக் கொள்வது குறிப்பிடத்தக்கது.

சிலப்பதிகார அரும் பதவுரைக்காரர்,

''கொங்கிளங் கோசர் தங்கணாட் டகத்து
நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய
மழைதொழி லென்று மாறாதாயிற்று''

(சிலப். உரைபெறு கட்டுரை)

என் புழிக் கோசரைக் ''குறும்பு செலுத்துவார் சில வீரர்'' எனவுரைத்தார். அடியார்க்கு நல்லார் ஈண்டுக்

''கொங்கு மண்டிலத்து ''**இளங்கோவாகிய கோசர்**'' என்று கருதி மொழிந்தனர். அரும் பதவுரைகாரர் குறும்பு செலுத்துவார் என்றது, சிறிய அரண்களில் ஆட்சி செலுத்துவார் என்றவாறாம். அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டிலத்து **இளங்கோவாகிய கோசர்** என்றது, வேந்தர் வழியினராய்க் கொங்கில் வதிகின்ற கோசரைக் குறித்ததாகும். இவர் இங்ஙனங் கருதியது மேல் வரந்தருகாதையில் இவரைக் ''குடகக் கொங்கர்'' எனக் கூறியதுபற்றியென்று துணியலாம். குடகக் கொங்கர் என்றவரைக் குடமலை நாட்டாராயிருந்து கொங்கிற் குடியேறி வதிகின்ற இளங்கோ வழியினராகிய கோசர் என இவர் கருதினராவர். இவர் கோசரை இளங்கோவாகிய கோசர் என்றது இவரைப் பற்றிச் சான்றோர் கூறிய பல்லிடங்களிலும் **இளங்கோசர்** என வருதல் பற்றியென்றுய்த்துணரலாகும். இதனுண்மை மேலாராயப்படுவதனால் நன்கு வெளியாகும்.

வரந்தருகாதையுள் ஆரிய மன்னர் முதலாகக் கயவாகு வேந்தனிறுதியாகக் கூறிய அரசர்களுக்கிடையே ''குடகக் கொங்கர்'' என இவரைக் கூறுதலான், இவரையும் அவர் அரசராகக் கருதியே இளங்கோவாகிய கோசராகவுரைத்தனரெனத் தெளியலாம். கோசரை இளங்கோவாகிய கோசர் என வழங்கியதில் ஒருண்மையுளதாகவே வேண்டும்.

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கொங்கிற் கோயில் எடுப்பித்தது அடியார்க்கு நல்லார்க்கு உடன்பாடின்மையால், குடக் கொங்கர் என்பார் குடகப் புறத்துநின்று கொங்கிற் றங்கியுள்ளார் என்று இவர் கருதினார் ஆவர். இக்கருத்துக் கொங்கிளங் கோசர் என்னுந்தொடர்க்கு அவர் கூறியவுரையான் உய்த்துணரப்படுவது. குடகக் கொங்கர் என்பது கொங்கினின்று குடகடற் புறத்துக் குடியேறினாரை நன்கு குறிக்குமென்றுணர்க.

கொங்கிற் குடகர் என்றால் அடியார்க்கு நல்லார் கருத்து நன்கு பொருந்தும். அங்ஙனமல்லாது குடகக் கொங்கர் என்றலாற் குடகப் புறத்தும் கொங்கர் என்ற பெயரையேயுடையர் என்று தெளிய நிற்றல் காண்க. ஆஅய் என்னும் வேளிர் வேந்தன் கொங்கரைக் குட கட லோட்டிய செய்தி,

''கொங்கர்க் குடகட லோட்டிய ஞான்றை''
(புறம், 130)

என்பதனால் அறியப்படுதலால் இதனுண்மை எளிதினுண ரலாம். செங்குட்டுவன் கொங்கிற்கோயில் எடுத்தது கண்டு, கொங்கராய்க் குடகிலுள்ளாராகிய கோசரும், தாங்கள் தங்கியுள்ள குடமலை நாடுகளிலே கண்ணகிக்கு விழாவுஞ் சாந்தியுஞ் செய்ய விழைந்தனர் என்பதே இயைபுடைத்தாமென்க. இதுவே அரும் பதவுரைகாரர் கருத்தென்பது, அவர் சிலப்பதிகார வேட்டுவவரியில் கொங்கச் செல்வி குடமலை யாட்டி'' என வருமிடத்து ''மேற்பட்டு இவளைத் தெய்வமாகக் கொண்டாடுமிடம் கூறினபடியாலே இவள் துர்க்கையாகவே பிறந்தனள் என்றவாறு.'' என விளக்கிய வாற்றானுணரலாகும்.

இவருரையாற் கண்ணகியைத் தெய்வமாகக் கொண் டாடிய இடம் கொங்குங் குடமலையுமாதல் எளிதிலறிய லாம். இவர் கருத்துப்படி நோக்கிற் கொங்கிளங் கோசர் என்பாரைக் குடகக் கொங்கர் என வரந்தரு காதையில் விளக்கியதனால், கொங்கினின்று குடகப் புறத்துக் குடி யேறிய இளங் கோசரென்பதே திரண்ட பொருளாகு மென்ப. இதனாற் கொங்கிளங் கோசர் தங்கணாட்டக மென்பது இளங்கோசர் கொங்கினின்று போய்த் தங்கிய குடமலை நாட்டகம் என்ற வாறாம். இவற்றாற் கோசர் முதலிற் கொங்கில் வதிந்தவரென்றும், பின்னர்க் குடகடற் பக்கத்து மலை நாட்டிற் குடியேறியவரென்றும் துணியப்

படுதல் காண்க. மதுரைக் காஞ்சியில் இவ்வுரை "நான் மொழிக் கோசர் தோன்றியாங்கு" என்றார். இவ்விடத்து நச்சினார்க்கினியர் "நான்கு வகையாகிய கோசர் வஞ்சின மொழியாலே விளங்கினாற் போன்று" என வுரைத்தார்.

இங்ஙன நாற் கோசர் மொழித் தோன்றி யாங்கு எனச் சிதைத்துக் கூட்டாது நான் மொழி நாட்டுக் கோசர் தோன்றி னாற் போன்று எனக் கிடந்தபடியே பொருள் கொள்ளலா மென்க. முற்காலத்து நான்மொழி நாடென ஒன்றுண் டென்பது சாசன ஆராய்ச்சியாளர் கண்டது. இதனைத் திருவறைக் கல்லும், நான் மொழி நாடும் உடைய வத்த ராயனான "விடுகாதன்" (Topographical List of South Indian Inscriptions No. 213-II of 1906) என்பதனால் அறியலாம். இதன் கண் கூறப்பட்ட திருவறைக்கல் இக் காலத்து நாமக்கல் என வழங்குவதென்று துணியப்படுவது. இதன் கண் கூறிய நான்மொழி நாடு திருவறைக் கல்லுக் குப் பக்கத்ததாமென்பது பொருந்தும்.

ஈண்டு நான்மொழிகளாவன: தமிழ், தெலுங்கு, கன் னடம், மலையாளம் என்பனவாகும். இந் நான்மொழியும் வழங்குதற்குரிய எல்லையில் இந்நாமக்கற்புறம் இருத்தல் பற்றி இப்பெயரெய்தியதென்று தெளியலாம். இந்நான் மொழி நாடு மழகொங்கின் வடக்கணுள்ளதனால் ஈண்டு முன் வதிந்து பின் குடகிற் குடியேறிய கோசர் "கொங்கிளங் கோசர், குடகக் கொங்கர்" எனப்பட்டாரென்று கொள்ளத் தகும்.

இனி இங்ஙனமன்றி மாமூலனார் அகப்பாட்டில் (15)

"மெய்ம்மலி பெரும்பூட் செம்மற் கோசர்
தோகைக் காவிற் றுளுநாட்டன்ன"

எனக் கூறுதலாற் கோசர் ஆதியிலே துளுநாட்டின் வதித வர்தாமென்றும், பின்னர்க் கொங்கின் வதிதலாற் கொங்

கிளங் கோசர் குடகக் கொங்கர் என வழங்கப் பட்டன ரென்றும் கூறுவாருண்டு.

எங்ஙனமாயினும் கொங்கிளங் கோசர், கோசர் துளு நாடு என்பவற்றால் இவர் ஆதியில் வதித இடங்கள் கொங்கு நாடும், துளுநாடும் எனக் கொள்ளல் பொருந் தும். இக் கோசர் கண்ணகிக்கு விழாவுஞ் சாந்தியுஞ் செய் தல் கேட்கப்பட்டவற்றால், இவர் சேரவேந்தன் செங் குட்டுவனை யொத்து வேத வழக்கொடுபட்டவரல்லாது பிறராகாரென்று துணியலாம். இவரும் பிறரும், இலங் கைக் கயவாகு வேந்தனும்,

"இமயவரம்பனின் நன்னாட் செய்த நாளணி வேள்வி யில், வந்தீகென்றே வணங்கினர் வேண்டலான்"

(சிலப். வரப்தரு. 161-163)

இவ்வுண்மை யுணர்க. கோசர் புரிந்த விழாவுஞ் சாந்தியும் வைதீகமேயாமென்று கொள்க.

இவ்வாறு வேத வழக்கொடுபட்டுக் கோசர் என்ற பெயரிற் சிறந்த இவ்வீரருடைய அரிய செய்திகள் பல செந்தமிழ்ச் சான்றோர் தொகை நூல்களிலாங்காங்குக் கேட்கப் படுவனவேனும், இவர் பண்டு தொட்டுள்ள தமிழ்க் குடிமக்களெனத் துணிதற் கில்லை.

கோசர் துளுநாடு என்றதனானும் (அகம். 15) "நான் மொழிக் கோசர்" (மதுரைக் காஞ்சி) என்றதனானும், இவரைத் தமிழரென ஒருதலையாகத் தெளிதலரிதாதல் காண்க. இவரைப் பாடிய பல்லிடத்தும் நல்லிசைப் புலவர்,

"இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர்
கருங்கட் கோசர்" (அகம். 90) எனவும்

"துனைகாலன்ன புனைதேர்க் கோசர்" (அகம். 251)
எனவும்

"வளங்கெழு கோசர் விளங்குபடை" (அகம். 205)
எனவும்

"வென்வே, லிளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலின ரெறிந்த வகலிலை முருக்கிற்
பெருமரக் கம்பம் போல" (புறம். 169) எனவும்

"வலம்புரி கோசரவைக் களத்தானும்"
(புறம். 283) எனவும்

கூறுதலான் இவர் வேற்படையான் வென்றியெய்திய பெருந் தேர் வீரரென்று தெரியலாவது. "இரும்பிடம் படுத்த" என்புழிப் பழையவுரைகாரர் இருப்பினை வேலென்றே கொண்டார்.

"வலம்புரி கோசரவைக் களம் என்றதனாலிவர் தந்தம் படை வெற்றியைக் காட்டவல்ல போரவைக் களம் வைத்துப் போற்றின ரெனத் தெரியலாம். இவர் நன்றல் லாத காலத்தும் தம்முடைய நட்பிற் கோடாதவரென்பதும், நெடுங்காலஞ் சென்றேனும் கருதியது முடிக்கும் பெரிய சூழ்ச்சியையுடையவரென்பதும், தமக்கே சிறப்பாக வாய்மையை விடாது போற்றிப் புகழ் படைப்பவரென்ப தும், தம்மகத்துப் புக்கவறியரை நன்று தாங்கும் பேரளி யுடையவ ரென்பதும் பிறவுஞ் சான்றோர் பாடல்களானன் கறியக் கிடப்பனவாகும்.

"நன்றல் காலையு நட்பிற் கோடார்
சென்று வழிப்படு உந்திரிபில் சூழ்ச்சியிற்
...........கோசர் (அகம். 113) எனவும்

"ஒன்று மொழிக் கோசர்" (அகம். 196) எனவும்

"வாய் மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர்" (அகம். 25) எனவும்

"கோசர் நன்மொழிபோல வாயாகின்றே"
(குறுந். 15) எனவும்

'மெய்ம்மலி பெரும் பூட் செம்மற் கோசர்'' (அகம். 15) எனவும்

'கோசர் துளுநாட்டன்ன
வறுங்கை வம்பலர்த் தாங்கும் பண்பின்'' (அகம். 15)

எனவும் வருவனவற்றான் நன்கறிக.

இவர் வீரத்திற்கேற்ற மாறாப் பெரு வாய்மையும் அவை யிரண்டிற்கு மேற்ப உற்றுழியுதவும் பெருவன்மையும் உடைய ரென்றும் இங்குக் காட்டிய மேற்கோள்களால் நன்கறியலாகும். இவற்றுடன், சென்று வழிப்படுந் திரிபில் சூழ்ச்சியுடையரென்று சான்றோர் புகழ்தல் நினைந்து கொள்க. வறுங்கை வம்பலரையுங் கொன்று மகிழும் பாலை நில மாக்கள் போலாது அவரைத் தாங்கும் பண்பினரென்று இவர் தனியே புலவராற் சிறப்பித்துப் பாடப் படுதலால் இவர் கொடை மேம்பாடு நன்குணரப்படும்.

'நெறிசெல் வம் பலர்க்கொன்ற தெவ்வர்''
(அகம். 113) என்றும்

''அம்பு தொடை யமைதி காண்மார் வம்பலர்
கலனில ராயினுங் கொன்று புள்ளூட்டும்
கல்லா விளையர் கலித்த கவலை'' (அகம். 375)
என்றும்

''வம்பலர்ச் செகுத்த அஞ்சுவரு கவலை''
[அகம். 161) எனவும்

வருமிடங்களிற் பாலை நில மாக்கள் இயல்பு காண்க.

மேல் எடுத்துக் காட்டிய கோசர் மேற்கோள்களால் இக் கோசர் நாகரீகத்திற் சிறந்த சத்திய வீரரென்பது நன்கு புலனாகும். இச் சத்திய வீரர் கோசர் எனப் பெயர் சிறந்ததன் காரணம் பலபடியாக ஆலோசிக்கப்படுவது. கோசம் என்பது பெருங்கதைத் தலைவனான வத்தவர் கோன் உதயணன் இருந்தரசாண்ட கோசாம்பிக்கு வழங்கும் பெயராகும். இது கங்கையும் யமுனையுங் கலக்குமிடத்

துள்ள பிரயாகைக்குச் சிறிது தூரத்துள் யமுனைக் கரையி லிருந்ததென்பர்.

இப்போது கோசம் என்ற பெயரிலுள்ள சிற்றூர் இப் பெரு நகரிருந்த தலமாகுமென்பர். (கன்னிங்ஹாம். பூகோளம் பார்க்க) கோசாம்பி நகரம் வான்மிகத்துங் கூறப்பட்டுள்ளது.

பத்தநம் கோசகாராணாம்
...மார்க்கயத் பிஸ்ததஸ்ததஃ
ராமஸ்ய தயிதாம் பார்யாம்
ஸீதாயாம் தசரதஸ் நுஷாம்

இதனாலிந் நகரின் பழைமையறியலாம். இத்தென் னாட்டுத் தமிழ்ப் பாடல்களில் ஒரு சில வத்தவர் கோனைப் பற்றி வருவன கேட்கப்படுதலான், வத்ஸ நாட்டுக் கோசத் தினின்று இத்தென்னாடு புக்குச் சீருஞ் சிறப்பும் பெற வாழ்ந்த வீரர் பலருண்டென்றுய்த் துணரப்படுவது. தம் வத்ஸநாடு பஞ்சம் பட்டும், பூகம்ப மெய்தியும் தடுமாறிய காலத்து, இவர் இத்தென்னாடு புக்கு வதிதவரென்று கொள்ளலாம். தென்னாட்டில் வாழ்ந்தவர் மரபில் வந்தவர் தலைவனைப் பற்றிய நூல் ''வச்சத் தொள்ளாயிரம்'' என்று பெயர் பெறும். வச்சம் என்பது வத்ஸ தேசமாகும். நூற் பாடலை வீரசோழிய வுரைகாரர் பெருந்தேவனார், தொகை மொழிக்கு உதாரணமாகக் காட்டி விளக்கிக் கூறியவாற்றான் இவ்வுண்மை அறியப்படுவது. அவர்,

''வேட்டொழிவ தல்லால் வினைஞர் விளைவயலுட்
டோட்ட கடைஞர் சுடுநந்து—மோட்டாமை
வன்புறத்து மீதுடைக்கும் வச்சத் தீளங்கோவை
இன்புறுத்த வல்லமோ யாம்''

(வீரசோ. அலங். 11. மேற்)

இதனுட் சிறப்புடையளாகிய தலைமகளை இகழ்ந்து தலைமகன் சிறப்பில்லாத பரத்தையர் மாட்டு நிகழா நின்றமையின், நாட்டுக் கடைஞ ருள்ளார் சிறப்பில்லாத

தந்தை ஊன்றுப் புடையயாமையின் புறத்து உடைத்துத் தின்பர் என்னுமிதனால் தொகுத்து விளங்கச் சொன்னமை யாற்றொகை மொழியாயிற்று; ''வச்சத் தொள்ளாயிர முழுதும் தொகை மொழியெனக் கொள்க." என் வச்சத் தொள்ளாயிரப் பாட்டை எடுத்துக்காட்டி விளக்கிய வாற்றான் இஃதுணரலாம்.

> வாடை குளிர மருந்தறிவா ரில்லையோ
> கூட லினியொருகாற் கூடாதோ... ஓடை
> மதவார ணத்துதயன் வத்தவர்கோ னாட்டிற்
> கதவான தோதமியேன் கண்''
>
> (பெருங். முகவுரை. பக்.9)

என்ற பழம் பாடலும் இவ்வச்சத் தொள்ளாயிரமே யாகும்.

இவற்றான் முன்னமே கோசம் என்னும் ஊரில் அரசாண்ட வத்ஸ தேயத்தவர் வழியினர் இத் தென்னாடு புக்கு வாழ்ந்து வழங்கிச் சான்றோர் பாடல் பெற்றது நன்கு துணியலாம். இவ்வச்சத் தொள்ளாயிரப் பாட்டில் 'வச்சத் திளங் கோவை' எனப் பாடியதனால், இந்நாட்டுக் குடியேறியவன் வச்சத்திளங்கோவேந்தன் வழியினன் என்று தெளியலாகும்.

இவன் கோசத்தினின்று இங்கு வந்தவன் வழியினனாதலால் இவன் வழிக் கோசரெல்லாம் இளங்கோசர் என்று வழங்கப் பட்டனரென உய்த்துணரலாம். இதனாலேதான் அடியார்க்கு நல்லார், கொங்கு மண்டிலத்து இளங்கோவாகிய கோசர் என உரை கூறினாரென்று துணியலாம். இதனாற் கோசர் தமிழ் மூவேந்தர் இளங்கோ வழியினரென நினைதற்காகாமை யுணர்க. அங்ஙனம் நினைதற்கு மேற்கோளில்லாமையும் நோக்கிக் கொள்க.

இனி இக் கோசாம்பியை ஆண்ட அரசரே இளன் என்னும் திங்கட் குலத்து வேந்தன் வழியினரென்றும், அது பற்றியே அவன் வழிவேந்தர் இளங்கோ எனப் பெயர்

சிறப்பரென்றும், இவர் வட நாட்டில் ஜலர் எனவும், அயிரர் எனவும் பெயர் சிறந்தனர் என்றும், இவருள் ஒருவன் தான் **காரவேலா** என்னுங் கலிங்க வேந்தனென் றும் கருதுவாருண்டு.

காரவேலா வேந்தன் அத்திகும் பாச்சாசனத்திற்றன் னைச் சேதியர் வழியினன் என்று வெளியிடுதலால், இவன் கோசமாண்ட உதயணனுடையதாயின் மரபைச் சேர்ந்தவ னாதல் தெளிவாகும். உதயணன் மாதுல னாட்டை யும் தந்தை நாட்டையும் ஒருங்கு ஆண்டவனென்பது பெருங்கதையான் அறியப்பட்டது.

இனி இவர் வத்ஸ தேசத்துக் கோசம் என்ற தலை நகரினின்று வந்தவராதலான் இளங்கோசர் என வழங்கப் பட்டனரெனின் அதுவும் நன்கு பொருந்தும். வத்ஸ மொழி ஆரியத்தில் இளமைக்குப் பெயராதலான் **வத்ஸ கோசர்**— இளங்கோசர் என மொழி பெயர்த்துத் தமிழரால் வழங்கப் பட்டனரென்றுங் கொள்ளலாம்.

கோசரைக் கூறிய பல விடத்தும் சான்றோரெல்லாம் பல்லிளங் கோசர், நல்லிளங் கோசர், கொங்கிளங் கோசர் என வழங்கிக் காட்டலான் இஃது உடலிளமை பற்றிய தாகாதென்பது ஒருதலையாகத் துணியலாம். வத்ஸ தேசத்தை இளநாடெனக் கொண்டு அந்நாட்டு வேந்தனை இளங்கோவென்றும், அந்நாட்டுக் கோசரை இளங் கோச ரென்றும் வழங்கினரென்பது பொருந்தியதாகும். அடி யார்க்கு நல்லார் கொங்கு மண்டிலத்து இளங்கோவாகிய கோசரும் என்றது கொங்கு மண்டிலத்துள்ள வத்ஸ வேந் தாகிய கோசரும் என்னுங் கருத்தா லென்றுய்த்துணர லாகும்.

மஹா மஹோபாத்யாய கங்கா நாத்ஜா என்னும் பெரியார் (தர்பங்கா மந்திரியார்) கோசத்தை யடுத்துள்ள பிரயாகையை, ''இளவாஸா என்று பழையோர் கூறுவர்'' என்று சொல்வர். இங்ஙனங் கொள்ளாது கோசர் எப் போதும் இளமையோடே யிருப்பரென்று துணிவது

பொருந்தாதாம். ''ஊர்முது கோசர்'' (அகம். 262) என வழங்கலான், இவர் எல்லா மக்களும் போன்று யாக்கை மூத்துக்கழிதலுண்டென்க. இதனால் இவரை இளங் கோசர் எனப் பல்லிடத்தும் வழங்குவது இவர் குடி பற்றியது அல்லது நாடு பற்றியதெனின் நன்கு பொருந்து மென்க.

இளன் வழியிற் குருகுல முண்டாதலும் அக்குரு குலத்து உதயணன் பிறத்தலுங் கண்டு. இவ்வுண்மை துணியலாம். ''குரு குலத்தரசன் சாயாச் செங்கோற் சதானிகன்'' மகன் உதயணனாதல் நோக்கிக் கொள்க. இவ்வுதயணனுக்குப் பின்னே இவன் குலத்தவர் பலர் வத்ஸ நாட்டுக் கோசத்தினின்று முதலிற் கொங்கிற் குடியேறி யிருந்தது, ''கொங்கு மண்டிலத்துட் பல பாகங் களில் வத்தவன். வத்தராயன், வச்சராயன் என்னும் பெயர்கள் இக்காலத்து வழங்கப் படுவன'' என்று மஹாமஹோபாத்யாயர் Dr. உ. வே. சாமிநாதையரவர்கள் பெருங்கதை முகவுரையிற் கூறுதலானும் வலியுறுதல் காண்க.

கொங்கு வேளிர் உதயணன் பெருங் கதையைத் தமிழிற் பாடுதற்கும், இக் கொங்கிற் குடியேறிய கோசர் மரபிற் பெருவள்ளலொருவன் காரணமெனின் அதுவும் நன்கு பொருந்துமென்க. உதயணன் தாயின் குலமான ஏயர் குலமும் இந்நாட்டுக் குடியேறி யிருந்தது 63 நாயன் மாருள் ஏயர்கோன் கலிக்காம நாயனார் என்னும் பெய ரானன்கறியலாகும். இதனால் உதயணன் தாய் மரபின ரும் இங்கு வந்து வதிதல் காணப்படும். கோசம் ஆண்ட உதயணன், புத்தர் அவதரித்த நாளில் பிறந்தவன் என்று கூறுதலான் இவன் பழமை நன்குணரலாகும். இவனை மத்ஸ்ய புராணமுங் கூறும்.

இனி இக் கோசரைப் பற்றி நல்லிசைப் புலவர்கள் கூறிய சிறப்பியல்புகள் பலவும் கோசாம்பியை ஆண்ட உதயணன் நண்பினர்க்குப் பெரிதுமொத்து விளங்குதல்

அவர் கதை நோக்கியறிக. "நன்றல் காலையு நட்பிற் கோடார் (அகம். 113.)" என்ற இக்கோசர் பெரும்பண்பு உதயணன் சிறைப்பட்டிருந்த போது அவன் நண்பனாகிய யூகி (யௌகந்த ராயணன்) அவனை விடுவிக்கப்பட்ட பாட்டானன்கறியலாகும்.

இக் கோசர்க்குச் சிறந்த "சென்று வழிப்படு உந்திரியில் சூழ்ச்சி" யென்பது யூகி முதலியோர் உதயணன் பகை வெல்ல வேண்டிப் புரிந்த அரிய பெரிய சூழ்ச்சிகள் பலவற்றாலும் நன்கறிந்ததாகும். பிறவும் இவ்வாறே ஒட்டியறிக.

இனி இக் கோசர் கொங்குமண்டிலத்தே யல்லாமல் மேற்கடற் புறத்துத் துளு நாட்டினும், கீழ்க்கடற்புறத்து யமம் என்னும் ஊரினும் சோழர் உறையூரினும் வதிதன ரென்பது பழம் பாடல்களா னறியலாவது. "கோசர் துளு நாட்டன்ன" (அகம். 15) என்பதனால் இவர் துளுநாட்டு மிக்கிருத்தல் நன்கறியப் பட்டதாம். கொங்கிளங் கோசர் என்றதனால் இவர் கொங்கில் வதிதல் புலனாயிற்று.

"செல்லூர்க் குணாஅது பெருங்கடன் முழக்கிற்றாகி யாணர் இரும்பிடம் படுத்த வடுவுடை முகத்தர் கடுங்கட் கோசர் நியம மாயினும்"

(அகம். 90)

என வருதலான், இவர் கீழ்கடற் பக்கத்துச் செல்லூர்க் குக் கிழக்கே நியமம் என்னும் ஊரில் வாழ்ந்தது புலனா கும்.

செல்லூர்க் குணா அது பெருங்கடல் என்றதனால் நியமம் என்னும் ஊர் கீழ்கடலை யடுத்துள்ள துணரப் படும். இங்குக் கூறியபடியே சோணாட்டிற் செல்லூரும் அதன் கீழ்த் திசையில் நியமம் என்னும் ஊரும் இருப்பது கண்டு கொள்க. சோணாட்டு இவர் வலிபெற்ற வீறு தலைக்கண்டு பொறாது கிள்ளிவளவன் இவர் படையைச் சிதற அடித்தனன் என்பது,

''வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி
நிலங்கொள வெஃகிய பொலம்பூட் கிள்ளி''
(அகம். 205)

என வருதலான் அறியப்படுவது காண்க.

சங்க காலத்து இச் செல்லூர்ப்புறம் கோசராற் பெருஞ் சிறப்புப் பெற்று விளங்கியதென்பது ''செல்லூர்க் குணா அது கோசர் நியமமாயினும்......கொள்குநரல்லர்.'' (அகம் 90) எனக் கூறியதனா னுய்த்துணரலாகும். இவ்வூரிற் சிறந்த நல்லிசைப் புலவரும் உண்டென்பது ''செல்லூர்க் கோசனார்'' (அகம் 66) என்பதனா னறியலாம். இக் கோசரிற் பலர் பெருந் தமிழறிஞராய்ச் சான்றோரால் நன்கு மதிக்கப்படுதல் 'கருவூர்க் கோசனார்' (நற்றிணை. 214) என்னும் பெயரானறியலாம்.

''பல்லார்க்கு மீயும் பரிசிற் கொடைத் தடக்கை
மல்லார் மணிவரைத்தோள் வண்கோசன்—
மல்ல லந்தார்
செஞ் சொற் செருந்தைதன் றென்னுறந்தை
யென்றாளும்
வஞ்சிக் கொடிமருங்குல் வந்து''
(யாப்பருங்கலவிருத்தி. ஒழிபியல்)

என்னும் பழம் பாட்டான், இவரிற் கொடையானும் வீரத் தானும் இன்சொலானும் சிறந்த செருந்தை என்பான் சோழர் உறையூரில் வாழ்ந்தது புலனாதல் காண்க.

இனிப் பிற்காலப் பாடல்களில் (வச்சத்தொள்ளாயிரம்) இவர் வத்தவர் (வத்ஸ தேசத்தார்) என வழங்கப்பட்டா ராயினும், சங்கத் தொகை நூல்களில் இளங்கோசர் என்றே பாடப்படுதலான் இவர் கோசத்தை (கோசாம்பியை)த் தலை நகராகக் கொண்ட வத்த நாட்டிற் புகுதற்கு முன்னே கோசர் என்ற பெயருடன் இருந்தவர் தாமென்று துணி

வதும் பொருந்தும். அங்ஙனமாயின் இப்பெயர்க் காரணம் வேறே ஆராயப்படும்.

காச்மீர தேச சரித்திரமாகிய இராச தரங்கினியில் நட்பிற் பிழையாமைக்கு அந்நாட்டு மக்கள் கோசம் என்ற ஓர் சூள் முறை (சபத கர்மம்) மேற் கொண்டொழுகியது கேட்கப்படுவது, இவ்வுண்மையை.

''இழிசின னாகிய காசன் அரசனுடைய
ஐய நடுக்கம் போக்க உதிரத்தால் நனைந்த
தோலில் இன்று கோசமுறையில் ஆணையிட்டனன்''
(8 ஆந்தரங்கம் 3005) எனவும்

''இராசத் துரோகிகள் நம்முட் கோச
முறையைச் செய்து அரசனுயிரைக்
கவர வுடன் பட்டனர்'' (8- 280) எனவும்,

''சோமபாலன் கோச முறையில் ஆணை
யிட்டும் அரசன் படை யெடுப்பைக்
கவனியா திருந்தான்'' (8. 2222) எனவும்

''அரச னுந் தாமரனும் வாளொடு
உதிர நனைந்த தோலினின்று கோச முறை
யிலாணை யிட்டனர்'' (ஷ. 5 326)

எனவும் வருதலான் நன்குணரப் படுவது. இஃது அந் நாட்டுத் தொன்று தொட்ட வழக்கமாகும்.

இவ்வாறு நட்பிற் பிழையாத பெருவாய்மைக்குக் கோசமுறையை மேற்கொள்பவராதலின் இவர் கோசர் எனப்பட்டாரெனின், இத் தென்னாட்டுக் கோசரியல்பிற்கு அது நன்கு பொருந்து மென்க.

இக் கோச முறை தனியேயும், வஞ்சினங் கூறி மேற் கொள்ளும் இடத்தும் உண்டென்பது ஷை 7.746 ஆம் சுலோகத் தானறியப் படுவது; இஃது இக் கோசர் தலைவி அன்னி மிஞிலியென்பாள். ''சினத்திற் கொண்டபடிவ

மாறாள்" (அகம். 262) என்பதனால் உய்த்துணரலாவது. இவரை ஒன்று மொழிக் கோசர் என்பது. இருவருள்ளமும் ஒன்றாதற்குரிய வாய்மை மொழியைக் கோச முறையில் மேற்கொள்பவர் என்று பொருளாதல் கண்டு உண்மை யுணர்க. 'கோச நாடு' எனப் பெயரிய சுனைத்தடம் காச்மீர நாட்டிலுண்டு.

இவற்றால் காச்மீரத் துவாரவதிவிட்டு வேளிர் தென்னாடு புகும்போதே அவர் கூடவே ஆண்டுள்ள கோசமுறை வீரரும் வந்தனர் என்று கொள்வது பொருந்தும். சான்றோர் பாடல்களிற் கோசர் வரலாறும், வேளிர் வரலாறும் சேரக் காணப்படுதலான் இவ்வுண்மை எளிதினறியலாம்.

வேளிர் கொண்கானத்தும் கோசர் அதன்கண் ஒரு பாலாகிய துளு நாட்டிலும் இருத்தல் சான்றோர் செய்யுட்களிற் கேட்கப்படுதலானும் இத் துணிபு வலியுறுமென்க. இக் கருத்திற்கேற்பக் கொள்ளின் கோச வீரர் காச்மீரத்து நின்று முன்னரே தென்னாட்டிற் குடியேறியிருந்தனரென்றும், பின்னர்த் தம் இனத்தவரிருக்கும் அத் தென்னாட்டே வத்தவ நாட்டுக் கோசரும் வந்துறைந்தன ரென்றும் தெளிவது பொருத்தமாகும்.

இனி இவரை அசோக சக்கரவர்த்தி தென்னாட்டுள ராகச் சிலையிலெழுதிய ஸதீய புத்ரர் என்று நினைப்பாரு முண்டு. அச்சிலை யெழுத்துக் குறித்த ஸதீய புத்ரர் வேள் புலவரசரல்லது வேறாகாரென்று வேளிர் விளக்கத்துச் செவ்வனங் கூறினேன். ஸதீய புத்ரர் என்பதனை ஸத்ய புத்ரர் என்று பிறழப் படித்த தடுமாற்றத்தால் இக்கோசரை வாய் மொழிக் கோசர் என்பது கருதி அம் முடிபிற்கு வந்தாருண்டு.

சிலையில் ஸதீயபுத்ரர் என்றிருப்பது பல்லோரான் நன்கு விளக்கப்பட்டதனால், இக் கொள்கையின் தவறு புலப்பட்டதென்க. இதனாற் கோசர் ஸதீய புத்ரர் எனப்

பெயர் பெறாரென்க. இனி இக்கோசருட்டலை சிறந்து புலவர் பாடற் குரியராகிய சிலர் நன்மக்களைப் பற்றிச் சிறிது கூறுவேன்.

''பூத்த சுற்றமொடு பொலிந்தினிது விளங்கிப்
பொய்யா நல்லிசை நிறுத்த புனைதார்ப்
பெரும் பெயர் மாறன் றலைவனாகக்
கடந்தடு வாய்வா ளிளம்பல் கோசர்
இளஎளெறி மரபினின் வாய்மொழி கேட்ப
பொலம் பூணைவ ருட்படப் புகழ்ந்த
மறமிகு சிறப்பிற் குறுநில மன்னர்
அவரும் பிறருந் துவன்றிப்
பொற்பு விளங்கு புகழவை நிற்புகழ்ந்தேத்த
மகிழ்ந்தினி துறைமதி பெரும'' (மதுரைக் 770-79)

என வாழ்த்துதல் காணலாம்: இதன்கண் ''பொய்யா நல்லிசை நிறுத்த மாறன் றலைவனாகக் கடந்தடுவாய் வாளிளம்பல் கோசர்'' எனக் கூறியதனால் இம்மாறன் வாய்மொழிக் கோசர் தலைவன் என்று துணியப்படும்.

பொய்யா நல்லிசை நிறுத்த மாறனென்பது ''வாய் மொழி நிலை இய சேண் விளங்கு நல்லிசை வளங்கெழு கோசர்'' (அகம். 205) என்ற கோசர் வாய்மைச் சிறப் பொடு பொருந்த நிற்பது கண்டு கொள்க. நச்சினார்க் கினியர் ஈண்டு ஒருபடியாகத் துணியாமல் ''மாறன் இவன் குடியிலுள்ள பாண்டியன்; அன்றி ஒரு குறுநில மன்னன் என்றலுமொன்று'' என வுரைத்தது நோக்குக.

மாறன் றலைவனாகக் கடந்தடு கோசர் என்ற தொடர், மாறன் என்பவன் தமக்குத் தலைவனாகச் சென்று அடுகின்ற கோசர் எனப் பொருள்பட நிற்றலான் இம்மாறன் ஓர் குறுநில மன்னனாகிய கோசன் என்றே

துணியப்படுமென்க. இவன் மாறன் என்று பெயர் பூண்டது பாண்டியர்க்குரிய நண்பினனாய் அவனுக்குப் பெருந் துப்பாகிய தன்மை பற்றி யென்றுணரலாம்.

இங்ஙனங் கொள்ளாது ஈண்டு மாறன் பாண்டியன் என்றாற் "பாண்டியன் தலைவனாகச் சென்றடு கோசர் நிற்புகழ்ந்தேத்த உறைமதி" என்று பொருள் பட்டு இவ் வாழ்த்துக் கேட்கின்ற பாண்டியனினும் வேறோர் பாண்டியன் றலைவனாகக் கோசர் சென்றடுதல் தோற்றி நிற்பதனால் அது பொருளாகா தென்க. நச்சினார்க்கினியர்க்கே இது திருவுள்ள மில்லாமையாற் "குறுநில மன்னன் என்றலுமொன்றென"ப் பிறிதொன்று கூறியொழிந்தார் என்க.

மாறன் றலைவனாகக் கடந்தடு கோசர் நின்வாய் மொழி கேட்ப என்றதன் பின், ஐவருட்படப் புகழ்ந்த அவரும் பிறரும் நிற் புகழ்ந் தேத்த என்றது, குறுநில மன்னராகிய ஐம்பெரு வேளிரும், பெரு வேந்தராகிய பிறரும் நின்னைப் புகழ்ந்து வாழ்த்த என்றவாறாம்.

இவற்றாற் கோசரும் கோசர் தலைவனாகிய மாறனும் பாண்டியற்குத் துப்பாதல் நன்கு துணியலாம். இதனா லிவர் பாண்டியராற் சிறப்பிக்கப் பெற்று வாழ்ந்தது உய்த் துணரலாகும். மேலும் மதுரைக் காஞ்சியுள், (507—510)

"மழையொழுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூ ரவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன
தாமே எந் தோன்றிய நாற்பெருங் குழுவும்"

எனக் கூறுதலான் மோகூர் மன்னனாகிய பழையனுக்கும் கோசருக்கும் ஒரு தொடர்புண்மை புலப்படுவது; இல்லை யேல் இவன் மோகூரவையகம் விளங்கும் வண்ணம் இக் கோசர் சமயத்து வந்து தோன்ற வேண்டியது இல்லையா மென்க.

இத்தொடர்பு அவ்வரசற்கும் இக் கோசர்க்குமுள்ள குடிப் பிறப் பொற்றுமையே ஆமெனின் நன்கு பொருந்தும். உற்றுழி யுதவுவேம் என்று தம்மினத்தவனான மோகூர் மன்னன் பழையனுக்குரைத்த வண்ணம் அவன் அவையகம் விளங்க வந்து தோன்றி உதவியதனையே இது குறிப்பதென்று நன்குணரலாம்.

இவ்வுதவி மோரியர் தென்றிசையில் வடுகரை முன்னுறவிட்டுப் படையெடுத்து வந்தபோது மோகூர் அவர்க்குப் பணியாமல் எதிர்த்து நின்ற நிலையில் அம் மோகூர்க்குத் துணையாக அவர் ஆலம்பலத்துச் சமயத்துத் தோன்றிப் பகைப் படையைச் சிதைத்ததனையே குறிப்பதென்பது,

''பறைபடப் பணில மார்ப்ப விறை கொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயாகின்றே'' (குறுந். 15) எனவும்,

''வெல்' கொடித், துனைகா லன்ன புனைதேர் கோசர்
தொன்மூ தாலத் தரும்பணைப் பொதியில்
இன்னிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை மோகூர்
பணியா மையிற் பகைதலை வந்த
மாகெழு தானை வம்ப மோரியர்
புனைதேர் நேமி யுருளிய குறைத்த
இலங்கு வெள்ளருவிய வறைவா யும்பர்''
(அகம். 251) எனவும்,

''முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்
தென்றிசை மாதிர முன்னிய வரவிற்கு
விண்ணுற வோங்கிய பனியிருங் குன்றத்
தொண்கதிர்த் திகிரி யுருளிய குறைத்த
அறையிறந் தவரோ சென்றனர்'' (அகம். 281)

எனவும், வருவனவற்றான் அறியலாம்.

இவற்றுள் வடுகர் முன்னுற மோரியர் தென்றிசை மாதிர முன்னிய வரவு என்றது, மோரியர் வடுகரை முன்னிட்டுக் கொண்டு தென்றிசையி னிலமுள்ள வரையும் வென்று கொள்ள எண்ணிப் படையெடுத்து வந்த வரவு என்றவாறாம்.

இவ்வரலாறு அவர் படையெடுத்த போது தந்தேர் இனிது செல்லற்கு மலையையறுத்து வழிகண்டு வந்தன ரென்றும், அப்போது மோகூர் அவர்க்குப் பணியாது எதிர்த்து நின்றதென்றும், அங்ஙனம் எதிர்த்து நின்ற நிலையின் மோகூர் தளராதபடி, கோசர் தாம் முன் உற்றுழி யுதவுவதாகச் சொல்லிய வண்ணம் அம்மோகூர் ஆலம் பலத்து இன்னிசை முரச மிரங்கத் தோன்றிப் பாசறை கொண்டு பகைப் படையைச் சிதைத்தனரென்றும் அறியலாம்.

உற்றுழியுதவுவதாகச் சொல்லியது ''கோசர் நன் மொழி போன்று வாயாகின்றே' என்பதனாற் பெறப் பட்டது. தெம்முனை சிதைத்த ஞான்றை என்பதனால் மோகூர்க்கும் கோசர்க்கும் பொதுவான பகைப் படை மோரியர் படை என்று கருதப் பட்டது. மோகூர் பணியா மல் இருந்தது இயல்பாகிய வீரத்தானும் தம்மினத்தவராய கோசர் சமயத்து வந்து உதவுவார் என்ற துணிபானும் என்று நினையலாம்.

''தொன் மூதாலத்துப் பொதியில'' என்பவற்றால் பழைய ஆலமரத்தின் அரிய கிளைகளினிழலிலுள்ள அம்பலம் என்று கொள்ளப்பட்டு அதுவே ஆலம்பல மெனப் பட்டது. இம்மோகூரும் அதனை அடுத்து ஆலம் பலமும் கள்ளக் குறிச்சிச் சேகரத்து இன்று முள்ளனவாதல் நோக்கிக் கொள்க.

மோரியர் குறைத்த குன்றத்து அறைவாய் கள்ளக் குறிச்சி மலையிடை வழியாகும்; அல்லது செங்கண்மமரா அத்து அமைவாய் வழியாகு மென்க. இவ்வூரே செங் குட்டுவன் பொருது வென்றதா மென்பதும், கோசர் வந்துதவியதாகு மென்பதும், குட்டுவனஞ்சூர், கோசர் பாடி என்னும் ஊர்கள் இம் மோகூர்ப் பக்கத்துண்மை யான் உய்த்துணரலாம்.

மோகூரை யடுத்துள்ள ஆலம்பலம் என்ற சிற்றூரே கோசர் தோன்றிய மூதாலத்துப் பொதியிலாகு மென்க. பொதியில் அம்பலமென்பது தமிழ் வழக்கு. இம்மோகூரிற் பெரிய அகன்ற பாழ் மேடு உள்ள நிலமே பழைய அரண் மனை இருந்த இடமாகு மென்பர்.

# 3. பல்லவர்

பல்லவர்க்குரிய தொண்டை நாடு சளுக்கிய வேந்தராற் கொள்ளப்பட்டதென்றும் அவரை வென்று சோழர் வேங்கட மலையை யுடையராயினர் என்றும் கொள்ளற் கேற்ற பழம் பாடல் உண்டு. தொண்டையர் வேங்கடம் ஆண்டபோது செந்தமிழ் நாடாண்ட பாண்டியற்கு முதலில் அடங்கியிருந்தனர் என்பது

''வடவயின் வேங்கடந் தந்த
வெண்கோட் டியானை மறப்போர்ப் பாண்டியர்''
(அகம் 27)

என வந்துழிப் பழைய உரைகாரர் வேங்கடம் ஆளும் அரசர் திறையாகப் பாண்டியற்குத் தந்த யானை எனக் கொள்ளுதலான் அறியலாம்.

இப்பல்லவரை வென்று சளுக்கியர் வேங்கடமுடைய வராதலும் அவரை வென்று வளவர் கச்சியையும் வேங்க டத்தையும் உடையராதலும்,

''பலியுருவிற் கேலாத படைமழுவாள் வலனேந்தி''
(தொல். சொல். 146. பேராசிரியருரை)

என்னும் பாட்டில்

''விழிவலத்தா னுருவழிந்தோன் வேடங்கண் டுணர் வழியாக்
கலிகெழு கடற்கச்சிக் கமழிளந்தே மாவி
னொலிதளிரு முலைச்சுவட் டுடன்பிறப்ப வுலவுங்
கால்'' எனவும்

''எல்வளை மகளி ரிடுபலி நசைஇ
பல்கடை திரிதருஞ் செல்வநிற் பரவுதும்

கொடியணி யேனம் பொடியணிந்து கிடப்ப
வடதிசை வாகை சூடித் தென்றிசை
வென்றி வாய்த்த வன்றாள் விடலை, வளவன்
இமிழிசை வேங்கடம் போலத் தமிழகத்து
நாவலொடு பெயரிய ஞாலங்
காவல் போற்றி வாழிய நெடிதே''

எனவும் வருவனவற்றால் உய்த்துணரலாகும். இவற்றுட் கச்சியிற் றேமாவி னிழலமர்ந்த சிவபிரானை வாழ்த்திப் பரவுவதும், வளவன் வேங்கடம் போல நெடிது வாழ்தற் பொருட்டு எனக் கூறுதலான் உணரப்படும்.

மேற்குறித்த மேற்கோளிற் கொடியணி யேனம் பொடியணிந்து கிடப்ப வடதிசை வாகை சூடி என்றதனால் சளுக்கியருடைய பன்றிக்கொடி தரைப்புழுதி படிந்து கிடத்தல் கூறியது கொண்டு வளவன் சளுக்கியரை வென்றது புலப்படுதல் காணலாம். இவ்வளவற்குக் கச்சியும் வேங்கடமும் உரியனவாய காலம் சளுக்கியரை வென்றதன்பின் என்பது பொருந்தும்.

''வடவர் வாட'' வென்ற வென்றி இவ் வுருத்திரங் கண்ணனாரே பட்டினப் பாலையுட் டிருமா வளவற்குக் கூறலான் இவ்வளவன் கிள்ளிவளவன் என்று கொள்ளுதல் தகும். இண்டுப் பல்லவர் கொடியாகிய எருது கூறாது, பன்றிக்கொடி கூறியதனால், இவ்வளவன் பன்றிக் கொடியுடைய சளுக்கியரை வென்று வேங்கட நாடுடையனாதல் துணியப்பட்டதென்க.

இவ் வளவனையும் இந்நூற் றிரையனையும பாடியவர் ஒரு புலவரேயாதலால் அவர் பெரும்பாணாற்றுப்படை பாடியபோது திரையன் கச்சியுடையனா யிருந்தா னென்றும், அவர் பின்னே கிள்ளிவளவனைப் பட்டினப் பாலையிற் பாடியபோது தொண்டை நாட்டுத் தலைமை சளுக்கியர் கைய தாயினதை வளவன் வென்றனன்

என்றும் கருதுதல் ஏற்குமென்க. இவ் வளவரினின்று பல்லவர் பழையபடியும் வென்று தம் தொண்டை நாட்டைக் கைப்பற்றினர் என்று துணிக.

இதுவே சரித்திர முறைக் கியைவதாகும். நூல்நய முறைமையான் ஆராயின் பெரும்பாணாற்றினும் பட்டினப் பாலை பெரிதும் நயமிக்கதாகக் தோன்றல் நோக்கப்படுத லான் இப் புலவர் பெரும்பாணாறு பாடி அதனினும் நயம் பட்ட தொன்றைப் பின்னர்ப் பாடினர் என்பதே பொருந் திற்றாகும்.

இனிப் பெரும்பாணாற்றில்

''அந்நீர்த் திரைதரு மரபி னுரவோ னும்பல்''

என்ற அடியில், அந்நீர்த் திரைதரு மரபும் அம்மரபில் ஓருரவோனும் அவ்வுரவோன் வழித் தோன்றியவனும் கூறப்படுதல் நன்கு அறியலாம். இதன்கண் அந்நீரென்றது கடலைக் குறித்ததாம்.

முன்னரே ''முந்நீர் வண்ணன் பிறங்கடை'' யென்று கூறிப் பின்னர் அந்நீரென்றது அம் முந்நீரைச் சுட்டிய தாதல் எளிதில் அறியத்தகும்.

இதனால் ''அந்நீர்த் திரைதரு மரபு'' என்பது கடலலை தரப்பட்ட குலம் என்றதாகும். இவ்வாறு ஓர் குலம் இந் நாவலந்தீவில் வழங்கப்படுதல் ''அப்ஸரஸ்'' (கடலான் உண்டாக்கப்பட்ட தேவ கணிகையர் என்பது பொருள்). குலவழக்கால் அறியலாம். இவருண்டான வரலாறு வான்மீகம் பாலகாண்டம் 46ஆம் ஸர்க்கத்துள் 34-முதல் 37-வரையிலுள்ள சுலோகங்களிற் காண்க.

இத்திரை தரு மரபின் உரவோன் என்றது இப் பல்லவ சாசனங்கள் பலவற்றிற் றங்குல முன்னோர் வரிசையிற் காணப்பட்ட துரோணனையும், அவ்வழியில் அசுவத்தாமன் மகனாகிய பல்லவனையும் குறிப்பது என்று துணியப்

படுவது. இவன் பிறப்பு வரலாறு மகாபாரதம் ஆதி பர்வத்தில் பாரத்வாஜ முனிவர் கங்கையினீரில் "க்ருதாசி" என்னும் அப்ஸரஸைக் கண்டு மோகிக்க அதனாற் றுரோணர் உண்டானார் என்று தெளியக் கூறுதலான் அறியப்படுவது. இத் துரோணர் கங்கைக்கு வடக்கண்ணும் தெற்கண்ணும் இராஜ்யமுடைய துருபத வேந்தனைத் தன்னால் வில்வித்தை பயில்விக்கப்பெற்ற பீமார்ஜுனரைக் கொண்டு வென்று அவன் கங்கை வடநாட்டைத் தமதாக்கி "அஹிச்சத்திரம்" என்னும் நகரிலிருந்து அரசாண்டனர் என்பது அவ் வாதிபர்வத்தே நன்கறியப் பட்டதாகும். (மகாபாரதம் தமிழ் மொழி பெயர்ப்பு. ஆதிபர்வம் 557-ம் பக்கம் பார்க்க).

இதனாற் கடற் றிரைதரு மரபின் வில் வலியான் மேம் பட்ட துரோணர் பரத்வாஜர்க்குண்டானாரென்றும், அவர் தம் வலியாலும் துணைவலியாலும் கங்கை நதி பாயும் உத்தர பாஞ்சாலத்தை அஹிச்சத்திர புரத்திலிருந்து அரசு செலுத்தினார் என்றும், அது துருபத தேயமாகியிருந்து துரோண தேயமாகி மாறிற்றென்றும் நன்கறியலாகும். இத் துரோணனுக்கு மகன் அசுவத்தாமன் எனப் படுவான். இவன் சிவ னம்சமும் யமன் அம்சமும் பெற்றுப் பிறந்தவன் என்பது மகா பாரதத்திற்கண்டது. இதனால் போர் வன்மையை மிகுத்துக் கூறியதாகும். பல்லவர் பட்டயங்களிற் காணப்படும் நந்தியும் கணிச்சியும் ஆகிய இலாஞ்சனைகள் அசுவத்தாமா உண்டாவதற்குக் காரணமாகிய சிவபிரானுக்கும் யமனுக்கும் உரியனவாம். இயைபு நோக்கிப் பொறிக்கப்பட்டன என்று துணியத் தகும்.

யமனுக்குக் கணிச்சி யுண்டென்பது,

"கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவீர் மாதோ" (புறம். 195)

என்பதனா லறியலாம். இவ் வசுவத்தாமானின் மகன் பல்லவன் என்பது பல்லவ சாசனங்கள் பலவற்றினுங்

கண்டது. அமராவதியில் ஒரு தூணிற் பொறித்த பல்லவ சாசனப் பகுதியில் (No. 32 Vol. I) அசுவத்தாமன் மதனி என்னும் அப்ஸரஸ்ஸை மணக்க அவள் அசோக மரத்தின் பல்லவங்கட்கிடை மகவினையீன்றபோது அம்மகவைப் பல்லவத் தொட்டிலிற் கண்டு, பல்லவன் என்று அசுவத்தாமன் பெயரிட, அக்குழவி பல்லவன் என வழங்கப்பட்டதென்று கூறுதலானும் பலலவன் திரைதரு மரபின் உண்டாதல் அறியலாம்.

இவற்றாற் பல்லவர் தம்மைப் பாரத்வாஜ கோத்திரத்தினர் என்று கூறிக்கொண்டே ராஜ பரம்பரையினராகவுங் கூறுதற்குக் காரணம் இனிது தெளியலாம். பாரத்வாஜ கோத்திரத்துத் தோன்றி அஹிச்சத்ர நாடாண்டதனால் இருகுலப் பெயரும் புனைந்தனராவர். பிற்கால சாசனங்கள் இவரைப் பிரம க்ஷத்திரிய குலமென்று கூறுவது கேட்டுணர்க. இப் பல்லவர் சாசனங்களில் இவர் பரம்பரையினர் பலர்க்கும் இறப்ப முன்வைத்துள்ள விமலனுக்கு அடுத்து வந்துள்ள கொண்கணிகன் என்னும் பெயர் கடற்றிரையின் வழியினன் என்பதை வலியுறுத்துவது தெரியலாம்.

அணிகன்-அர்ணிகன், கொண்கு அணிகன்-கடற் சேர்ப்பில் நீரலையிற்றோன்றிய மரபினன் என்பதாம். அர்ணிகன் என்பதே அணிகன் எனமரீஇ யினதாகும். அர்ணம்-அலைநீர், மலையா நாட்டில் இப் பல்லவ மரபினரென்று துணியப்பட்ட அரசர் சாசனங்களில் "கொண் குலகர்" என்றும் கவுரவார்ணத்யுதி எனவும் வரும் பெயர்களும் இக்கருத்தையே வலியுறுத்தும். கொண்துங்கன் என்பது கடலிற்றோன்றிய சிறப்பினன் என்னும் பொருளதாம். கொண் என்பது கடற்குப் பெயரென்பது கடற் கானத்தைக் கொண்கானம் என்பதனால் உணரலாம். கொண்கன் கடற் சேர்ப்பன் ஆதலும் தெரிக.

---

மகா பாரதம். ஆதி பர்வம்.

இருக்கு வேதத்தில் அர்ண என்பவன் ஓர் பழங்குடித் தலைவனாகக் கேட்கப்படுகின்றான். அவ்வழியினன் அர்ணிகன் என்னும் அமையும். அணிகன் என்னும் பெயர் வழக்கு இக்குடியினரிடம் நெடுங்காலத்துக்குப் பின்னும் வழங்கிய தென்பது செயங்கொண்டார்,

> ''மறிந் தோடி யெவ்வரசுஞ் சரியவென்று
> வருமணிகப் பல்லவர் கோன்''

எனப்பாடுதலான் அறியலாகும். அணிகப் பல்லவர்-அர்ணிகப் பல்லவர் எ.று. கடலில் வந்த மகள் மரபிற் பல்லவத்திலீன்றதனாற் பெயர் பெற்ற குடிமையுடையர் என்க. இந்த அர்ணிகன் என்னும் பெயரே தமிழில் திரையன் என மொழி பெயர்த்து வழங்கப்பட்டதென்று நினைத்தல் தகும்.

செயங்கொண்டார் தாழிசையில் ''அணிகைப பல்லவர் கோன்'' என்று பாடங்கொண்டாலும் அர்ணிகை அணிகை யென்று வந்ததாகக் கருதி நீரில் வந்தவன் வழியினன் பல்லவர்கோன் என்று பொருள் கூறிச் செல்க. இக்குல வரலாறு தெரியப் படாமையால் அணிக்கைப் பல்லவ ரென்றும் அணுக்கப் பல்லவ ரென்றும் பாடம் சிதைத்து வழங்கப்பட்டு அதுவே சாசனங்களிலும் எழுதி வெட்டப் பட்டதோ என்று நினைத்தற்கு இடமுண்டு. அணிகப் பல்லவரைக் குடிப்பெயர் மறைந்து சோழர்க்கு அடங்கிய நிலையில் அணுக்கப் பல்லவரென அவர் செய்ற்கேற்ப மாற்றி வழங்குவது எளிதேயாமென்க.

இதற்கேற்பவே தெள்ளாறெறிந்த நந்தி பல்லவனைப் பாடிய கலம்பகத்தில்,

> ''நந்திவீர வணிகனைப் போய்'' (47)

என்பதனால் அணிகன் என்று வழங்குதல் காணலாம். ஈண்டு வணிகன் என்று கொள்ளாமைக்கு வீர விசேடண மிட்டாரெனத் தெளியலாம்.

இங்கு ''வீரவணியனைப் போய்'' என்று பாடங் கொண்டு இந் நந்தி புல்லவனை * ''வன்னியன்'' என்று வழங்கினர் என்பாரும் உண்டு. வன்னியன்-வனமாகிய நீரில் வந்தவன் என்று பொருளாதலான் அஃது அர்ணிகன் என்னும் பெயர்ப் பொருளின் வேறாகாமை குறிக் கொள்க. இதுவே பொருள் என்பது ''சொரிமுத்து வன்னியன்'' என்னும் பெயர் வழக்கானுமுணரலாம். சொரி முத்து வனம் கடல் என்பது தெள்ளிது. சொரிமுத்து வன்னிக்குப் பொருந்தாமல் வனம் ஆகிய நீர்க்கே பொருந்துதல் உய்த்துணர்க.

இனி இப் பல்லவரை நீரின் வந்த வன்யர் எனக் கொள்ளாது நெருப்பாகிய வன்னியினின்று வந்தவரென்று கூறுவாருமுண்டு.

அது,

''நங்கள் கோத் தொண்டை வேந்த
னாம வேன் மன்னர்க் கெல்லாம்
தங்கள்கோன் கங்கை நாடன்
சந்திர குலப்ரகாசன்'' (நந்திக் கலம்பகம். 49)

என அவனைச் சந்திரகுல விளக்காகக் கூறுவதோடு பகைத்தல் உணர்க.

தொண்டையர் சூரியகுலச் சோழர் குடியினர் என்பதும் பொருந்தாமை இதனானே துணியலாம். நந்தி பல்லவனை இக்கலம்பகம் உடையார் ''கங்கை நாடன்'' என்று பாடுதலான் இவன் முன்னோர் கங்கைக் கரை நாட்டினராதல் தெளியப்படும். இப் பல்லவ முன்னோன் துரோணன் என்பதும் அவன் வடகங்கை உத்தர பாஞ்சாலத்தை யாண்டவன் என்பதும் மகா பாரதத்தாற் றெரியப் படுதலால் அதற்கியையக் ''கங்கை நாடன்'' என்று பாடங்கொள்வதே சிறந்ததாகும். ஈண்டு அங்க

---

* வந்யன்-வனத்தில் வந்தவன்

நாடன் எனப் பாடங்கொள்வாரும் உண்டு. சிந்தாமணியுட் பல்லவதேயம் கங்கைக் கரைக்கு மூன்று காத தூரத்துள்ள தென்று பதுமையார் இலம்பகத்துட் கூறினார்.

> ''படுமழைப் பருவம் பொய்யாப் பலலவதேய
> மென்னும் தடமலர்க் குவளைப்பட்டந் தழுவிய
> யாணர் நன்னாட் டிடை நெறி''

என்புழி நோக்கிக் கொள்க.

கங்கைக் கரைக்கு இரு காததூரத்துப் பிசாசபுரம் உள்ளதென்றும், அதற்கு ஒருகாத தூரத்துப் பல்லவதேய முள்ளதென்றும், கூறுதல் கண்டுகொள்க. இது கங்கை வடகரையிலாண்ட துரோணர் வழியினர் பின்னே கங்கை யைக் கடந்து தெற்கண் வதிது வாழ்ந்ததைக் குறிப்பது காண்க. இப்பல்லவருள் மூத்தவன் மரபினர் தென்னாட்ட கத்தும், இளையன் மரபினர் துவராபதி, மலையம், யவத் வீபம், முதலியதென்கீழ் நாட்டும் புக்குத்தம்அரசு நிலை யிட்டனரென்று நினையலாம். இப்பல்லவருள் இளையவன் மரபினர் மலையநாட்டில் வாழ்ந்த இடம் காடஹம் எனப்படுவது. இதனால் இப்பல்லவர் காடவர் என்று பெயர் பெற்றனராவர்.

தமிழ்நாடு புக்க பல்லவரைக் காடவர்க்கு முனறோன் றல் என்பது நந்திக்கலம்பகத்துட் கண்டது (29). மலைய நாட்டுக் காடவரும் திரைதரு மரபை மறவாமற் போற்று தல் அவ்வரசர் ''கௌரவார்ணத்யுதி'' (Jasb Letters Vol. 1. 1935) என்று தம்மை வழங்கலானறியலாம் பெருநீரிற் றோன்றிய ஒளி என்பது இச் சாசனத் தொடரின் பொரு ளாம். பெருந் திரையொளி யெனினு மமையும் ஈண்டும் அர்ண்ண சப்தமே வழங்கிக் காட்டுதலால் இவ் வுண்மை நன்குணரலாம்.

இம் மலையநாட் டரசர் பெயருள் ''கொண்துங்கா'' என்பதும் ஒன்றாகும். இதுவும் கடலிற்றோன்றிய துங்கா

என்று பொருளாதல் காண்க. கொண்கானம் கடற்காடு என்னும் பொருளாதல் காண்க. கொண்கானங் கிழான் என்பது தொன்னூல் வழக்கு. கொண்கன் என்னும் பெயர்க்குக் கடற்சேர்ப்பன் என்னும் பொருணோக்கி யறிக.

இதற் கியையவே அமராவதி ஸ்தூப சாசனம், ஸிம்ம வர்மன் பாகீரதியைக் கடந்து, கோதாவரியைக் கடந்து, கிருஷ்ணவேணியைக் கடந்து தானிய கடகம் (Dronakotta) என்னுமிடத்து, பவத்விஷனான வீதராகனைத் தரிசித்தான் எனக் கூறுதல் கண்டுகொள்க. இதன்கண் பாகீரதியைக் கடந்து என்றதனால் இவன் முன்னோர், கங்கை வடகரையிலிருந்தது நன்கு புலனாகும். இது பாரதக் கதையொடு மியைதல் காண்க. இதனால் இப் பல்லவகுலம் கடல்கெழு செல்வி யடியாக வந்த துரோணர் மரபாதல் நன்கு தெளிக.

இப் பல்லவர் சாசன வரலாற்றோடு பொருந்தவே இவ் விளந்திரையனைப் பாடிய பழம் பாடலில்,

> ''மாக்கட லார்ப்பதூஉம்—கடுமான் திரையனை
> யான் பயந்தே னென்னுஞ் செருக்கு''

என்றதனால் இக் குடித்தோற்றம் முதன்முதல் கடலிடத்த தாதல் துணியப்படும். அத்தோற்றம் அப்ஸரஸினின்று இக் குடி தோன்றிற்றென்னும் பாரத வரலாற்றிற்கும் சாசன வரலாற்றிற்கும் இனிதியைந்து விளங்குதல் கண்டு கொள்க. இவ் வுண்மையை இவ்வுருத்திரங் கண்ணனார்,

> ''முரசு முழங்கு தானை மூவருள்ளும்
> இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
> வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
> அல்லது கடிந்த வறம்புரி செங்கோற்
> பல்வேற் றிரையன்''

என்பவற்றால் இனிது விளக்கினார்.

இலங்கு நீர்ப்பரப்பு—கடல் எ.று. இதன்கண் உண்டான வளைகள் (சங்குகள்) போல்வர் இக் கடனீரின் வந்த குடியினர்-அக் குடியினராகிய சங்கங்களினு மேம் படுத்துப் புகழப்பட்ட வசை நீங்கு சிறப்பினையுடைய வலம் புரியை ஒப்பவன் இத் திரையன் என்று விளக்கியது கண்டு தெளிக. வலம்புரி அருமையிற் றோன்றியதற்கும் வசை நீங்கு சிறப்பு மூவரின் மேம்படுதற்குங் கொள்க. உரை காரர் ''மூவருள்ளும்'' என்பதற்கு மூவரினும் என்றது காண்க. மூவர் உள்ளுஞ் சிறப்பு மூன்று பேரரசரும் தமக் கில்லையே என்று நினையுஞ் சிறப்பு எனினுமமையும். நீர்ப்பரப்பின் வலம்புரியை உவமித்தது ''கடல் யான் பயந்தேன்'' என்று செருக்குவதாகக் கூறியதனோடு இனிதியைந்து பொருள் சிறத்தல் காண்க.

இவற்றிற்கெல்லா மியையவே மகேந்திர பல்லவன் சிராப்பள்ளிக் குன்றிற் பொறித்த சாசனப் பகுதியில் அவன் தன் விருதுப் பெயர்களினிடையே ''குவத் ரோணன்'' எனக் கூறிக்கொள்ளுதல் சே' கப்படுவது. நீரர மகளிர் இயல்பு பெருங்கதையின்,

''மறுவி றெண்ணீ ராழ்கய முனிந்து
நறுமென் குவளை நான்மலர் பிடித்து
நேரிறைப் பணைத்தோள் வீசிப் போந்த
நீரர மகளிவ ணீர்மையு மதுவோ'' (4, 17, 37—40)

என வருதலானுமறிக. தக்க யாகப் பரணி

''வாரிதி... .... சிகர சீகர வருவி நீரர மகளிர்'' (30)

என்பதற்கு, ''மந்தர பர்வதத்துத் திருவினாற் கடற்றிவலை யிற் புறப்பட்ட அருவி நீரினின்று தோன்றிய தெய்வப் பெண்கள்'' என உரைகாரர் கூறி இங்ஙனம் உற்பவித் தார் என்றது ''வங்கிச சுத்தம்'' சொன்னவாறு என விளக்கியதையும் நோக்கிக்கொள்க. இந் நூலிற்றிரை தரு மரபென்றதும் வங்கிச சுத்தஞ் சொன்னதாகக் கொள்க.

இனிக் ''குவத்ரோணன்'' என்ற சொற்கண் குவம் என்பது நீரிற் பிறப்பதற்குப் பெயர். இதனால் நீரிற் பிறந்த துரோண குலத்தவன் என அவன் தன்குடிப் பிறப்புப் பெயரைப் புனைந்தது தெரியலாம். இவ்வாறு கூறுவது தன் குடி முதல்வன் கர்ப்பவாசமறியாதவன் என்பது கருதிப் போலும். துரோணர் பரத்வாஜருக்குக் கருப்பாசயத்திற் றங்காமற் பிறந்தார் என்பது பாரதம். (ஆதி பர். பக். 250).

இப்பல்லவர் துரோணகுல வீரர் என்பதற்கியைய இவ்வாசிரியர் இந்நூலுள் இத்திரையனை ''வாடாத் தும்பை வயவர் பெருமகன்'' என்கிறார். இதன்கண் வாடாத் தும்பை வயவர் என்பது ''வாடா வஞ்சி'' கருவூராதல் போலவும் (புறம் 39) ''வாடாவள்ளி'' (பெரும்பாண் 370) என்பது ஓர் கூத்திற்காவது போலவும் துரோண குல வீரரை உணர்த்துவது என்று கொள்க. தும்பைக்குத் துரோணம் என்பதும் பெயராதல் பிங்கல நிகண்டில்,

''தும்பையும் பதக்குந் துரோண மர்கும்''

(பிங். 3660)

என்னுஞ் சூத்திரத்தானறியலாம்.

இங்குக் கூறும் தும்பைச் செடியன்று என்பதற்கு வாடா என்று விசேஷித்துக் காட்டினார் என்க. நச்சினார்கினியர் ''வாடாவள்ளி'' என்பது வாடுங் கொடியினையுடைய வள்ளியல்லாத வள்ளிக் கூத்து'' எனப் பெருமபாணாற்றிற் பொருள் கூறுதல் காண்க.

இவ்வாறு பொருள் உணர்த்தல் தமிழ் வழக்கே என்பது ''துவ்வா நறவு'' (நறவு என்னும் ஊர்) (பதிற்று. 60) ''பரிவேட் பஞ்சா அயிரை'' (அயிரை என்னும் மலை) (ஷை. 21). ''ஊராதேந்திய குதிரை'' (குதிரைமலை. புறம். 158) ''மிதியற் செருப்பு'' (பதிற். 21), ''இரும்பு புனைந்தியற்றாப் பெரும்பெயர்த் தோட்டி'' (புறம். 150) என வருவன கொண்டுணர்க.

நறவு—ஒரூர்; அயிரை—ஓர்மலை; குதிரை—ஒரு மலை; செருப்பு—ஒரு மலை; தோட்டி—ஒரு மலை; (இஃது அங்குசகிரி என்பது; ஒசூர்ப்பற்றில் உள்ளது) என அறிதல் போல ஈண்டுத் தும்பை துரோண குலம் என்று கொள்க. தும்பை வயவர் துரோண வீரர். இக்கடற் பிறப்பிற் கியையவே இப்பல்லவர் திருக்கடன்மல்லையிற் றங்குல முதல்வனான இறைவனுக்குச் சலசயனக் கோயிலாக்கி அதற்கு நீர்ப்பாயலெனப் பெயரிட்டு வழங்கியது இந் நூலான் உய்த்துணரப்படுதல் நோக்குக. ''நீர்ப்பாயற் றிறல்லை போகி'' என வருதல் காண்க.

நீர்ப்பாயற்று—சல சயனத்தையுடைய பட்டினம். ஈ. று. இதனை மாற்றித் தலசயனமாக்கியது பிற்காலத் தென்று கொள்க. நீரரமகளர்கிய கிருதாசியின் மகனான துரோணனைத் தீயிற் பிறந்த திருஷ்டத்துய்மன் கொன் றான் என்னும் பாரத கதையும் இப் பல்லவர்க்குள்ள நீர்த் தொடர்பை நன்கு விளக்குதல் காண்க. நீர்க்குடிக்கும் தீக்குடிக்கும்* உள்ள பகைமை காட்டுவ திஃதென்க.

இவற்றிற்கேற்ப இந் நூலுள் பல்லரசரும் இவனை அடைதலைக் கூறியவிடத்துக்;

''கல்வீ ழருவி கடற்படர்த் தாங்கு''

என்பதனால் இவனைர் கடலோடு ஒப்புக்கூறுதலும், இவன் ஒளியை மிகுத்துக் கூறிய இடத்துக்

''குரைகடல் வரைப்பின் முந்நீர் நாப்பன்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு''

என்பதனாற் கடலிற் பிறந்த ஞாயிற்றிற்கு ஒப்புக் கூறுத லும் வந்தன என்று இயைபுட நினைத்தல் தகும்.

---

* பாரஸீகர் தீ வழிபடுவோரும், நீர் வழிபடுவோரும் ஆகி இருவரும் தம்முட் பகைமைகொண்டது மேனாட்டுச் சரிதங்களிற் கண்டது. (Herodotus)

இனி இத் திரையனைத் ''தொண்டையர் மருக'' என்றதனால் இவன் பிறந்த குடி தொண்டையர் குடி யெனப்படுதல் அறியலாம். நச்சினார்க்கினியர் தொல் காப்பிய எழுத்ததிகார இறுதியில் (தொல். எழுத். 483). தொண்டைமானாடு தொண்டைநாடு என மரீஇயிற்றெனக் கொள்ளுதலின் முதற்கண் தொண்டை என்பது குடிப் பெயராகவிருந்து அப்பால் அக்குடியின் ஆட்சியுட் பட்ட தனால் நாட்டிற்குப் பெயராயிற்றென்று துணிதற்கு அவருரை இடந்தருவது காண்க. இம்முறை சேரநாடு, பாண்டி நாடு, சோணாடு என்டனவற்றிற்கும் ஒத்தல் நோக்கிக்கொள்க. இதனாற் றொண்டகம் என்னும் நாட் டின் பெயர் தொண்டையென்று மரீஇயிற்றென்று கூறுதல் அவர்க் குடன்பாடன்மை தெரியலாம். இவ்வுருத்திரங் கண்ணனாரும்,

''உரவுவாட் டடக்கைத் தொண்டையோர்''

என்றதனாற் பெருவீரக் குடிப்பெயராகவே கருதல் காண்க.

நந்திக் கலம்பகத்திற் பல்லிடத்தும் நந்தி பல்லவற்குக் கோவையாகிய தொண்டை மாலையே கூறுதலான் அம் மாலையா லிக்குடி இப்பெயர் பெற்றதாமெனின் அது அந் நூலுட் டொண்டையோன் தொண்டை (66) என்றதனால், தொண்டைக் குடியினன் தொண்டைமாலை என்று கொள்ள வைத்ததனோடு மாறுபடுதல் கண்டு உண்மை தெளிக. தொண்டைமாலை யுடையோனுடைய தொண்டைமாலை யெனக் கூறற்காகாமை தெளிக. இப் பல்லவர் பண்டுவதித நாடு கங்கைக்கரைக்கு அடுத்தது என்று தெரிதலால் இவர் தென்னாட்டுப் போந்ததன் பின்னரே குடிப்பெயர் பெற்றனர் என்பது பொருந்தாதாம்.

சிந்தாமணிப் பதுமையார் இலம்பகத்துப் பலலவதேயம் கங்கைக் கரைக்கு மூன்று காதத் துள்ளதாகக் கூறப்

பட்டுள்ளது. (சிந். 350). பல்லவ வேந்தன் ''தொண்டைப் பல்லவன்'' எனப் படுதல் நச்சினார்க்கினியர் அகத்திணைச் சூத்திர மேற்கோட் பாடலான் அறிய வந்தது. இப் பல்லவர் தமிழ்நாட்டில் இடையிற் புக்கவர் என்பது நந்திக் கலம்பகத்தில்,

''தங்கோல் வளைத்ததிகழ் சேரர் சோழர்
தமிழ் மன்னர் நின்ற நிலைமேல்
வெங்கோ னிமிர்ந்த வரையுஞ் சிவந்த
விறனந்தி'' (42)

என்பதனால் அறியலாம். இதனால் இவர்க்கு இத் தொண்டையர் என்னும் பெயர் தென்னாட்டுப் போந்த பின் உண்டாயிற்றெனத் துணிதற் கில்லையாம்.

தொண்டைப் பல்லவன் என்பதனாற் பல்லவன் என்னும் பெயர் உண்டாதற்கு முன்னே தொண்டையன் என்னும் பெயர் உண்டாயிருக்க வேண்டுமென்று நினைப்பது உசிதமேயாகும். பல்லவ சாசனங்களின்படி நோக்கின் பல்லவன் என்பவன் துரோணனுக்குப் பேரனாவன். (அமராவதித் தூண் கல்வெட்டு No. 32 பார்க்க)

துரோணன் துருபதனுடைய கங்கைக்கரையில் உள்ள உத்தரபாஞ்சாலத்தை அஹிச் சத்திரம் என்று பெயரிட்டுத் துரோண தேயமாக்கியது, பாரதம் ஆதிபர்வத்தும், துரோண பர்வத்தும் கண்டது. இத் துரோணர் வழியினர் துரோணஜர் எனப்பட்டு அவரே தொண்டையர் என வழங்கப் பெற்றனர் என்று உய்த்துணரலாகும். இஃது இவர் சாசன வரலாற்றிற் கியைவதேயாம். ''தொண்டையோன் தொண்டை'' என நந்திக் கலம்பகத் திற் றொண்டை மாலையின் வேறாகக் குடிப்பெயராகக் கூறிய தொண்டையன் என்பதற்கும் இஃதியைதல் காண்க.

''தோண மந்தைப் பாரத்வாசச் சதுர்வேதிந்'' (S.I.I. 532) என்னுந் தொடரும் இக் கருத்தை வலி யுறுத்தும்.

''கொண்டியுண்டித் தொண்டையோர் மருக'' எனப் பெரும்பாணாற்றிலும் குடிப்பெயராகவே கொள்ளக் கிடத்தலுங் கண்டுணர்க. பாரதப் பழைய வுரைகாரர் துரோணர் பிறந்த ''துரோணியை'' மலைக் குகையென்று கூறுவர். (ஆதிபர்வம் 64-ஆம் அத்.) பல்லவர் மலைகளிற் குகை தோண்டுதற்கு இஃது இயைபுடையதாகும். இதனானும் இக்குடித் தலைவன் துரோணன் ஆதல் உணரலாம்.

பல்லவர் மலைக் குகையுடையர் (பாரதம். பீஷ்ம. 9) என்ற நூல் வழக்குங் காண்க. இவர் கிருஷ்ணவேணீ நதிக்கரையில் வதித போது தம்மூரை த்ரோணீ கோட்டையென்று பெயரிட்டது பின்னர்த் தரணீ கோட்டை யென மாறிற்றென்று நினையலாம். இவர் சாசனங்களிற் காணப்படும், இவற்றிற்கேற்பவே வடநாட்டு வழக்குற்ற பைதிலி மொழியில் ''துரோண'' என்னும் பதம் ''தொண்ட'' என மருவுவது உண்டென்பது துரோண காகம் தொண்ட காகம் என்று வருதலான் அறியப்படுவது. துரோணம் என்பது காக்கைக்குப் பெயரென்பது'

''சிம்புட் பறவையும் வில்லுங் காக்கை
தும்பையும் பதக்குந் துரோணமாகும்''
(பிங்கலம் 3360)

என வருதலானறியலாம்.

இனி பரத்வாஜருக்குத் தம் தரும பத்நினியிடம் உண்டானவர் அக்னிவேசயர் எனப்படுவர். அந்த ரிஷிக்கே க்ருதாசி யென்னும் நீரா மகளிடம் உண்டாயினவர் துரோணர். அக்னிவேச்யரும் துரோணரும் ஒரு தந்தை மக்கள் ஆதலால் இவர்கள் சகோதரர் ஆவர். இவ்வுண்மை மகா பாரதத்தில் (ஆதிபர். 140 ஆம் அத்யாயம்) பாரத்வாஜர் அந்த ஆக்னே யாஸ்திரத்தை அக்னிவேச்யருக்குக் கொடுத்தார்; அந்த அக்னிவேச்ய முனிவர் பாரத்வாஜ புத்திரரும் தமக்குச் சகோதரருமாக இருக்கும் துரோண

ருக்குத் தமக்குக் கிடைத்த ஆக்னே யாஸ்திரத்தைக் கொடுத்தார்'' என வருதலானறியலாம்.

மகா பாரதம் பீஷ்ம பர்வம் 50-ஆம் அத்தியாயத்தில் இப் பரத்வாஜ முனிவர் வழியினராகிய இரு திறத்தாரையும், ''அக்னிவேச்யரும் துஹுண்டரும்'' என்று குறித்தல் காணலாம். இதன்கண் அக்னிவேசஸ்து, ஹுண்டாஸ்ச என்று பிரிப்பதும் உண்டு. அக்னிவேச்யர் துரோணர் என்று கூறப்படவேண்டியவரே. ஈண்டு அக்னிவேச்யர் துஹுண்டர் எனப்பட்டனர் என ஊகித்தலாகும்.

துரோண குலத்தவர் நெடுங்காலத்திற்கு முன்னே அவ் வடநாட்டிலே துஹுண்ட குலத்தவரென வழக்குப் பெற்றனர் என்று நினையலாகும். துரோணஜா என்பது துஹுண்ட என மாறிப் பின்னும் மைதிலி மொழியில் தொண்ட எனத் திரிந்ததென்று கொள்ளலாம்.

துரோணஜா என்பதே தொண்டையர் எனத் தமிழ் வழக்குப் பெற்றதாதல் இதனாலறிக. அக்னிவேச்யரையும் துஹுண்டரையும் சேரக் கூறுதல் அவ் விரு திறத்தரும் ஒரு தந்தை மரபில் ஸஹோதர வழியினராதல் பற்றி என்று எளிதிலுணரலாகும். இவ்வுண்மையினாலன்றே நந்திக் கலம்பகத்தில் ''தொண்டையன் தொண்டை'' என வந்ததெனத் துணிக.

தொண்டைக் குலத்தவன் தொண்டைமானென்பது அதன் பொருளாகும். பரத்வாஜருக்கு கிருதாசி என்னும் நீரரமகளிரினின்றுண்டாகிய துரோணரும், கௌதமருக்கு ஜரலவதி என்னும் நீரரமளினின்றுண்டாகிய கிருபியும் சேர்ந்து அச்வத்தாமாவைப் பெற்றார் என்பது மஹா பாரதமாதலின் (ஆதிபர்வம். 140-ஆம் அத்யாயம்) இத் துரோண மரபு திரைதரு மரபாதல் கண்டுகொள்க. அம் மரபில் அச்வத்தாமாவிற்கு மதனி என்னும் நீரரமகளிடத்தில் உண்டாயினவன் பல்லவன் என்று அமராவதிச்

சாசனங் கூறுதலானும் இக்குடி, திரைதரு மகளிர் மரபே யாதல் ஐயமறத் துணியலாம்.

இவற்றாற் பல்லவன் தன் தாய் வழியாலும் தந்தை வழியாலும் திரைமகளிர் மரபினனாதல் உணர்க. இனி இத் திரைதரு மரபினன் அர்ணன், அர்ணி, அர்ணிகன் என்று வழங்கப்படுவர் என்று முன்னரே விளக்கினேன். அர்ண்ண என்பது நீர்க்கும் அலைக்கும் பெயராகும். இத் திரைதரு மரபினர் இப்பெயரானே கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டிலும் இருத்தல் தாலமி என்னும் மேற்றிசை யாத்திரிகர் எழுதிய பூகோள நூலில் அருவர்ணியருடைய ஊராகப் பிதுண்ட் நகரைக் கூறுதலான் உணரலாம்.

அரு அர்ணி என்பது அரு நாட்டினராகிய அர்ண குலத்தவன் என்று பொருளாகும். அருநாடு—அருவன் நாடாம். அரு என்பது நீரட்டையின் பெயரென்பது உரையாசிரியர் ''இருநிலந் தீண்டா'' (தொல். புறத். 16) என்புழி அரு என்பது நீருட் கிடக்கும் அட்டையெனக் கூறியதனால் அறியப்பட்டது. அருவரன்—நீரட்டைபோல நீரின்வந்த ஆண்மகன் எனவும், அருவாளர் அவ்வட்டைபோல நீரின் வந்த மக்கள் எனவும் கொள்ளலாம்.

இவ்வருவாளர் இத் தென்னாட்டிற் குடியேற்றப் பட்டவர் என்பது நச்சினார்க்கினியர் கருத்து. அவர் அகத்தியர் தென்னாடு போதுகின்றவர் துவாரபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண் குடிவேளிர் உள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கி (தொல். எழுத். பாயிரவுரை) எனக் கூறுதலா னறிக. வேளிர் நெருப்பில் வந்தவரும் அருவாளர் நீரில் வந்தவரும் ஆவர். இப் பிதுண்ட நகரத்தை அவராஜ

---

* அர்வாக் கணவாய் (Aruva Velley) இமயமலையில் பத்ரிநாதர் கோயிலை அடுத்துள்ளது.

னுடையதாகக் காரவேலா சாசனம் கூறுவது. அருவ ராஜா என்பது அவராஜா என் மரீஇயது போலும், இதைப் பூவராஜா என்று படிப்பதும் உண்டு.

பூர்வராஜா-முன்னை வேந்தன். இக் காரவேலாவின் காலம் கி.மு. 157 என்பர். இந்தப் பிதுண்ட நகரம் பிறருக்கு அச்சஞ் செய்யும் துஹுண்டராற் பெயர் பெற்ற தாம் என்று நினையலாம். இவர் கிருஷ்ணவேணி நதிக் கரையிலுள்ள தானிய கடகத்தும், கச்சியிலும், ஆட்சி செலுத்தினராவர். இவர் வடநாட்டுக் கொண்ட துஹுண்ட குலப் பெயரை ஊருக்கும் தமக்கும் கொண்டு வழங்கியது புலனாகும்.

நிற்க, இவர்க்குத் தொண்டைமாலை யேற்பட்டது அசுவத்தாமன் மதனி என்னுங் கடல்கெழு செல்வியை விழைய அவள் அவனுக்குண்டாகிய மகவை அசோக மரத்தடியிற் பல்லவப் பாயலி லீனுதலான் அக் காலந் தொட்டு ஆம் என்றுநினைத்தலும் தகும். அசோக மரத்திற் படர்ந்த பிம்ப பல்லவங்களை (தொண்டைப் பாசிலையை) அக்குழவிக்குப் பாயலாக்கி அதன்கண் வளரவிட்டா ளென்று கொள்ளலாம். அதுதொட்டு அப்பல்லவனும் அவன் வழியினரும் அத் தொண்டையை மாலையாகப் போற்றிக்கொள்ளலாயினர் என்க.

இஃது ஆதொண்டை யன்றென்பது கோவையேய் நந்தி என்பதனானும்,

''செங்கோன் மாயன் தொண்டையங் கனிபோற்
சிவந்து''

என்பதனானும்

''அவனி நாரணன் றோட்கு லாமது
மலர்த் தொண்டை வாய்ச்சியர்''

என்பதனாலும் நன்கறிக. இத் தளிரிற் பல்லவன் வளர்ந் தனன் என்பது,

'பல்லவர் கோனந்தி மல்லை யன்றிக்
கூறாளிவ ளிளங்கொங்கை யவன்வளர்
தொண்டையுல்லா
னாறா திவள் திருமேனி'' (நந்திக். 40)

எனக் கூறுதலா னுணரலாம்.

''பாசிலைத் தொண்டைப் பல்லவன்'' (தொல். அகத். 54) என்னும் மேற்கோட் டொடர்க்கும், பசிய இலைகளை யுடைய தொண்டையந் தளிரில் வளர்ந்த பல்லவன் என்று பொருள் கூறுதல் பொருந்திற்றாகும். நந்திக்கலம் பகத்துப்,

''பதியின் வளர்ந்த நறுந்தொண்டை
யங்கோனந்தி பல்லவர்க்கு'' (45)

என்புழி உறைவிடம்போல வளர் நறுந்தொண்டை எனக் கூறலாவதன்றி வேறாகாமை நோக்கிக் கொள்க. அமராவதி ஸ்தூப சாசனத்தும் (No. 32. S.I.I. Vol. I.)

''பல்லவ போகாஸ் தரணெ ஸயாநம்
பிதாஸுதம் பல்லவ இத்யவாதி''

தளிர்த் திரளாகிய பாயலிற் (தொட்டிலிற்) கிடந்த மகவினைத் தந்தை பல்லவன் என்றழைத்தனன் என்றதன்றி இன்ன பல்லவம் என்று உரையாமையுங் காண்க. இதன் உண்மை ''அவன் வளர் தொண்டையல்லால் நாறா திவள் திருமேனி'' என்றதனால் நன்கு வெளியாதல் கண்டு கொள்க.

இனிக் கோவைச் சாற்றாற் பிழைத்து அதனாற் பிம்பசாரன் எனப் பெயர் சிறந்த பேரரசனும் புத்தர் காலத்துள்ளனாதலால் வடநாட்டு இத் தொண்டைப் பொருட் பெயர் சிறத்தல் அறியலாம். இதனால் இது பழைமை அரசர் குடி வழக்கென ஈண்டைக்கு நினைக்க. இப்பல்லவர் அஹிச்சத்திரம் (பாம்புக்குடை உடையர்) என்பது பிற் காலத்தும் மறக்கப்படாமை,

''வடக்குடை யானந்தி மானோ தயளிந்த வைய
மெல்லாம்
படக்குடை யேந்திய பல்லவன்'' (நந்திக். 65)

என வரும் நந்திக்கலம்பகத்தான றியலாம்.

இதன் கண் வையமெல்லாம் படும்படி குடையேந்திய பல்லவன் என்றால் விபரீதப் பொருள் விளைப்பது தெளிக. இதனாற் படக்குடை என்பதற்குப் பாம்பின் படத்தை யுடைய குடை என்பதே பொருளென்க. படநாகம் (சிந். 1546) என்பது காண்க. அஹிச்சத்ரம் என்பது பாம்புக்குடை என்று பொருள் படுதல் அறிக. இக் கருத்திற் கியையவே கலிகன்றியார் பரமேச்சுர விண்ணகரப் பதிகத்துப் ''பாம்புடைப் பல்லவர் கோன்'' என்றருளிச் செய்தல் கண்டுகொள்க. குடையிற் பாம்புடைய பல்லவர் என்று கொள்க. பாம்பு குடையாதல் ''சென்றாற் குடையாம்..........அணையாந் திருமாற் கரவு'' (இயற்பா. 1,53) என்பதனானுணர்க.

அஹிச்சத்ரகர் சாசனம் ப்ரபாஸா என்ற இடத்திற் கிடைத்துள்ளதுங் காண்க. இதனால் இவ் வழியினர் நெடுங்காலம் தம் பெயர் மறவாமல் அரசாண்டது புலனாம். சிந்தாமணியுட் (1185) கங்கைக்கு இரு காத தூரத்துப் பல்லவ தேயமுள்ளது கூறியதும் ஈண்டைக்கு ஏற்ப நினைக்க. இப்பல்லவ தேயம் ஜைநர் ஸ்ரீ புராணக்கதுங் கண்டதாகும்.

இனித் தொண்டையர் என்பது தமிழ்ச் சொல்லே என்று கொள்ளின் இவர் சாசனங்களில் இப்பல்லவரை ஒன்பது கண்டத்தையும் ஆள்பவர் என்று சிறப்பித்தல் (நவகண்ட சாசகர்) கருதி வழங்கப்பட்டதென்க. தொண்டு—ஒன்பது. ''தொண்டு தலையிட்ட'' என்பது தொல்காப்பியம். தொண்டை நவகண்டம் என்க. தொண்டையர் நவகண்ட நாயகர் எ-று. மகாபாரதத்தில் துரோண பர்வத்தில் பீஷ்மரிறந்த பின் கௌரவர் படையில்

ஒன்பது கொடி கூறி அவ் வொன்பதின்மருக்கும் அப்படை வருக்கும் தலைவராகத் துரோணரை ஸேநாபதியாக அபிஷேகஞ் செய்தது கேட்கப்படுதலின் அதற்கியைய இப் பெயரைச் சிறப்பாகக் கொண்டனரோ என வூகிக்கவு மிடனுண்டு. இவ்வொன்பது கொடியும்,

1. அசுவத்தாமன் சிங்கவாற்கொடி.
2. கண்ணன் யானைக் கச்சைக் கொடி.
3. விருஷசேனன் மயிற் கொடி.
4. கிருபர் (அசுவத்தாமாவின் மாமன்) எருத்துக் கொடி
5. சல்லியன் கலப்பைக் கொடி.
6. பூரிச்ரவஸு யூபக் கொடி.
7. ஸிந்துராஜன் பன்றிக் கொடி.
8. சலன் யானைக் கொடி.
9. துரியோதனன் அரவக் கொடி.

என இவையாம். இதை விரிப்பிற் பெருகும்.

# 4. ★ சேதுநாடு

தெய்வங்கொள்கையானும் தெய்வஞானங்களானும் அவைபற்றிய பெருநூல்களானும் எவ்வுலகுந் தொன்று தொட்டே ஏத்துஞ் சிறப்புடைய இப்பரதகண்டத்துக்கு இருபெருவரம்பாகவுள்ளன ஸேதுவும் இமயமும் என்ப; ''ஆஸேது ஹிமாசலம்'' என்பது வழக்கு. இங்ஙனம் ஸேதுவையும் இமயத்தையும் இருபேரெல்லையாகக் கொண்ட இப்பரத கண்டத்தை வடநாடு, தென்னாடு என இரண்டாகப்பகுத்திடைநின்று விளங்குவது திருவேங்கட மெனுந்தெய்வமாமலையாம். திருவேங்கடத்துக்கு வடக்கி லுள்ளமக்கள் வழங்குவது ஆரியம்-வடமொழி எனவும், அதற்குத் தெற்கிலுள்ளமக்கள் வழங்குவது தமிழ்-தென் மொழி எனவும் பெயர்பெறும். கல்வியிற்பெரிய கம்பரும் ''வடசொற்குந் தென்சொற்கும் வரம்பிற்றாய் நான் மறைக்கு மற்றைநூற்கு, மிடைசொற்ற பொருட்கெல்லா மெல்லையதாய்............ஓங்கியவேங்கடத்திற் சென்று றுதிர்மாதோ'' என்பதனா லிதனை விளக்கி யுரைத்தார்.

சேது என்பது சீராமமூர்த்தி கடல்மேலிட்ட திருவணை. இது கன்னியாகுமரிமுதற்றென்பது, மணிமேகலை நூலுள், மணிமேகலா தெய்வம் வந்துதோன்றியகாதைக் கட் ''குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறைப், பரந்து சென் மாக்களொடு தேடினன் பெயர்வோன்'' என வருதலா னறியப்படும். இதனாற் குமரியை யெல்லை யாகக்கூறுமிடனெல்லாம் சேதுவைக்கூறின் அது தவறா காதென்று தெளியலாம். இச்சேதுவை யணித்தாவுள்ள பூமி ஸேதுநாடு, ஸேதுராஜ்யம் என்று பெயர் சிறக்கும்.

---

* இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றாம் வருஷக்கூட்டத்திற் படிக்கப்பெற்றது.

இது மண்ணியனாடு பலவற்றுள்ளும் புண்ணியநாடென்று போற்றப்படும்.

இத்தகைய ராஜ்யம் பண்டுதொட்டே ஒன்றுண்டென்பது, சங்கர சோழனுலா வென்னும் பழைய தமிழ் நூலில்,

"..................................போதகலா
மாது மணக்கு மணவாளன் சேதுக்குந்
தஞ்சைக்குங் கோழிக்குந் தாமப் புகாருக்கு
முஞ்சைக்குமேனையுதகைக்கும்—வஞ்சிக்குங்
கொற்கைக்குங் கூடற்குங் கோசலைக்குங்
காஞ்சிக்கும்
விற்கைக்கு நில்லா மிதிலைக்கு—நிற்கு
மரச னரசர் குலாந்தக னாரப்
பிரசனபயர் பெருமான்"

எனப் பலநாடுகட்கும் முற்படவைத்துச் சேதுநாட்டை வழங்குதலாற் றெளிந்துகொள்ளலாம்.

இத் தமிழ்நூற் கேற்பவே ஆக்நேயபுராணாந் தர்க்கதமான புல்லாரண்யக்ஷேத்ரமஹாத்மியத்திற் சீராமமூர்த்தி ஆங்குத் தன் சீபாதங்களைப் பாக்கியப்பேற்றாற் றொழுது நின்ற நிஷாதத் தலைவனொருவனைத் தான் கட்டிய சேதுவைப் பரிபாலித்துவருமாறு நியமித்தருளினான் என்று கேட்கப்படுதலானு மிதனுண்மை வலியுறும்.

இந்நிஷாதத்தலைவனு மிவன்வழியினரும் குறுநில மன்னராய்நின்று செந்தமிழ்வளர்த்த செல்வப்பாண்டியரென்னும் முடியுடைப்பேரரசர்க்குப் போர்ப்படைத்தலைவராய் முற்காலத்தி லிருந்தனராவர். இவ்வொற்றுமையாற் பாண்டிநாட்டுள்ள சேதுவுக்கும் பாண்டியரே பேரரசராதல் பற்றி, மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன்மள்ளனார் என்னும் பழைய சங்கப்புலவர் எழுபஃதாம் அகப்பாட்டில்,

"...................................................புதுவது
பொன்வீ ஞாழலொடு புன்னை வரிக்கும்
கானலம் பெருந்துறைக் கவினி மாநீர்ப்
பாசடைக் கலித்த கணைக்கா னெய்தல்
விழவணி மகளிர் தழையணிக் கூட்டும்
வென்வேற் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை
வெல்போ ரிராம னருமறைக் கவித்த
பல்வீ ழாலம் போல
வொலியவிந் தன்றிவ் வழுங்க லூரே"

என்பதனாற் றிருவணையாகிய சேதுமுன்றுறையைக் கவுரியராகிய பாண்டியருடையதென்று சொற்றார்.

இதன்கட் சீராமமூர்த்தியார் தாமும் பரிகாரமுமாகச் சில இரகசியம் விசாரிக்கப்புக்கபோது இக்கடற்கரையி லுள்ளதோ ராலமரத்துப்பறவைகள்கூக்குரல் அதற்குத் தடையாதல்கண்டு அவை யொலியடங்கக் கையமைத் தருளினார் என்பது கேட்கப்படுகின்றது. இச்செய்தி நிகழ்ந்ததலம் இப்போது நவபாஷாணமென்று பெயர் சிறந்ததென்பதும் இக்காரணம்பற்றியே ஆங்குக் கடலும் ஒலியவிந்துளதென்பதும் நாம் பழைமையாய்க் கேட்பன வேயாம்.

தஞ்சையையாண்ட நாயகர்குலத்துத் திருமலாம்பா என்னும் பெண்மணியால் மிகவு மினியதாகச்செய்யப்பட்ட வரதாப்யுதயம் என்னும் வடமொழிக்காவியத்தில் ஸேதுபதி யரசரை,

"ரக்ஷித்வா ஸேதுநாதம்
சரணமுபகதம்
பாண்டிய ராஜா ப்தகம்தம்—"

என்பதனால் ஸேதுநாதன் என்றும் பாண்டியவரசர்க்கு நண்பர் என்றுங் கூறப்பட்டுள்ளது. பாண்டியர்க்குத்

துணைவராய் நெடுங்காலம் ஸ்வதந்த்ரராய்ப் போந்த சேதுபதிகள் திருமலைநாயகர் மதுரையை யாளத்தொடங் கியபோது திருமலை நாயகர் மந்திரி ராமப்பையன் * சூழ்ச்சியாற் பெரிய குலபரம்பரையை மட்டும் உடைய ராய்ச் சிறுகியநிலையி லெஞ்சிய பாண்டியவரசரோடு பகைத்துப் பின் நாயகர்க்குச் சில காலம் அடங்கியிருந்தன ரென்பது,

"திரமேற விசுவநாதத் திரும லேந்திரன்
 சித்தமகிழ் ராமப் பையன்
செங்கோட்டு வேலருட னுமைபாக ரைத்தொழுது
 திக்கு விசயஞ் செய்தனன்
உரமான தென்கடற் றிருவணை யடைத்தனை
 னுலகு நாற்ப திலக்கமும்
ஒருகுடைக் கீழாக வாக்கினை புரிந்தனன்
 னுடையவன் மனது வரவே
துரமான மலையாள முங்கொள்ளை
 கொண்டனன்
 றுட்டரைக் கழுவேற்றினன்
சோரரை யொடுக்கினன் குருவியழ கன்றலை
 துணித்தனன் பாண்டியனையும்
பொரமாற விட்டுச் சடைக்கனை யடக்கினன்
 பூசுரர்க டேவர் பதியும்
பொலிவுற நடத்தினன் சந்த்ரசூரியரளவு
 புகழ்நிலை நிறுத்தினானே."

**(திருச்செங்கோட்டுத் திருப்பணிமாலை)**

என்னும் பழையபாடலா னறியப்படுவது.

---

* ராமப்பையன்விஷயமாக ஓரம்மானைநூல் சென்னைக் கையெழுத்துப் புத்தகசாலையி லுள்ளது. அதன்கண் ஸேதுபதிபோரில் ராமப்பையனை எதிர்த்துப் பொருது பட்டவன் ஸேதுபதிமருமகனாகிய வன்னித்தேவன் என்று கூறியுள்ளது.

இது ஸேது * சடைக்கத் தேவர்காலத்து நிகழ்ந்த தென்பது இதனாற் றுணியலாம். பின் மதுரை நாயகர்கள் கருநாடர்படையெடுப்பிற்கு ஆற்றாதநிலையில் ஸேது வேந்த ருதவிபெற்றுக் கருநாடரை வென்றபோது ஸேது பதிகட்குப் பழைய ஸ்வதந்த்ரமுற்றும் அளித்தனரென்ப. ஸேதுபதியேவலால் நாயகர்க்குத் துணையாய்நின்று கருநாடரை வென்றவன் தெய்வகன்னி யென்னு மந்திரி. இதனானே ''ஏலனவாரு கர்த்தாக்கள் மெச்சுஞ் சலியா மதிமந்த்ரி மா தெய்வகன்னி'' என்று சிறப்பிக்கப் பெற்றானாவன்.

சேதுபாண்டிய னென்ற பெயர்வழக்கம் இச்சேது காவலர்மரபினர்க்குள் அதிகமாகக் காண்டலானும் சேது பற்றிப் பாண்டியர்க்குள்ள தலைமை நன்றாகிக்கப்படும். இப்பாண்டியரும், இவரோ டொருதன்மையராகிய சேர சோழரும் படைப்புக்காலந்தொட்டே மேம்பட்டுவருத லுடைய பழைய தமிழ்க்குடியினராவர். ''வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி, பண்பிற் றலைபிரித லின்று'' என்னுந் திருக்குறளுரையில் ஆசிரியர் பரிமே லழகர் பழங்குடி யென்பதற்குத் தொன்றுதொட்டு வரு கின்ற குடியின்கட்பிறந்தா ரென் றுரைகூறித் தொன்று தொட்டுவருதல்-சேர சோழ பாண்டிய ரென்றாற்போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டுவருதல் என விளக்கி னார். இதனாலும், வான்மீகிபகவான் சீராமாயணத்து ஸுக்ரீவன் வானரசேனையை நாடவிட்டதருணத்துப் பாண்டியர்செல்வச்சிறப்பையும் அவரது கபாடபுரத்தையும் சேர சோழ ராச்சியங்களையும் எடுத்தோதுதலானும் இவர் பழைமை நன்குணரப்படும்.

---

* சடைக்கத்தேவர் என்பது சடைக்கோத்தேவர் என்பதன் மரூஉ. சடைக்கன் என்பது சடைக்கோன் என் பதன் மரூஉ. இவருக்கே தளவாய் என்றொரு பெயரும் உண்டு.

இத்தமிழ் வேந்தர் மூவரும் ஆறங்கமும் நிரம்பிய முடியுடைப் பேரரசராதலான் இவர் பழைமை கூறியதனானே இவர்க்குப் படைத்துணையாய்த் தொன்றுதொட்டுமுள்ள வீரர்பழைமையுங் கூறியதேயாம். இவ்வீரர் **பாண்டியன் மறவர் சேரன்மறவர் சோழன்மறவர்** என்று வழங்கப்படுவர். இம்மறவரைப்பற்றி யான் செந்தமிழ்ப் பத்திரிகை நடாத்திய காலத்துச் **சேதுபதிகள்** என்ற வியாசத்தில் நிரம்ப எழுதினேனாதலா லிண்டைக்கு வேறே கூறாமல் விடுக்கின்றேன்.

பாண்டியர் தலைமைக்குள்ளாய இச்சேது நாடு, சோழர் பாண்டியரை வென்று பாண்டிநாட்டிற் பெரும் பகுதியைத் தந்நாடாக்கிக் கொண்ட காலந்தொடங்கிச் செம்பிநாடாய், இந்நாட்டு மறவர், சோழன் மறவராய காரணத்தாற் **செம்பிநாட்டுமறவரெனப்** பெயர் பெற்றனராவர்.

சேது நாட்டையே செம்பிநாடென்று கொண்டு, சேதுவைப் படைத்துச் சேது ராஜ்யத்தை ஆதியில் உண்டாக்கியளித்த ஸ்ரீராமமூர்த்தியைச் சேது நாட்டான் என்று துணிந்து அவனையே செம்பிநாட்டான் என வழங்குதலும் உண்டென்பது தஞ்சைச் சரசுவதிநிலயபுத்தகசாலைக் கணுள்ள **புல்லையந்தாதிக்**கண்,

''காட்டானைக் குறுதுயரங் காட்டானைத் திருமருவிக்
களிக்குஞ் செம்பி
நாட்டானைப் பவத்திலெம்மை நாட்டானைக்
கசடனையெந் நாளுஞ் சேர
மாட்டானைப் புரந்தபசு மாட்டானைப் பிறவியிடை
வணங்கி னோரை
வீட்டானைப் பரமபத வீட்டானைப் புல்லையினாம்
விரும்பி னோமே''

என வருதலா னறியப்படுவது. இதன்கட் டிரு மருவிக் களிக்குஞ் செம்பி நாட்டான் எனப் பாடுதலான் இந் நாட்டின் புண்ணியவிசேடம் நன்றுணரலாகும்.

சீராமமூர்த்திக்குப் பிறந்தவுரிமையானே கிடைத்த கங்கை நாட்டினும் வெற்றியாற்படைத்த ஸேதுநாடு சிறந்தது என்று தோன்றத் திருமருவிக்களிக்குஞ் செம்பி நாடு என்றார். கங்கை நாடாட்சி எத்துணையோர்கைப் பட்டுப் பலப்பல மாறுதலடைந்து நிற்க, இச்சேதுநாடாட்சி யொன்றுமட்டும் ஸ்ரீராமமூர்த்தியி னருள்பெற்ற சிலை வேடர்குல முறையினிலை பெற்று வருதலானே இப் புண்ணிய நாட்டிற்கு அத்தெய்வானுக்கிரகம் மிகவுண் டென்பது ஊகித்தலாகும். அத்தெய்வம் வீட ்ற்கு முடி வழங்கியநாடும் இதுவாதல் நினைக்கத்தகும்.

''தாருக்களுள் அசுவத்தமுமாவேன்'' என்று கண்ணன் கீதையி லருளிச்செய்தபடி திருப்புல்லா ணித்தலத்துத் தெய்வம் திருவரசாய் நின்று தன்னிழலிற் சேதுநாட் டரசைவைத்துக் காக்கின்ற தென்ப. திருப் ல்லாணியில் பகவான் அசுவத்தரூபியாய்நின்றளித்தலை,

''பெருவயிறு கண்டமாலை யுதரவலி ய ாவாயு
பிரமிய கிரந்திசூலை தலைநோவும்
இருமலொடு தந்தவாயு குருடுசெவிடுஞ் சொலூமை
பிவைகண்முத றொந்தரோக வினையாவும்
ஒருநொடியி லஞ்சியோடும் வறுமையொ ஞ்சிதாதி
யுபரியி னடைந்த பாவமவை தாமும்
மருமலர் பிறந்த கோதை மருவி மகி ழும்புலாணி
வளரரசு கண்டபேரை யணுகாவே''.*

என்னும் பழையபாடலா னுணர்ந்துகொள்க.

* சேதுபதிகள் என்னும் கட்டுரை இந்நூலுள் 5 ஆம் அத்தியாயமாக அடுத்து வருகின்றது.

இவற்றாற் சேதுநாடு செம்பிநாடு என வழங்குதலும், இந்நாட்டிற்கு மற்றை நாட்டினும் மேம்பட்டுள்ள தெய்வீகச்சிறப்பும் தெளியலாகும். சீராமமூர்த்தி திருவணை கட்டும்போது இந்நாட்டுச் சிறுவிலங்கும் இயன்ற உதவிசெய்து அவன் திருக்கரத்தால் வருடப்பெற்றுய்ந்தன வென்பது தொன்றுதொட்டுக் கேட்கப்படுவதாம். தொண்டரடிப்பொடியாரும், ''குரங்குகண் மலையை நூக்கக் குளித்துத்தாம் புரண்டிட் டோடித்-தரங்கநீ ரடைக்க லுற்ற சலமிலா வணிலம் போலேன்'' என இதனைச் சிறப்பித்தல் காண்க.

இப்போதும், சேதுநாட்டினைச் சேர்ந்ததாகவுள்ள 'மணக்குடி' என்ற ஊரையுடைய இடையளநாட்டை,

''வளவர் காக்கும் வளநாட் டுள்ளு
நாடெனச் சிறந்த பீடுகெழு சிறப்பிற்
கெடலருஞ் செல்வத் திடையள நாட்டுத்
தீதில் கொள்கை மூதா ருள்ளு
மூரெனச் சிறந்த சீர்கெழு மணக்குடி''

என நெடுந்தொகைக் கருத்துரைப்பாயிரத்துக் கூறியதனானும். சேதுநாட்டுத் தொண்டிப்பட்டினத்தையுடையராகவைத்துச் சிலப்பதிகார வூர்காண்காதைக்கண் ''வங்க வீட்டத்துத் தொண்டியோ'' ரென்று சோழரைக் கூறியதனானும் பாண்டியராட்சிக்குள்ளாய இச்சேதுநாட்டுப் பெரும்பகுதி சோழராட்சிக்குள்ளாயசெய்தி துணியப்படும்.

இச்சேதுநாடாண்ட மறவர்தலைவரெல்லாம், இவ்விரு வேந்தர்க்கும் போர்த்துணையாய் நின்ற காரணம்பற்றியே பாண்டியமண்டலஸ்தாபனா சாரியன், சோளமண்டலப்ரதிஷ்டாபகன் என்னும் விருதாவளி சூடினராவர். இவ்விருதாவளி இவருடைய பழையசாசனங்களிலெல்லாங் காணலாம்.

---

* தஞ்சைச் சரசுவதிநிலயத்துத் திருப்புல்லாணி விஷயமாகக் காணப்பட்ட பலவற்றுள் இஃதொன்று

சிங்களநாட்டை ஆண்ட ஆரியசேகரன் பாண்டிநாட்டைக் கைப்பற்றியகாலத்துச் சேதுகாவலன் என்ற சிறப்புப் பெயரைச்சூடிச் சேதுநாட்டாட்சியை மதித்துப் பாராட்டினான் என்பது,

''போது போனது வந்தது தனிமையும் புகுந்தது
பனிவாடை
தூது போனவண் டிவ்வழி மறந்தது சொல்லுவ
தினியேகோ
ஓது வார்புகழ் மணவை யரதிபதி யோருல
கொவ்வாகான்
சேது காவல னாரிய சேகரன் றிருவுளந்
தெரியாதே"

என்னும் பழையபாடலா னுணர்ப்படுவது. இவன் சிங்களம் ஆண்டதும் இவன் பெருங்கொடையும் வென்றியும் பிறவும்,

''பாவலன் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்குங்
காவலர் நிற்கும் படிவைத்த வாகண்டி யொன்
பதினும்
மேவலர் மார்பினுந் திண்டோளினுஞ் செம்பொன்
மேருவினுஞ்
சேவெழு தும்பெருமான் சிங்கை யாரிய சேகரனே."

என்னும் தமிழ்நாவலர்சரிதைப்பட்டா னறிக. இதன்பின் இப்பாண்டி நாட்டை மாவலிவாணாதிராயர்கள் வென்று ஆண்டகாலத்தும் 'ஸேது மூலாரக்ஷாதுரந்தரன்' என்று பெரும்பெயர் புனைந்துகொண்டனரென்பது சென்னைச் சிலாசாசனபரிசோதனை (585 of 1902)யிற் கிடைத்துள்ள ''மகாமண்டலேச்வரன், பூபாலகோபாலன், புவனேக வீரன், சமரகோலாகலன்,...... ஸேதுமூலரக்ஷாதுரந்தரன், மூவராயர் கண்டன், பட்டர்மானங்காத்தான், இறந்தகால மெடுப்பித்த சுந்தரத்தோளுடையார் மாவலிவாணாதிராயர் பிருதிவிராஜ்யம் பண்ணியருளாநின்ற சகாப்தம் 1450ன்

மேற் சொல்லாநின்ற நாளில் ''.........திருக்கானப்பேர் நயினார்க்கு'' என வருதலான் அறியலாகும். சுந்தரத் தோளுடையார் என்பது திருமாலிருஞ்சோலைமலையழகர் திருப்பெயர்களுள் ஒன்று. இவற்றாற் பாண்டியர், சோழர், ஆரியசேகரன், வாணாதிராயர் எனப்பட்ட பல பேரரசரும் இச்சேதுகாவலைப் பெரும்புண்ணியமாக மதித்துப் பெயர்பெற்றனரென்பது உணரலாகும். இவர்கள்காலங்களில், சேதுபதிகள் இவர்கள்கீழ்க் குறுநில மன்னராய் நிலவினராவரென்றுய்த்துணரலாகும்.

இனி மூவேந்தருட் செந்தமிழ்ச்சங்கஞ் சீர்பெற ஓம்பியகாரணத்தாற் றமிழுடையாரென்று நல்லிசைப் புலவராற் புகழப்பட்ட அறிவுடைப்பாண்டியாட்சி தொட்டே புண்ணியமுடைமையானன்றிச் செந்தமிழ்க் கல்வியானு மிச்சேதுநாடு சிறந்ததென்பதற்குச் சான்றாகச் சில கூறுவேன்.

கொற்கையினும் மதுரையினும் வளர்ந்த நறுந்தமிழ் மணம் அவற்றுக்கு மிகவும் அணித்தாய இச்சேதுநாட்டு வீசாதென் றியார்தாஞ் சொல்லத்துணிவர். பொன்னாங் கால் அமுதகவிராயரும் ரகுநாதசேதுபதியைப் புகழு மிடத்து,

> ''பால்வாய்ப் பசுந்தமிழ் வீசிய வாசம் பரந்த
> வையைக்
> கால்வாய்த்த வீரையர்கோன் ரகுநாதன்''

எனப் பாடுதல் காண்க.

பரமேதிகாச க்ஷேத்ரமாகவும், சரணாகதிதர்மம் விளைந்த பெருநிலனாகவும், கருணாகரன் ஸர்வஜீவர்க்கும் அபயப்ரதானம் அருளிய திவ்யஸ்தலமாகவும், இச் சேதுநாட்டுக்கோர் திலகமாகவும் விளங்கும் திருப்புல்லாணி எனப் பெயர்பூண்ட தர்ப்பசயனத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸர்வேச்வரன் ஞானஸ்வரூபியாதலை உலகெலா மறிந் துய்யவேண்டி ஆழ்வார்

திருமங்கையார் பெரியதிருமட லென்னுந் திவ்யப்ரபந்தத்துப் 'புல்லாணித் தென்னர்தமிழை வடமொழியை' என்று பணித்தருளிய சிறப்பு இந்நாட்டின் கல்விச்சிற... பற்றிய தென்று நன்குணர்ந்துகொள்

தெய்வமே தென்மொழி, வடமொழியாக மூர்த்தீகரித் தமர்ந்தருளியது இச்சேதுநாட்டுக்கே சிறந்ததென்று துணியப்படும். திருப்புல்லாணியில் ஸ்ரீ பலி யெம்பெருமானைத் ''தென்னன்தமிழான்'' என்று வழங்குவதுங் காண்க.

இன்னும், அத்தலத்து மூர்த்தியை ''வேதமுமானா'' னென்றும், ''அன்னமாய் நூல்பயந்தா'' னென்றும் ஆழ்வார் வழங்கியருளுதலையும் நோக்குக. இப்பெருமை யெல்லாங் கருதியே சேதுபதிகள் இத்திருக் கோயிலிற் பெருந்திருப்பணியெல்லாம் முற்றுவித்தனராவர்.

''எனதன்ம மாயினுந் தான்கற்ப காலமிருக்க
வுன்போன்
மனதி னினைந்தபடி செய்யயார்க்கும் வராது
கண்டாய்
கனதன மால்திருப் புல்லாணிக் கோபுரங்
கட்டிவைத்த
தனதவிஜய ரகுநாத சேது தளசிங்கமே''

என மிதிலைப்பட்டி அழகியசிற்றம்பலக்கவிராயர் பாடியதனா னிதனையுணர்க.

சேது நாட்டுக்கு மூலகாரணனான சீராமமூர்த்தியைக் கல்வியிற் பெரியரான கம்பர், ''தென்சொற்கடந்தான் வட சொற்கடற்கெல்லை தேர்ந்தான்'' என்றே பாடினார். சீதாப்பிராட்டியாரைத் தேடவிடும்போது அநுமானை வேறு கொண்டு சீராமமூர்த்தி, ''இராவணன் தேவபாஷை யறிந்தவனாதலான் அதனைச் சீதைமுன் போதாது மாநுஷபாஷையி லிரகசியங்களெல்லாவற்றையும் ஓதுக''

என்று கூறியருளினனென்று வான்மீகிபகவானிராமாயணத்துக் கேட்கப்படுதலாற் **சீராமமூர்த்திக்கும் சீதாப்பிராட்டிக்கும் அநுமானுக்கும்** அவ் விருமொழிவன்மையும் உண்டென்று நன்று தெளியலாம். அவர் திருவருள் பெருகிய இச்சேது நாட்டுக்கு அவ்விருமொழிவன்மையு முண்டாத லொருதலை. இச்சேதுநாட்டி னொருபகுதியாய நரட்டரசன்கோட்டையூர்ப்புறத்து நாடு வடகலைவேள்வி நாடாதலையும் தெளிந்துகொள்க.

இனிப் "பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடு, **முத்தரகோசமங்கையூர்**" என்று **திருவாதவூரடிகளாற்** றிருவாய்மலர்ந் தருளப்பெற்ற திருவுத்தரகோசமங்கைத்தலத்தைத் தன்கட்கொண்ட பெருஞ்சிறப்பானும் சேதுநாட்டின் கல்வி ஞானமேம்பாடே தெளிவிப்பதாகும். வடக்கட் கைலையங்கிரியினிருந்த ஞான நூல்களும் உமாதேவியாரும் ஒருகாரணத்தான் இத்திருவுத்தரகோசமங்கைப்பாக்கத்துத் தோன்றியருளி, உமாதேவியார் முன் கேளாதனவெல்லாம் இத்தலத்தே சிவபிரான்பாற் கேட்டருளினாள் என்பது இத்தலபுராணத்தாற் றெரிந்தது. இது திருவாலவாயுடையார்திருவிளையாடற்புராணத்தானுந் தெளியத்தகும்.

இஃதன்றி, அறிவாற் சிவனென்று சிறப்பிக்கப்பட்ட திருவாதவூரடிகள் திவ்யஞானம்பெற்ற **திருப்பெருந்துறையும்** இச்சேதுநாட்டதே யாயின் இதன்பெருமையை யாமே எடுத்துரைக்கவல்லேம்? இச்சேது நாட்டுள்ளாய திருவுத்தரகோசமங்கைத்தலத்தைத் தன்கட்கொண்ட தென்பாண்டி நாட்டையே "ஏழ்பொழிற்கு, நாதனமையாளுடையானாடு" என்று திருவாதவூரடிகள் சிறப்பித்தவாற்றானும், உலகெலாமுடைய சிவபிரானைத் "**தென்னாடுடைய சிவனே போற்றி**" என்று இச்சேது நாடுடைமையாற் புகழ்ந்தருளிய வற்றானும் இதன் ஞான மேம்பாடு நன்றுணரலாகும்.

இக்காரணங்களாலும், இதன் புண்ணியவிசேடங்களா லும் இச் சேதுநாடொன்றே நாடென்றுவழங்கப்படும் போலும்; இதனை, ''ஊரெனப்படுவ துறையூர்'' ''பூவெனப்படுவது பொறிவாழ்பூவே'' ''கோயிலென்பது கோன் றிருவரங்கம்'' ''கோயிலென்பதுகுளிர்பொழிற்றில்லை'' என்பன போலக் கொள்க. நாட்டரசன்கோட்டை யென்பதுக் குச் சேதுநாட்டரசனுடைய அரண் என்பதே பொருளாத லானும், புகார்ப்பட்டினம் விட்டுச் சேதுநாட்டுக் குடிபுக்க பண்டையோர்வழியினராகிய வணிக நன்மக்களெல்லாம் இன்றும் நாட்டுக்கோட்டையாரென்றே பெயர் சிறத்த லானும், திருமலைச்சேதுபதியைப் படிக்காசுப்புலவர் ''நாட்டிற் சிறந்த திருமலையா'' என்று விளித்துப் பாடுத லானும் இதனுண்மை ஊகிக்கப்படும். முன்பு புகார் நகரத்தராய்ப் பின்பு இப்புண்ணியநாடுபுக்க வணிகநன் மக்கள் நாட்டார் என்று பெயர்சிறந்த சேதுநாட்டாரி னின்று தம்மை வேறுபிரித்துணரவே நகரத்தார் என்று வழக்குப்பெற்றாராவரென் றுன்னுதல்கூடும்.

இங்ஙனம் புண்ணியமும் ஞானமுந் தழைத்த இச் சேது நாடாட்சி பெற்ற பாக்கியவான்களாகிய சேதுபதிகளை வைணவரெல்லாம் ''திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே யென்னும்'' என்னுமுறையாற் சீராமமூர்த்தியாகவும், சைவரெல்லாம் சீராமநாதமூர்த்தி யாகவும் உபசரித்து உசித மரியாதைசெய்தலும் இந் நாட்டுத் தொன்றுதொட்ட மரபாம். இதனை,

> ''சேதுபதி யென்றுநா சென்மமெடுத் தாய்கமல
> மாது பதிக் குன்பேர் வாய்க்குமா—பூதலத்தி
> னீயே ரகுராம னின்னையே பெற்றெடுத்த
> தாயே யருட்கோ சலை''

என வழங்கும் பழைய வெண்பாவானும்,

> ''ஆதிபதி யானமண்ட லாதிபதி வம்சபதி
> யரசர்க்கென்று

நீதிபதி சத்ரபதி சமஸ்தானபதி விஜயநிறைந்
தேநிற்கு
மாதுபதி துரகபதி கஜபதி நராதிபதி
வளர்தென் றேவைச்
சேதுபதி தரிசனமே ராமலிங்க தரிசனமாச்
செப்பலாமே''

என்று வழங்கும் பழைய விருத்தத்தானும் நன்கறிந்து கொள்க.

இவருடைய புண்ணியநாடு தமிழிற் பெரிய ஞானிகட்கு மிடமாய தென்பது, சைவத்திற் சிறந்த ஞானயோகியாகிய ஸ்ரீ தாயுமானவர் நெடுநாள் தங்கிச் சமாதியடைந்தருளிய முகவையும், விசதவாக்சிகாமணியாய் வைஷ்ணவாசாரியராய்த் தெய்வமும் அழைத்துப்பேசுந் தூயஞானமும் உடைய மணவாளமாமுனிவர் வளர்ந்து சிறந்த சிக்கற் கடாரமும் தன்பாற்கொண்டுவிளங்குவதனாற் பலரும் அறியத்தக்கது.

இவ்விரண்டு ஞானாசாரியர்களும் பாடியருளிய தமிழ்ப்பாடல்களின் பெருமை கற்றாரறிந்ததே. மணவாளமாமுனிவரைத் தெய்வம் அழைத்துப்பேசியருளிய செய்தி,

''நாமார் பெரியதிரு மண்டபமார் நம்பெருமான்
தாமாக வென்னைத் தனித்தழைத்து—நீமாறன்
செந்தமிழ் வேதத்தின் செழும்பொருளை
நாளுமிங்கே
வந்துரையென் லேவுவதே வாய்ந்து''

என்று அவர் ஈடுபட் டோதியருளிய வெண்பாவா னறிந்தது. இவர் திருவாலியிற் றிருமங்கைமன்னனைச் சேவிக்கப் புக்கபோது பாடியருளிய பாடல் :—

''ஈதோ திருவர சீதோ மணங்கொல்லை
யீதோ திருவாலி யென்னுமூ-ரீதோதான்

வெட்டுங் கலியன் வேல் வெற்றிதிரு மாலெழுத்
தெட்டும் பறித்த விடம்'' என்பது.

அவர் சேவித்தபோது பாடியருளியது :—

''உறைகழித்த வேலையொத்த விழிமடந்தை
மார்தமே
லுறையவைத்த மனமொழித்தவ் வுலகளந்த
நம்பிமேற்
குறையைவைத்து மடலெடுத்த குறையலாளி
திருமணங்
கொல்லைதன்னில வழிபறித்த குற்றமற்ற
செங்கையான்
மறையுள்வைத்த மந்திரத்தை மாலுரைக்க
வவன்முனே
மடியொதுக்கி மனமொடுக்கி வாய்புதைத்தவ்
வொன்னலார்
கறைகுளித்த வேலணைத்து நின்றவிந்த
நிலைமையென்
கண்ணைவிட் டகன்றிடா துகலியனாணை
யாணையே.''

என்பது.

இவராசிரியரான திருவாய்மொழிப்பிள்ளையவன அவதாரஸ்தலம் குந்தி நகரமென்ப. இதுவே கொந்தகையென்று இப்போது வழங்குவதாம்.

இனிப் பழைய சங்கப்புலவர்க்குள்ளும் இச்சேதுநாட்டே பிறந்தார் பலருளரென்பது அவரவர் ஊரானுணரப்படுவது. பிசிராந்தையார் என்ற நல்லிசைப்புலவர் கோப்பெருஞ்சோழற்கு உயிர்த்துணைவரென்பதும், அவன் வடக்கிருந்ததனைத் தம்முள்ளத்துணர்ச்சியானே உணர்ந்து தாமாகவே அவன்பாற் சென்று தாமும் வடக்கிருந்து அவ்வரசனுடன் உயிர்துறந்தவரென்பதும், அப்புலவர் பாண்டிநாட்டுப் பிசிர் என்னும் ஊரினர் என்பதும்

பிறவும் புறநானூறு கற்றார் பலரும் அறிந்தனவே. அத்தகைப் பெரியார் பிறந்து சிறந்த பிசிர் என்னும் ஊர் இச்சேதுநாட்டு அலங்காரனல்லூர் (அலங்கானூர்)க்கு அடுத்துள்ள **பிசிர்க்குடி** என்பதாகும். **நல்லந்தையார்** என்பார் நற்றினை 211ஆம் பாட்டுப்பாடியவர். இவருடையவூர் **கோட்டியூர்**. இது சிவகங்கையைச் சார்ந்த பெரிய திவ்யஸ்தலமென்பது பலரும் அறிந்ததே இத்திருப்பதியைப் பாடியருளிய ஆழ்வார் திருமங்கைமன்னர், ''கோவையின் றமிழ் பாடுவார் தொழுந் தேவதேவன் திருக்கோட்டியூர்'' என்று சிறப்பித்தருளுதலான் இவ்வூர்க்கண் அகப்பொருட்டமிழ்பாடும் புலவ ரிருந்தனரென்று குறித்தருளினராவர். இவ்வூரே 'அல்வழக் கொன்று மில்லா வணிகோட்டியர்கோ னபிமான துங்கன்,' 'நளிர்ந்தசீல னயாசல னபிமான துங்கன' என்று பெரியார் சிறப்பித்த **செல்வநம்பிக்கும்**, அவர்வழியினராய் ஸ்ரீவைஷ்ணவபரமாசாரியராகிய ஸ்ரீராமானுஜமுனிவரால் பதினேழ்தரம் சென்று வழிபடப்பெற்ற **திருக்கோட்டியூர்நம்பிக்கும்** அவதாரஸ்தலம் என்பது பலரும் அறிவர். திருக்கோட்டியூர் நம்பிகள் தனியன் வருமாறு:—

''விசயன் வினையொழித்த மெய்ப்பொருளைப் பூதூர்
வசையின் முனிக்களித்த வள்ளல் — திசைகமழும்
தேமலர்ப்பூஞ் சோலைத் திருக்கோட்டி யூர்நம்பி
தாமரைப்பூந் தாளே சரண்''

**அள்ளூர்நன்முல்லையார்** குறுந்தொகை 32 ம் பாட்டும் நெடுந்தொகை 46-ஆம் பாட்டும் பாடியவர். இவ ரள்ளூர் இச்சேதுநாட்டுச் சிவகங்கையைச் சார்ந்துள்ளது. **வெள்ளைக்குடிநாகனார்** நற்றிணை 158-ஆம் பாட்டு பாடியவர். இவரூர் சேதுநாட்டுத் திருவேகன்பற்றுச்சேகரத்துள்ளது. **ஒக்கூர் மாசாத்தியார்** பாடியன குறுந்தொகையினும் நெடுந்தொகையினும் பலபாடல்க ளுள்ளன. இவருடைய ஒக்கூர் மேற்காட்டிய கோட்டியூர்ப்பக்கத்தேயுள்ளது. பதினெண்கீழ்க்கணக்கினு ளொன்றாகிய

கைங்கிலை பாடியவர் புல்லங்காட ரெனப்படுவர். புல்லங் காடு, புல்லாரணியம்; இது திருப்புல்லாணியேயாகும்.

இத்தகைப் பெருந் தமிழ்ச்சங்கப்புலவரெலலாம் பிறந்துசிறந்த இச்செந்தமிழ்ச் சேதுநாட்டிடையிழிகுலச் சிறுவரும் அறிவான்முதிர்ந்தவராவரென்பது பாண்டியனைக்காண்பான் இச்சேதுநாட்டுநெறியேபுக்க கம்பர், நாட்டரசன்கோட்டைக் காட்டில் எருமைமேய்ப்பார் இளையர் சிலரைக் கண்டு முடிக்கரைக்கு நெறி யாதென்று வினவியபோது அவர் அடிக்கரை பிடித்தேகின் முடிக்கரை யெய்தலாகுமென்று கூறக்கேட்டு அதன் பொருள் தெரியாது திகைத்துப் பின் றெளிந்து,

''கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாரி
யிருங்கதலித் தண்டுக்கு நாணு—மருங்காகக்
காட்டெருமை மேய்க்கின்ற காளையர்க்கே யாந் தோற்றோம்
நாட்டரசன் கோட்டை நகர்க்கு''

என்று பாடியதனான் அறியலாகும்.

இதனை, முத்துநாயகப்புலவர் தாமியற்றிய ''கண்ணுடையம்மைபள்ளு'' என்னும் நூலில்,

''வாசமான தென்பாண்டி நன்னாடு மதுரை நாட்டில் வளருமிந்நாடு
காசினிக் குட் கதிர்க்கின்ற நாடுமுன் கம்பர் வந்து துதிக்கின்ற நாடு
பூசுரர்க் கன்னதானஞ் செய்நாடு புலவர்டே லபிமானஞ் செய்நாடு
ராஜலக்ஷ்மி கண்ணுடையா ளருள்நல்கு நாட்டரசன் கோட்டை நாடே''

எனப் பாடியவாற்றா னறிந்து கொள்க.

இச்சிறப்பெல்லாந் தெரிந்தே இந் நாட்டரசன் கோட்டைக் கண்ணுடையம்மைகோயிற் கொடிக்கம்ப

மண்டபம் முதலிய திருப்பணிகள் சேதுபதிகளா லியற்றப் பட்டனவென் றெண்ணுகிறேன். அந்நூலிற் ''கனவிஜய ரகுநாத ஸேதுபதி செய்த கொடிக்கம்ப மண்டபம் புகழக் கூவாய்குயிலே'' என வருதலான் இஃ தறியப்படும். இச் சேதுநாட்டு நாட்டரசன்கோட்டைக்கண் இவ்வம்மை யருளால் அவித்தநெென் முளைப்பதை யின்றுங் காணலாம்; இதனை,

''கண்ணுடைய தாய்மகிமை காசினியோ ரிவ்வளவென்
றெண்ணுடைய தாய்மதிக்க வேலாது—
மண்ணுடைய
புன்முளைக்க வெத்தனைநாட் போகுமுட
னேயவித்த
நென்முளைத்தல் சான்று நிசம்''

என்னும் பாடலா னறிக.

இங்ஙனம், கல்வியிற்பெரிய கம்பராற்புகழப்பட்ட பெருஞ்சிறப்பேயல்லாமல், உலகெலாம் கவிராக்ஷஸன் எனவும், கவுடப்புலவனெனவும், கூத்தன்கவிச்சக்கரவர்த்தி எனவும் ஏத்துங் கல்விச்சிறப்புடைய ஒட்டக்கூத்தர் பிறந்தது மலரியென்பது காட்டுவேன். கம்பர்திருமகனார் அம்பிகாபதி யார்க்குத் திருமகனாராகிய தண்டியென்னுந் தமிழாசிரியர், தாம் பாடிய அலங்கார நூற்கண்,

''சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தை
யுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்று—ளொன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மிலரிவருங் கூத்தன்றன் வாக்கு''

என்னும் வெண்பாவாற் செவியளந்துகொண்டு சிந்தை யுள்ளே நின்று அளவிலின்பநிறைக்கும் வாக்கையுடைய கூத்தரை மலரியென்னும் ஊரின்கண் வந்தவரென்றார்

இந்நூலுரைகாரரும், மலரி ஓரூர் என்று உரைத்தார். இவ்வூர் இச்சேதுநாட்டு ராஜசிங்கமங்கலச்சேகரத்துள்ளது.* இதன்கண்ணே வாழ்ந்த செங்குந்தர்வதியினர் பலர் வேற்றூர் புக்கு வாழ்கின்றனர். இவர் முதலிகள் எனப்படுவர். தமிழ்நாவலர் சரிதையுடையாரும் கூத்தரைக் கூத்தமுதலியாரென்றே வழங்குதல் காண்க.

இத் தொன்னூலாசிரியரே அன்றிச் செந்தமிழ்த் தொன்னூல்கட் குரையிட்ட நல்லாசிரியரும் இச்சேது நாட்டுண்டு. இதன் விரிவை தமிழ்ச்சங்க வெளியீட்டில் காணலாம் (1928)

* இதிலுள்ள காளிகோயில் மிகப் பிரசித்திபெற்றது. ''காளியொட்டக் கூத்தன்'' என்ற வழக்கும் ஈண்டு நினைக்கத்தகும். சோணாட்டுப் பேரளத்துக் கடுத்தும் மலரி என்ற ஊர் ஒன்றுள்ளது தெரிகின்றது. (செந்தமிழ்த் தொகுதி 25. பக்கம் 345-348).

# 5. சேதுபதிகள்

இவர் தொன்றுதொட்டே தமக்கியல்பாயுள்ள வீரச் செயலாலும் வில்-வாள் முதலாய படைத்தொழில் வலி யாலுமே தம்முயிர் வாழ்தலிற் சிறந்த தமிழ்நாட்டு மறவர் குடியினராவர். "வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்" என்றார் அகநானூற்றினும். (35) இம்மறவரையே வில்லேருழவர், வாளுழவர், மழவர், வீரர் முதலிய பல பெயர்களாற் கூறுவர் முன்னோர். இவர் நிரைகவர்ந்து ஆறலைத் துக்குறைகொள்ளுங் கொடுந்தொழிலாற் றம்முயிரோம்பும் வெட்சி மறவர் எனவும், அவ்வெட்சி மறவரை முனையிற்சிதற வீழ்த்து அவராற் கவரப்பட்ட நிரைகளை மீட்டு ஆறலையர்மற்காத்துப் பிறருயிரோம்பு முகத்தாற் றம்முயிர்வாழுங் கரந்தைமறவர் எனவும் இரு திறத்தினராவர். இதனை "ஆபெயர்த்துத் தருதலும்" (பொ. புறத். 5.) என்னுந் தொல்காப்பியத்து நச்சினார்க் கினியருரையானும் "தனிமணி யிரட்டுந் தாளுடைக் கடிகை, நுழைநுதிநெடுவேற் குறும்படை மழவர், முனை யாத் தந்து முரம்பின் வீழ்த்த, வில்லேர் வாழ்க்கை விழுத் தொடை மறவர்" (35) என்னும் அகநானூற்றுரையானும் அறிந்துகொள்க.

வெட்சி மறவர்க்கு ஆறலைப்பார், கள்வர் முதலிய பெயர்களும் கரந்தை மறவர்க்கு வயவர், மீளியர் முதலிய பெயர்களும் நன்று பொருந்துவனவாகும். இவ்விருவகை மறவருள், சேதுபதிகள் தீதெலாங்கழுவுஞ் சேதுநீராடப் போதுவார்யாவரையும் ஆறலைகள்வர் முதலியோராற் சிறிதும் இடர்ப்படாமற் காத்து அவர்கட்கு வேண்டுவன உதவுதலே தமக்குறுதொழிலாகக்கொண்ட சிறப்பாற், றம்பெருவலியானே பிறருயிரோம்புங் கரந்தைமறவரே யாவர்.

இதுபற்றியன்றே இம்மறவர் வாழ்ந்த பழையவூரைக் **கரந்தை** எனவும், இவரைக் **கரந்தையர்** எனவும், இவர் தலைவனைக் **கரந்தையர்கோன்** எனவும் பிற்காலக் கவிகள் வழங்குவாராயினர் எனக்கொள்க. "மல்லார் கரந்தை ரகுநாதன் றேவை வரையில்" (ஒருதுறைக்கோவை-68) "கரந்தையர்கோன் ரகுநாதன்" (ஷை62-76) என்று வருதல் காண்க. இவ்வகை மறவரே இத்தமிழ்நாட்டு மூவேந்தருக்கும் சிறந்த பெரும்படையும் படைத்தலைவருமாய் விளங்கினோராவர்.

இவ்வீரரே இம்மூவேந்தரையுந் தமது அரிய பெரிய வெற்றித்தொழில்களால் மகிழ்வித்து, அவரான் முடியுங் கோலும் மாலையும் பிறவும் அளிக்கப்பெற்றுக் குறுநில மன்னராய், அப்பேரரசர்க்குப் போர்த்துணைவராய் விளங்கினோராவர். இவர் இம்மூன்று தமிழ்வேந்தர்க்கும் உரியராதல் பற்றி முற்காலத்தே '**சேரன்மறவர், பாண்டியன் மறவர், சோழன்மறவர்** என மூன்று பகுதியினராக வழங்கப் பட்டனர்.

நன்னன், ஏறை, அத்தி, கங்கன், கட்டி முதலாயோர் சேரன் மறவர் (அகநானூறு. 44) கோடைப் பொருநன் ஆகிய பண்ணி முதலாயோர் பாண்டியன் மறவர் (அகம். 13). பழையன் பண்ணன் முதலாயோர் சோழன் மறவர் (அகம். 44, 326. புறம். 183). இவரைச் சோழன் மறவன், பாண்டியன்மறவனென வேறு வேறு கூறுவதும் காண்க. இம்மறவராகிய படை வீரர் குறுநில மன்னரா யிருந்தனர் என்பது "தானே சேறலுந் தன்னொடு சிவணிய, சேறலும் வேந்தன் மேற்றே" (சொல். பொ. அகத். 28) என்னுஞ் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் "சொற்றச் சோழர் கொங்கர்ப் பணிஇயர், வெண்கோட் டியானைப் போர்க் கிழவோன், பழையன் வேல்வாய்த் தன்ன" எனவரும் நற்றிணையை எடுத்தோதி, இது குறுநிலமன்னர் போல்வார் சென்றமை தோன்றக் கூறியது;

எனச் சோழன் படைத்தலைவனான பழையனைக் (அகம். 44) குறுநிலமன்னனாகக் கூறியதனானே அறியலாவது.

இவ்வாறு மூவேந்தர்க்கும் பெருந்துணைவராய் அம் மூவர் படைவீரருங் குறுநிலமன்னருமாகிய மூவகை மறவருள், இச்சேதுபதிகள் சோழன்மறவராவர். இது பற்றியே இவரைச்செம்பிநாட்டுமறவர் என வழங்குவர். செம்பியன்-சோழன். பாண்டியன் நாடு பாண்டிநாடு என ஆயதுபோலச் செம்பியன்நாடு செம்பிநாடு என ஆயது. ஒருதுறைக் கோவையிலும் ரகுநாதசேதுபதியை செம்பி நாடன் (60, 82) செம்பியர்கோன் (203) செம்பி நாட்டிறை (208) செம்பியர் தோன்றல் (218) என வழங்குதல் காண்க.

இச்சேதுபதிகளை இரவிகுலத்தவரெனக் கூறுதலும் அச்சோழர் குலத்தையேபற்றிவந்ததாகும். இவர் சாசனங்களில் உள்ள விருதாவளிகளில் முதற்கட் 'சோழ மண்டல பிரதிஷ்டாடகன்' 'அகளங்கன்' எனவரும் விருது களும் இவர் சோழர்பாற்பெற்ற படைத்தலைமை குறிப்பன வாம். சோழன்மறவராகிய இவர் சோணாட்டைவிட்டுச் சேதுதீரத்திற் குடியேறியகாலம் இஃது என நன்குசேறப் படாவிடினும், திரிபுவனதேவன் எனப்பெயர் சிறந்த குலோத்துங்கசோழன்காலத்துக்குப் பின்னேதான் இவர் ஆங்குக்குடியேறியதாகுமென்பது சில ஏதுக்களான் அனு மானிக்கப்படுகின்றது.

குலோத்துங்கசோழன் கி.பி. 1064-ல்* பாண்டி நாடாண்ட வீரபாண்டியனென்பவனைப் போர் தொலைத்துப்பாண்டி நாட்டைத் தன்னடிப்படுத்துத் தன் தம்பியாகிய கங்கைகொண்டான் சோழர்க்குச் சுந்தர பாண்டியன் என்னும்பேர்தந்து அப்பாண்டிநாடாளும் அரசுரிமையைக்கொடுத்தனனாதலால், அக்காலத்தே அப்

* Dr. Caldwell's History of Tinnevelly. Page. 27

போர்க்குப் பெருந்துணையாச்சிறந்த சோழன்மறவர் பலர் இப்பாண்டிநாட்டிற்குடியேறினராவர். குலோத்துங்க சோழனுக்குப்பின்னே சோணாடு பலவேற்றரசராற் படையெடுக்கப்பட்டுப் பிறர்பிறர் ஆட்சிக்குள்ளாகி அரசுரிமை மாறுபட்டதனானே, இம்மறவர் தம்படைத்தலைமை இழந்து தந்நாட்டே வேற்றரசர்கள்கீழ் ஒடுங்குதலினும் வேற்றுநாட்டிற்குடியேறி வாழ்தல் சிறந்ததாமென்று கருதிச்சோணாடுவிட்டுக் கடலோரமாகப்போந்து சேது தீரத்துக்காடுகெடுத்து நாடாக்கித் தம்மரசுநிலையிட்டு ஆட்சிபுரிந்தனராவரெனக்கொள்ளினுமமையும். இவர் ஆட்சியுட்படுத்த நாட்டிற்கும் இவர்பயின்ற செம்பிநாட்டின் பெயரே பெயராக இட்டுவழங்கினர்போலும். இவர்களது பழைய சாசனங்களிற் பெரும்பாலும் "குலோத்துங்கசோழ நல்லூர்க்கீழ்பால் விரையாதகண்டனிலிருக்கும் வங்கிசாதிபர்" என்னும் ஒரு விசேடணம் காணப்படுதலால் இவர் சோணாடுவிட்டு ஈண்டுப்போந்துகண்ட தலைமை நகர் குலோத்துங்கசோழநல்லூர் என்பதாகுமென ஊகிக்கத்தக்கது.

இவ்வூர்ப்பெயரும் குலோத்துங்கசோழனுக்குப்பின்னரே இவர்குடியேற்றம் ஈண்டு உளதாயதுகுறிக்கும். விரையாதகண்டன் என்பதிலுள்ள கண்டன் என்பதும் குலோத்துங்கசோழன் பெயராதல் பலருமறிவர். "தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட செம்பொற் றுலைநிறை வெண்டுமுகின்ற தார்க்கண்ட னேறியகுன்று" (தமிழ் நாவலர்சரிதை) என்றார் ஒட்டக்கூத்தரும். கண்டன் பெயரானே கண்டனூர்முதலாகப் பலஊர்கள் இச்சேதுநாட்டு வழங்கப்படுதலுங் காண்க. இக்காலத்துச் சேதுபதிகள் தலைநகராகிய முகவைக்கு ஒருகாததூரத்து வையைக்கரையிலே கங்கைகொண்டான் என்னும் பெயரில் ஒரூருண்மையினையும் இச்சேதுநாட்டு வீரபாண்டி, விக்கிரமபாண்டி, வீரசோழன், சோழபுரம் என்னும் பெயர்களாற் சிலவூர்கள் வழங்கப்படுதலையும் ஈண்டைக்கு நோக்கிக்கொள்க. இவர் சாசனங்களில் அகளங்கன் என

இருத்தற்கேற்ப **அமிர்தகவிராயர்** அபயரகுநாதசேதுபதி (208) செம்பியன், அநபாயன் ரகுநாதன், (242) புனற் செம்பியாள், சென்னிக்குஞ் சென்னியெனும் ரகுநாதன் (219) எனக்கூறுதல்காண்க. இரவிகுலமென்பதுபற்றி மனு, சிபி முதலிய வேந்தர்பெயர்களை சோழர்கிட்டுவழங்கி யாங்கு, அச்சோழர்குறுப்பாய்ச்சிறந்த நலம்பற்றி இரவி குலத்தவராகக்கொண்டு, அக்குலத்துதித்த னிவீரனும் பிற் காலத்து இவர்காவலிற்பட்ட புண்ணியசேதுவைப்பண்ணி யோனுமாகிய சீராமமூர்த்திபெயரே இவர்க்குப்பெயராக வைத்து ரகுநாதசேதுபதியெனச்சிறப்பித்து வழங்கினர் போலும்.

குலம்பற்றி இராஜசூரியசேதுபதி எனப்பட்டாரும் இவ் வழியிலுண்டு. இவர் பெயரான் இந்நாட்டில் இன்றைக்கும் இராஜசூரியமடையென ஒரு சிற்றூர்வழங்கப்படுதலுங் காண்க. இவரைப்படைவீரராக்கொண்டு சிறந்த சோழ அரசர் பெயரும் இவர்பாற்காண்டலால், ஈண்டைச்சூரியன் என்பதும் சோழன்பெயராமெனினும் அமையும். இதனைச் ''சூரியன் புனனாடன் சோழன் பெயரே'' என்னும் பிங்கல நிகண்டாலுமறிக. ''கண்டநாடுகொண்டு கொண்டநாடு கொடாதான்'' என்னும் பட்டம்பெற்றுக் குலோத்துங்க சேதுபதியென்னும் பெயரான் விளங்கினார் ஒருவருளராத லானே இஃதறியப்படும்.

சோழன்மறவனாகிய பண்ணன் பெயர்வழக்கும். காவிரிவடகரையிலுள்ள அவன் ஊராகிய சிறுகுடியின் பெயர்வழக்கும் இவர் குடியேறிய இந்நாட்டில் இன்றைக் கும் காணலாகும். விரையாதகண்டனென்பது சேதுநாட்டு இராஜசிங்கமங்கல சேகரத்துள்ளது. அச்சேகரத்துப் பண்ணக்கோட்டையெனவும், சிறுகுடியெனவும் வழங்கும் ஊர்கள் இரண்டு உள்ளன.

சோழகுலத்தோரைத் தொண்டியோர் என வழங்குவர் என்பதும், அத்தொண்டி என்னும்பதி கூடற்குக் குண திசைக்கண்ணுள்ளதென்பதும், ''வங்க வீட்டத்துத் தொண்

டியோர்" என்னும் ஊர் காண்காதைக்கு (சிலப். பக். 336-338) அடியார்க்குநல்லார் கூறிய உரையானே அறியலாம். இச்சேதுபதிகட்குத் "தொண்டியந்துறை காவலோன்" என ஒரு பட்டம் பழைய சாசனங்களிலெல்லாம் காணப் படுகின்றது. இத்தொண்டிப்பதி இக்காலத்தும் இச்சேது நாட்டுச் சிறந்த துறைமுகப்பட்டினமாயுள்ளது.

சோழற்குச் சிறந்த துறைமுகமாயிருந்தது இவர் காப்பிற்பட்ட சிறப்பான், இவர் தொண்டியந்துறை காவலர் எனப்பெயர்பெற்றனராவர். எட்டுத்தொகை நூல்கள் சிலவற்றில் சேரற்குரியதாகக் கூறப்பட்ட குட்டுவன் தொண்டியென்பது குடகடற்கரைக்கண்ணதாகும். அது வேறு, இது வேறெனவுணர்க. "நளியிரு முந்நீர் நாவா யோட்டி வளிதொழி லாண்ட வுரவோன் மருக" என்னும் புறப்பாட்டாற் சோழர் மரக்கலப்படையையுடையராயினாரென்பது நன்கறியப்படும். இம்மறவர் அவர் படைத்தலைவராதல்பற்றி ஆற்றினும் கடலினும் தம் படையைச் செலுத்துவோர் என்னும் கருத்தால, 'ஆற்றுப் பாய்ச்சி' 'கடற்பாய்ச்சி' எனப் பட்டம்பெற்றனராவார்.

இவர் இம்மரக்கலப் படைவலியாற் சென்று "ஈழமும், யாழ்ப்பாணராயன் பட்டணமும் கஜவேட்டைகொண் டருளினா" ரென்று விருதாவளியும் பெறுவர். இவரது மரக்கலப்படைப் பயிற்சி, இவர்க்குச் *சோழரினின்று எய்தியதாகும். இம்மறவருள் மரக்காயகிளை என்னும் பெயரால் ஓர் கிளை வழங்கப்படுதலும் இக்கருத்தையே வலியுறுத்தும். அது மரக்கலப்படையைக்கொண்டு செலுத்தும் பகுதியினர் எனப்பொருள் தருதலும் கண்டு கொள்க.

---

* மகா-ள-ள-ஸ்ரீ: வி. கனகசபைப்பிள்ளையவர்களும், தாம் எழுதிய "Tamils Eighteen hundred years ago" என்னும் வித்தியாசத்தில், சோழரையே திரையரென்னும் பெயர்க்குரியராகக் கொண்டு, அவரையே கடலிற் சேறலின் வலியுடையராகக் கூறுவது காண்க.

வடநாட்டும் நிஷாதர் எனப்பெயரியார் முற்காலத்தே மரக்கலம் இயக்குதலில் தேர்ந்துளாரென்பது, வால்மீகி ராமாயணத்துங் கண்டது. வேடர் தலைவனாகிய குகனே சீராமமூர்த்திக்குத் தோணி இயக்கினான் என்பதனானே ஈதறியப்படும். இவர் கடலோரத்துள்ள இச்சேதுநாட்டிற் குடியேறியதும் இக்கடற் பயிற்சிபற்றியேயாகுமென்பது ஊகித்தறியத்தக்கது.

இம்மறவருள் தொண்டைமான்கிளை யெனச் சிலரை வழங்குவதும் சோழற்கும் இவர்க்குமுள்ள இயைபையே குறிப்பதாகும். நாகப்பட்டினத்திருந்த சோழன் ஒருவன் நாகலோகத்தே சென்று ஓர் நாககன்னியைப் புணர்ந்த காலத்து, அவள் யான்பெற்ற புதல்வனை என்செய்வே னென்ற பொழுது, தொண்டைக் கொடியை அடையாள மாகக் கட்டிக் கடலிலே வரவிட அவன் வந்து கரையேறின் அவர்க்கு யான் அரசுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பேனென்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிட, அவனைத் திரைகொண்டு தந்தமை யால் அவனும் அவன்வழியினரும் திரையன், திரையர் எனப்பெயர்பெற்றனரெனவும், அவர் வழியினரெல்லாம் தொண்டையே சூடிப்போந்த காரணத்தால் தொண்டையர் தொண்டைமான்கள் என *வழங்கப்பட்டனரெனவும் பெரும் பாணாற்றுப் படையானும் அதற்கு நச்சினார்க்கினியர் கூறியவுரையானும் அறியப்படுதலால், தொண்டைமான் களும் சோழர்வழித்தோன்றினோராவரென்பதும், சோழ ராலே நாடாட்சி அளிக்கப்பட்டனரென்பதும் தெளிய லாகும்.

கலிங்கத்தைவென்ற கருணாகரன் என்பவன் சோழன் படைத்தலைவன் என்பதும் அவன் தொண்டைமான் எனச் சிறப்புப் பெயர்பெற்று விளங்கினன் என்பதும் கலிங்கத்துப்

---

* இக்கதை, எவ்வாறாயினும், சோழற்கும் நாக குலத்தாள் ஒருத்திக்கும் பிறந்தாரே தொண்டையோர், தொண்டைமான்கள் என்பதுமட்டில் நன்குணர்த்தும்.

பரணி யென்னும் நூலானே நன்கறியலாவன. இவற்றாற் சோழர் வழித்தோன்றி நாடாட்சி தனியேயளிக்கப் பெற்றாரும், அச்சோழர்க்குப் படைத்தலைவராய்ச் சிறந் தாரும், தொண்டைமானெனச் சிறப்புப்பெயர் பெறுதலின் இம்மறவரும், சோழர்படைத்தலைவராய்ச் சிறந்த ஒற்றுமையால் தொண்டைமான் களெனச் சிறப்புப்பெயர் எய்தினராவர். இப்பகுதியினரைத் தொண்டைமான் கிளையெனலும் நன்குபொருந்துவதேயாம். இவர்கள் சாசனங்களில் ''சுவாமித்துரோகிகள் மிண்ட' னென்றி ருப்பது இவர்கள் படைவீரராய் இருந்தனர் என்பதையே நன்கு புலப்படுத்தும்.

இனி இம்மறவர் தேவரெனச் சிறப்புப்பெயர் புனை தலும் அச்சோழர்பாற் பயின்றமையே குறிக்கின்றது. குலோத்துங்க சோழதேவன், திரிபுவனதேவன், ராஜராஜ சோழதேவன், ராஜேந்திரசோழதேவன் எனச் சோழர்சாச னங்களில் வழங்குவது காண்க. திரிபுவனதேவன் என்பது வெண்பாமாலை உரையினும் கண்டது. தேவருருவாய் நின்று உலகங்காத்தலின் அரசனைத் தேவன் என்பர் என உணர்க. இவையெல்லாம் இம்மறவர்க்கும் சோழர்க்கும் உள்ள பண்டை இயைபினை வலியுறுத்துவனவாம்.

இனி, இம்மறவர் புனைகின்ற முல்லைமாலையுஞ் சோழர்க்குரியதாகும். ''மூவர்விழுப்புகழ் முல்லைத்தார்ச் செம்பியன்'' (பாடான் படலம்-34) என ஐயனாரிதனார் கூறியவாற்றானே, சோழர்க்கு முல்லைமாலை யுரியதாதல் கண்டுகொள்க. அரசர்க்குப் போர்ப்பூ எனவும், தார்ப்பூ எனவும் இரண்டுண்டு என்பது ''படையுங் கொடியும்'' (81) என்னும் மரபியற் சூத்திரவுரையானுணர்க.

போர்ப்பூவாவது போரில் இன்னவேந்தன் வென்றான் என்பதற்கு ஓர் அறிகுறி வேண்டிச்சூடும்பூ; தார்ப்பூவாவது ஓர் விசேடமாக இடுவது என்ப. சோழற்கு ஆர் என்பது போர்ப்பூவாகவும், முல்லை என்பது தார்ப்பூவாகவுங்

கொள்க. இக்கருத்தானன்றே ''ஆரங் கண்ணிச் சோழன்'' எனவும், ''முல்லைத்தார்ச் செம்பியன்'' எனவும் சான்றோர் வேறுவேறு கூறினாரெனவுணர்க. திருமுருகாற்றுப்படை யுரையினும் நச்சினார்க்கினியர் முருகக் கடவுட்குக் கடம்பினைத் தார்ப்பூவாகவும், காந்தளை அடையாளப்பூவாகவும் கூறினார்.

ஆண்டுங் கண்ணியையும் தாரினையும் வேறுபடுத்து ''மாராஅத்துருள் பூந்தண்டார்'' எனவும், ''காந்தட் பெருந்தண் கண்ணி'' எனவும் வழங்குதல் ஆராய்ந்துகொள்க. அன்றியும் இம்முல்லைத்தார் அரசமுல்லை முதலாக, மறமுல்லையிறுதியாகக் கூறப்பட்ட துறைவகைகளாற் பெரும்பாலும் அரசியல்பின் மிகுதியும் வீரரதியல்பின் மிகுதியுமே கூறுதலால், அவற்றிற்கு அறிகுறியாய் வீரமாலையாய்ச் சிறத்தலுங் கண்டு கொள்க.

இக்கருத்தானே முல்லைத்தார்ச் செம்பியன் என்பதற்கு வெற்றிமாலையையுடைய சோழன் என்றார் சாமுண்டி தேவநாயகரும் ''முல்லைத்தார் வேந்தன் றொடுகழன் மைந்தர் தொழில்'' என்றார் வஞ்சிப்படலத்தும் (வெண்பா மாலை). இம்மறவர் தஞ்சோழனது தார்ப்பூவாதலாலும், தமக்கு வீரமாலையாய்ச் சிறத்தலாலும், முல்லை மாலையைப் புனைவாராயினர் எனக்கோடலே இயைபுடைத்தாகும். ஒருதுறைக்கோவையில் அமிர்தகவிராயரும் ''முல்லைவீரத் தொடை புனைவோன் ரகுநாதன்'' (6) எனக்கூறுதலுங் காண்க. இத்துணையுங் கூறியவாற்றால் இச்சேதுபதிகள் சோழன்மறவர்வழித் தோன்றியோரேயாவர் என்பது நன்குணரலாகும்.

இனி, இச்செம்பிநாட்டு மறவருக்குள் ஓர் கிளையினர் ''பிச்சகிளை'' என்னும் பெயரான் வழங்கப்படுகின்றனர். இக்கிளையினராகிய மறவர் தம்முடைய வீரத்தால் முடியுடைப்பெருவேந்தர்பாற் கொற்றக்குடை முதலிய விருது பெற்றுச் சிறந்தார்வழித் தோன்றினராவர். பிச்சம்-குடை.

இச்சேதுபதிகளுக்குச் சிறந்த கொற்றக்குடை செங்குடை யாகும். இவரது பெருவீரத்துக்கு அறிகுறியாய நிறம் செம்மையேயாதலால், இவர் தங்குடையைச் செந்நிறத்த தாகக் கொண்டனராவர்.

செந்நிறம் எய்தற்பொருட்டுச் செவ்விய காவிக்கற் றோய்க்கப்பெறுதலால், இது செங்காவிக்குடை எனப் படும், ''நங்காமதேனு வெள்வந்த கார்செம்பி நாடனுயர், செங்காவி யங்குடை யான் ரகுநாதன்' என்றார் ஒருதுறைக் கோவையினும். குடைவகையிற் செங்குடை என ஒன்றுண்டு என்பதனைச் செங்குடை மீயையுஞ் சிந்தூரமு மாகும்' எனவரும் பிங்கல நிகண்டானுமறிக. தந்நிலை யிற்றாழாமையும் தாழவரினுயிர் வாழாமையுமாகிய மானத் தையே தலையாய்ச் சிறப்பித்தோம்புதற்கு அறிகுறியாகக், கவரிமானின் மயிரை இவரது செங்குடைக் காம்பின்றலை யிற் சூட்டுவது இவர்க்குத் தொன்று தொட்டுவந்த வழக்கம்.

''மயிர்நீப்பின் வாழாக் கவரிமாவன்னா, ருயிர்நீப்பர் மானம் வரின்'' என்றார் திருவள்ளுவனாரும். இவரது வெற்றிக்கொடியும் செங்காவிக்கொடி யென்ப. ஒரு துறைக்கோவையிற் கருடக்கொடியும், அநுமக்கொடியுமே இவர்க்குளவாகக் கூறப்பட்டன. 'ககராசவீரவெங் கேதனத்தான்' 'கருடவெங்கேதனத் தளவாய்' 'தூதே நடந்த கவிகுல மாமணி தோன்றுகொடி மீதே யுயர்ந்த ரகு நாயன்' என வருதல் காண்க.

திருவுடை மன்ன ரெல்லாம் திருமால் கூறாவர் என்பது பற்றியும், ரகுநாதன் எனப்பாடம் புனைதல்பற்றி யும் இவ்விரு கொடிகளையும் தமக்குரியனவாக கொண்டன ராவர். இவர் சூரியகுலத்தவதரித்த தோலாத தனிவீரத் திருப்பெயராகிய விஜயரகுநாதன் என்பதே தமக்குரிய சிறப்புப் பெயராகச் சூடியதும் வீரவென்றி பற்றியதே யாகும்.

விஜயாலயன் பேரனாகிய வீரநாராயண சோழன் என்பவன் வீரவென்றிபற்றிச் சங்கிராமராகவன் எனப் பட்டம் புனைந்தமையும் * பழைய சோழர்சாசனங்களிற் கண்டுகொள்க. குலோத்துங்க சேதுபதியின் புத்திரராகிய சமரகோலாகல சேதுபதி என்பவர், சோழரிடம் மன்னார் குடாக்கடலில் முத்துக்குளிக்கு முரிமையைத் தமது வீரத் துக்குப் பரிசாகப் பெற்றனராதலால் அன்றுமுதல் இவர் தமது கடல்வளமுடைமையை மேம்படுத்தித் தம் சிறப்புப் பெயர்கட்குமுன் 'முத்து' என்னும் பதத்தினையும் இணைத்து வழங்கினராவர்.

முத்துவிஜயரகுநாதன் என்பது இவர்க்குச் சிறந்த பெயராம். இவரது சாசனங்களிற் 'சொரிமுத்து வன்னியன்' என ஓர் விருதாவளி காணப்படுவதும் இவரது கடற்படுமுத்தின் பெருக்கத்தினையே குறிப்பதாகும். ''வணங்காத தெவ்வைப் பெருமால் சொரிமுத்து வன்னியன் பொன், ணணங்காருமார்பன் ரகுநாதன்'' என ஒருதுறைக் கோவையினும் வருதல் காண்க. வன்னியர் என்பதும் அரசர்படைத்தலைவர்க் கொருபெயர்,

''கருமுகிற் கணிநிறத் தழற்கட் பிறையெயிற்
றரிதரு குட்டி யாயபன் னிரண்டினைச்
செங்கோன் முளையிட் டருணீர் தேக்கிக்
கொலைக்கள வென்னும் படர்களை கட்டுத்
திக்குப்பட ராணை வேலி கோலித்
தருமப் பெரும்பயி ருலகுபெற விளைக்கு
நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்''

என வரும் கல்லாடத்தானும் அறிந்துகொள்க. இனி இவர் சிறப்பித்துத் தாங்கும் படைக்கலம் வளரி எனப் பெயர் பெறுவது. இதனை ஆளுதலிலிவர் மிகக்கை தேர்ந்த

---

* Lists of Antiquities, Madras, Sewell, Vol. II, Page 257.

வராவர். கருதிய குறியினைத் தப்பாமலெறிதலும் எறிந்த வளரியை மீண்டு தங்கைக்கு எய்துவித்தலும் இவர்க்கே சிறந்த பெருஞ்செயல்களாயிருந்தன என்ப.

இத்தகை அரிய வளரிப்பயிற்சி, ஆஸ்டிரேலியா கண்டத்துத் தொன்றுதொட்டுள்ள காடுறைவாழ்க்கையரிடம் யாரும் வியக்கத்தக்க நிலையில் இக்காலத்தும் சிறந்துள்ள தென்பர் மேற்றிசையார். அச்சேதுபதிகளது வடிவமைத்த பண்டைக் கல்லுவங்களிலெல்லாம். இடையிற் சுற்றிய வீரக்கச்சையில், இவ்வளரியே செருகப்பட்டுள்ளது இன்றைக்கும் காணலாம். இதுவே இவர்க்குரிய பேரடையாளமாவது: இவரது வீரக்கழல் சேமத்தலை எனப் பெயர் சிறக்கும். இது தம்மால் வெல்லப்பட்ட பகைவனது தலையையே தமக்குச் சிறந்த தாளணியாக்கிக் கொண்டு விளங்கியமை குறிப்பதாகும்.

இச்சேதுபதிகள் முற்காலத்து எட்டன் எனப் பெயரிய ஒருவனோடு பொருது, அவனைப் போர் தொலைத்து, அவன் தலையையே தம்வீரக்கழலிலணிந்து கொண்டன ரெனக் கூறுவர். இதனை, மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக் கவிராயர் பாடிய தளசிங்கமாலையில்,

> சிலையா மெழுத்துஞ் சகாயமுங் கீர்த்தியுஞ் செந்தமிழு
> நிலையாகு மன்னச்சொல் வார்த்தையு மென்றைக்கு
> நிற்குங் கண்டாய்
> கலையாருங் கானில்வன் கல்லைப்பெண் ணாக்கிய
> காலிலெட்டன்
> றலையார் விசய ரகுநாத சேது ,தளசிங்கமே.

என வருதலானே அறிந்துகொள்க. இராமேச்சரத்துத் திருக்கோயிற் பிரகாரமெல்லாம் நிறைந்துளள இச்சேது பதிகள் கல்லுருவங்களில் இவ்வளரியுஞ் சேமத்தலையுமே சிறந்த அடையாளங்களாவன காணலாகும்.

இனிச் சோழரால் நாடாட்சி பிரித்தளிக்கப்பட்ட திரையரெல்லாம் தொண்டைமான்கள் எனப் பெயர்கொண்டாற் போல, இச்சேதுபதிகளால் நாடாட்சி பிரித்தளிக்கப்பட்டவராகிய புதுக்கோட்டையுடையாரும் தொண்டமான் எனப் பெயர் சிறந்தாராவர். அவர்களும் இச்சேதுபதிகளுடைய விஜயரகுநாதன் என்னும் பட்டத்தினை புனைந்து விளங்குதலுங் கண்டுகொள்க. பண்டைக்காலத்துச் சேதுநாடு என்பது இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை இம்மூன்று ஸமஸ்தானங்களும் ஒருங்குசேர்ந்ததாகும்.

கிழவன் சேதுபதிகாத்துப் புதுக்கோட்டையும் (கி.பி. 1673—1708), பவானி சங்க சேதுபதிகாலத்துச் சிவகங்கையும் (கி.பி. 1724—1728), தனியரசு பெற்றனவாம். கி.பி. 1673-ம் வருடம்வரை இம்மூவகை நாட்டிற்குஞ் சேதுபதிகளே தனித்தலைவராய்ச் செங்கோல் செலுத்தினராவர். இவர் வடநாட்டினின்று ஆரியர் பலரைக் கொணர்ந்து புண்ணிய சேதுவிற் றிருக்கோயில்கொண்டருளிய இராமேசர் கைங்கரியத்துப் புகுவித்துத் தாமும் அக்கடவுட்கு வருவழித் தொண்டராய்ச் சிறந்தனர். 'ராமநாத சுவாமி ஸகாயம்' என்பதே பண்டைச் சேதுபதிகள் கையொப்பமாகும்.

'சூலங்கைக் கொண்ட விராமேசர் தாண்முடி சூடியெழு, ஞாலங்கைக் கொண்ட ரகுநாயகன்' எனவும் 'சூரியர் போற்றுமிராமேசர் தாளிணைக் கன்புவைத்த, சூரியன் வீரையர் கோன்ரகு நாதன்' எனவும் அமிர்த கவிராயர் கூறுதல் காண்க. இவர் சாஸனங்களில் 'ஆரியர் மானங்காத்தான்' என ஓர் விருது வழங்குவதும் இவர் ஆரியரைப் போற்றிவந்தமை குறிக்கும்.

இச் சேதுபதிகள் இராமநாதபுரமாகிய முகவையைத் தமக்குரிய தலைநகராகக் கொள்ளுதற்கு முன்னே சேதுநாட்டிற் பல ஊர்களைத் தலைநகராக்கி வதிதனரென்பது, பழைய சாஸனங்களானும் பாடல்களானும் அறியப்படுகின்றது; அவ்வூர்களாவன:-

1. குலோத்துங்க சோழநல்லூர் (சாஸனம்)
2. விரையாதகண்டன் .... (ஷை)
3. [illegible] ... ([illegible])
4. [illegible] (ஷை)
5. வீரை [illegible] ... (ஷை)
6. தேவை ... (ஷை)
7. [illegible] .... ... (ஷை)
8. மழவை .... ... (ஷை)
9. புகலூர் .... .... (ஷை)

என இவையாம்.

இவ்வூர்களில் அரசாண்ட பழைய சேதுபதிகள் பெயர்கள் முறையே தொடராக இப்போது கிடைக்கப்பெறாவிடினும் சேதுபதிகள் வரலாறு குறித்துள்ள பழைய கையெழுத்துப் பிரதியொன்றாற் சிலபெயர்கள் அறியலாவன. அப்பெயர்கள் வருமாறு:-

1. ஆதிரகுநாதசேதுபதி,
2. ஜயதுங்கரகுநாதசேதுபதி
3. அதிவீரரகுநாத சேதுபதி,
4. வரகுணரகுநாத சேதுபதி,
5. குலோத்துங்க சேதுபதி
6. சமரகோலாகல சேதுபதி,
7. மார்த்தாண்டபைரவ சேதுபதி,
8. சுந்தரபாண்டிய சேதுபதி,
9. காங்கேயரகுநாத சேதுபதி
10. விஜயமுத்துராமலிங்க சேதுபதி.

இவர்கள் சேதுநாட்டுள்ள சில பழைய கோயில்களைக் கட்டுவித்தனர் எனவும், அவற்றிற்குச் சில கிராமங்கள் அளித்தனர் எனவும், கூறுவதேயல்லது, வேறு இவர் காலம், ஊர்,செயல் முதலியன ஒன்றும் விளங்குமாறு, அவ்வரலாறு கூறிற்றில்லை. இவர்க்குப் பின் கி.பி. 1604-ஆம் வருடமுதல் இந்நாடாண்ட சேதுபதிகள் வரலாறே, அஃது ஒருவாறு தொகுத்துரைப்பதாகும். அதுவே Mr. Nelson's

Madura Country, மகா-ா-ா-ஸ்ரீ டி. ராஜாராமராவ அவர்கள் Ramnad Manual, Mr. Sewell துரையவர்களுடைய List of Autiquities Madras, Vol. II இவற்றினும் பெரும் பாலுங் காணப்படுவது அச்சேதுபதிகளாவார்.

| | | |
|---|---|---|
| 1. | சடைக்கத்தேவராகிய உடையான் சேதுபதி | (கி.பி. 1604—1621 |
| 2. | கூத்தன் சேதுபதி ... ... ,, | 1621—1635 |
| 3. | தளவாய் சேதுபதி ... ... ,, | 1635—1645 |
| 4. | ரகுநாத சேதுபதியாகிய திருமலைசேதுமதி ,, | 1645—1670 |
| 5- | ராஜசூரிய சேதுபதி ... .... ,, | 1670—1673 |
| 5. | கிழவன் சேதுபதி ... ... ,, | 1673—1708 |
| 7. | திருவுடையரதேவர் ... .... ,, | 1709—1723 |
| 8. | தண்டத்தேவர் ... .... ,, | 1724— |
| 9. | பவானிசங்கரத்தேவர்.... ... ,, | 1724—1728 |
| 10. | குமாரமுத்து விஜயரகுநாதசேதுபதி ,, | 1728—1734 |
| 11. | முத்துக்குமார சேதுபதி ... ,, | 1734—1747 |
| 12. | இராக்கத்தேவர் ... ... ,, | 1747—1748 |
| 13. | செல்லத்தேவர் ... ... ,, | 1748—1760 |
| 14. | முத்துராமலிங்க சேதுபதி ... ... ,, | 1760—1794 |
| 15. | ராணி மங்களேசுவரி நாச்சியார் ,, | 1803—1812 |
| 16. | அண்ணாச்சாமி சேதுபதி .... ,, | 1812-1815 |
| 17. | ராணிமுத்துவீராயி நாச்சியார் ,, | 1815-1829 |
| 18. | ராமசுவாமி சேதுபதி ... ... ,, | 1829— |
| 19. | ராணிமங்களேசுவரி நாச்சியார் ,, | 1829-1838 |
| 20. | ராணி துரைராஜ நாச்சியார் ,, | 1838-1845 |
| 21. | ராணிபர்வதவர்த்தினி நாச்சியார் ... .... ,, | 1845-1868 |
| 22. | துத்துராமலிங்க சேதுபதி ... | 1868-1873 |
| 23. | பாஸ்கரசேதுபதி .... ,, | 1873-1903 |

என இவர்கள். இச்சேது வேந்தர்களெல்லாம், தெய்வ வழிபாட்டானும், தருமசிந்தனையானும், செந்தமிழபி மானத்தானும், பெருங் கொடையானும் அளவிலாத புகழையே விளைத்தவர்கள்.

இச்சேது நாட்டுத் தேவஸ்தானங்களும் அன்ன சத்திரங்களும் வருடமொன்றுக்கு நான்கிலக்க ரூபாவுக்கு மேற்பட்ட பொருள்வருவாயுடையனவாகும். புண்ணிய சேதுவைக் கண்ணிய பெருவழிகளெல்லாம் இவர்களது அன்னசத்திரங்களே நிறைந்து விளங்குவன காணலாம். நீர்வளமிகுந்த நல்லூர்கள் பல, அந்தணர்க்குத் தருமாசனம் என்னும் பெயரான் முற்றூட்டாக இவர்களாலளிக்கப் பட்டுள்ளன; இவ்வாறே இவ்வேந்தர்கள் தேவாலயங் கட்கும் அன்னசத்திரங்கட்கும் மடாலயங்கட்கும் செந் தமிழ்ப் புலவர்கட்கும் முற்றூட்டாக அளித்த கிராமங்களை எண்ணின் மிகப் பலவாம்.

வருடமொன்றுக்கு முப்பதினாயிர ரூபாவுக்கு மேற்பட்ட பொருள் வருவாய் இச்சமஸ்தானபதிகள் பரோபகாரத்துக் கென்று வரைந்துவைத்த பெருந்தனமாகும். இது ''தருமமகமை'' ''சாரிமகமை'' என்னும் பெயர்களான் இன்றைக்கும் விளங்குகின்றது. இராமேச்சரம் இவ் வேந்தர்களாற் பெரிதுஞ் சிறப்பித்துப் போற்றப்பட்ட முக்கிய தேவாலயமாகும். இவர்கள் ஆண்டுப்புரிந்த தருமங் களே மிகவும் விலையுயர்ந்தன. அத்திருக்கோயிற்கண் இவ்வரசரியற்றிய அரிய பெரிய மண்டபங்களின் விசித்திர சிற்பங்கள் மேற்றிசையோராலின்றைக்கும் பாராட்டப் பெறுவன. சிதம்பரம், மதுரை, திருப்பரங்குன்றம், திருப் பெருந்துறை, திருச்செந்தூர், பழனி முதலிய கோயில் களெல்லாம் இவர்களது கட்டளைகள் உடையன.

சேதுதீரத்துள்ள இராமேச்சரம், திருப்புல்லாணி முதலிய சிவாலய விஷ்ணு ஆலயங்களின் பெரிய திருப் பணிகளெல்லாம் இவர்களாலே நன்கியற்றப்பட்டன வாகும். இதனைத்,

'தேனார் மொழிமடமாதர்சந் தானம்பொன் சேருங்கல்வி
மேனாட் டவமுனைப் போற்செய் தவர்க்குண்டு வீணர்க்குண்டோ
வானா டரும்பணி ராமே சருக்குமுன் மண்டபஞ்செய்
தானாம் விசய ரகுநாத சேது தளசிங்கமே'.

'எனதன்ம மாகிலுந் தரன்கற்ப கால மிருக்கவுன் போன்
மனதி னினைந்த படிசெய்ய யார்க்கும் வராது கண்டாய்
கனதன மாறிருப் புல்லாணிக் கோபுரங் கட்டுவித்த
தனத விசய ரகுநாத சேது தளசிங்கமே'.

என்னுந் தளசிங்கமாலைப்பாடல்களான் அறிந்து கொள்க.

இவ்வேந்தர்களது செந்தமிழ்வண்மை ஒருதுறைக் கோவையிற் பலவாறாய்ப் புகழ்ந்து பாராட்டப்பட்டுள்ளது. சேரசோழபாண்டியர்க்குப் பின் தனித்தமிழ் அரசர்களாய் இச்சேதுபதிகளே செந்தமிழ்ப் பரிபாலனஞ்சீர்பெறவியற்றினரென்ப. ஒருதுறைக்கோவை பாடிய பொன்னாங்கால் அமிர்த கவிராயருக்குப் பதினாயிரம் பொன் பரிசில் அளித்தனரெனக்கூறுவர். இதனைக் ''கோவைத் துறைக்குப் பதினா யிரம்பொன் கொடுத்திசைகொள், தேவைத் துறைக்குத் துரைரகு நாதன்'' என அக்கவிராயர் பாடியதனானே அறியத்தக்கது.

இவ்வொருதுறைக்கோவை கொண்டவர், திருமலை ரகுநாதசேதுபதி என்பவர். இவர் தளவாய் சேதுபதியின் புதல்வர்; தமிழிற் செய்யுள் செய்தலிலும் வல்லவர் என்ப. அமிர்தகவிராயர் இவரைத் 'தளவாய் குமாரன்' எனவும் 'காக்குங் கருணையுங் கல்வியும் வாழ்வுங் கவிமதுர, வாக்குந் தழைத்த ரகுநாதன்' எனவும் கூறுமாற்றானிவை யறியப்படும். இவ்வாறே இச்சேதுபதிகள் நல்லுதவி பெற்றுச் சிறந்த செந்தமிழ்ப்புலவர் பலராவர்.

யானறிந்தவளவில் அப்புலவர்கள் பெயர்களும் அவர்கள் பாடியனவும் ஈண்டுக் கூறுகின்றேன்.

| புலவர் | பாடியது |
|---|---|
| அகோரதேவர் | திருக்கானப்பேர்ப்புராணம். |
| திருமறைக்காடு-திருச்சிற்றம்பலதேசிகர் | திருவாடானைப் புராணம். |
| காடடர்ந்தகுடி-தலைமலைகண்ட தேவர் | மருதூரந்தாதி. |

| | |
|---|---|
| மிதிலைப்பட்டி-சிற்றம்பலக் கவிராயர் | தளசிங்கமாலை. |
| ஷடியூர்-மங்கைபாகக்கவிராயர் | கொடுங்குன்றப்புராணம். |
| பொன்னாங்கால்-அமிர்த கவிராயர் | ஒருதுறைக்கோவை. |
| குருகூர்-இராமாநுஜகவிராயர் | இரகுநாதக்கோவை. |
| சக்கரைப் புலவர் | திருச்செந்தூர்க்கோவை. |
| சவாதுப் புலவர் | இராசராசேசுவரிப் பஞ்சரத்தினம். |
| சோமசுந்தர கவிராயர் | திருக்கழுக்குன்றக்கோவை. |
| மதுரகவி (பெருங்கரை) | பல இசைப்பதங்கள். |
| சதாவதானம் பெரியசரவணக் கவிராயர் | பணவிடு தூது. |
| முத்துநாயகப் புலவர் | கண்ணுடையம்மன்பள்ளு. |
| சதாவதானம் சிறிய சரவணக் கவிராயர் | குன்றைச்சிலேடைமாலை. |
| சதாவதானம் கிருட்டிணையங்கார் | புல்லைமாலை. |
| பெருங்கருணை, சதாவதானம் முத்தழகரையங்கார் | திருக்கோட்டிக்கலம்பகம். |
| சதாவதானம் முத்துசாமி ஐயங்கார் | குருகைக்கலம்பகம். |
| வேலாயுதக்கவிராயர். | |
| முத்துவீரப்பபிள்ளை. | |
| செவ்வூர் வெண்பாப்புலி. | |

இன்னுஞ் சில புலவர்பரம்பரையினர் கமுதியினும் முதுகுளத்தூரினும், ஊருணிக்கோட்டையினும், மாடம்பூரினும், பிறவிடங்களினும் உள்ளார்கள்.

இவர்களெல்லாம் இச்சேதுபதிகளின் கைவண்மையின் பயனைத்துய்த்துச் சிறந்தவராவர்கள். இச்சேதுபதிகள் போலவே இவ்வரசர்பால் மந்திரக்கிழவராயமர்ந்தாரும் செந்தமிழ்ப் புலவரை இனிதோம்பினர். இந்நாடு முழுதுமுள்ள பல்வேறுவகைப்பட்ட நிலங்களின் தகுதியைப் பல்லாற்றானும் ஆராய்ந்துணர்ந்து அவற்றிற்கேற்ற இறையினைச் செவ்வனம் விதிக்கும் ஒழுகு எனப் பெயர் சிறந்த நிலவிறைக்கணக்கை இந்நாட்டிற்குதவிய முத்திருளப்பபிள்ளையவர்கள் மதுரகவிகளாற் பெரிதும் சிறப்பித்துப் பாடப்பட்டனர். கி.பி. 1770-ம் ஆண்டில்

தஞ்சையரசனைப் போர்தொலைத்துச் சிறந்த தளவாய்-தாமோதரம்பிள்ளையவர்கள் வேள்விக்கோவை கொண்டனர். இவ்வில்லேருழவர் தொல்குடி சிறக்கவந்த சொல்லேருழவரும், இராச்சியதந்திர மகாநிபுணரென அறிஞர் பலரானும் புகழ்ந்து கொண்டாடப்பட்ட பேரறிவாளரும் ஆகிய ஸ்ரீமாந்-பொன்னுச்சாமித்தேவரவர்களது செந்தமிழ் வண்மை நந்தமிழ்நாடெல்லாம் நன்கறிந்ததே.

இவர்கள் நல்லுதவியால் வெளிவந்த செந்தமிழ் நூல்கள், 'திருச்சிற்றம்பலக்கோவையாருரை, திருவள்ளுவருரை, நன்னூல்விருத்தியுரை இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியப் பாயிரவிருத்தி : முதற்சூத்திர விருத்தி, தமிழ்ப்பிரயோகவிவேகவுரை, தருக்கசங்கிரகவுரை, தனிப்பாடற்றிரட்டு, மருத்துநூல் எனப்பலவாம். இப்பிரபு சிகாமணிகளது அருமைச்சோதரராகிய ஸ்ரீமாந்-முத்துராமலிங்கசேதுபதி யவர்களது ஸங்கீதஸாகித்தியவன்மை இந்நாடெல்லாம் நன்று தெரிந்ததேயாம். அவர்களியற்றிய நூல்கள் வள்ளிமணமாலை, முருகரநுபூதி, மும்மொழிமாலை, பிரும்மகைவல்யம், பாலபோதம், பிரபாகரமாலை, காபகப்பிரியா, ரஸிகரஞ்சனம் எனப் பலவாம்.

இத்தகைச்சேதுபதிகள் மரபிற்கோர் திலகம்போல் விளங்கிப் பலகலையறிவானும் பிரசங்கவலியானும் பெருங்கொடையானும் நிலவுபுகழ்பரப்பி, நந்தமிழ்நாடு புலம்பச் சமீபகாலத்துத் தேகவியோகமடைந்த ஸ்ரீமான்-பாஸ்கரசேதுபதி மன்னரது செந்தமிழறிவும் செந்தமிழபிமானமும் யாமெல்லாம் கண்கூடாகக்கண்டனவே. அமிழ்தினுமினிய தமிழ்முழுதோர்ந்து இமிழ்கடல் வரைப்பெலாம் அத்தமிழ்ச்சுவைதெருட்டவிழைந்து செந்தமிழ்ச்சங்கமொன்று சீர்பெறநிறுவி அதன்வளர்ச்சிக்கண்ணே தண்ணுங்கருத்தும் உடையராய்ச் சிறந்தநஞ்செந்தமிழ் வள்ளலாகிய பாலவனத்தம்ஜமீந்தார் ஸ்ரீமான்-பாண்டித்துரைத் தேவரவர்களும் இத்தொல்குடிப்பிறப்பினராவர்.

இவையெலாம் இச்சேதுபதிகட்கும் தமிழிற்குமுள்ள பொருத்தம் விளக்குவனவாம். இத்துணையுங் கூறிய வாற்றான் இச்சேதுபதிகளது தொன்மையியல்பும், செந்தமிழ்வண்மையும் ஒருவாறறியத்தக்கன.

முற்றும்.